# பிரசண்ட விகடன்

"இடுக்கண் வருங்கால் நகுக, அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்."

மலர் 23 | 1955௵ டிசம்பர்௴ 15௳ | இதழ் 18

## உள்ளுறை

**அரசியல்**

பிரதமர் நேருவின் புத்திமதி (தலையங்கம்) ... ... 2
காலச் சக்கரம் ... ... 4

**கவிதை**

அமரன் அம்பிகாபதி ... ... 17
'ரேடியோ' ... ... 35
தமிழாட்சி தோன்றுதா? ... ... 43
குழந்தை ... ... 45

**சிறுகதைகள்**

உயிர்ப் புதையல் ... ... 12
விளையாட்டுத் தோழி ... ... 19
கடமை ... ... 24
அணுக் குண்டு ... ... 27
இரண்டு உயிர்கள் ... ... 32

**நாவல்**

கடிதம் விடு தூது ... ... 7
வீழ்ந்த தாரகை ... ... 36

**பட விமரிசனம்**

வசன் (இந்தி) ... ... 44

**சோதிடம்**

எதிர்கால பலன் ... ... 46

ACL-TVAL
0/901
1191

"விகட"னில் வெளியாகும் கதை, கவிதை, கட்டுரைகளில் காணப்படும் பெயர்களும், சம்பவங்களும் முற்றும் கற்பனையாகும்.

# பிரதமர் நேருவின் புத்திமதி

"நாம் அனைவரும் சுதந்திர இந்தியக் குடியரசின் பிரஜைகளாவோம். நாம் எந்த ராஜ்யத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், இமயத்திலிருந்து குமரி வரை உள்ள இந்தியா மண் முழுவதும் நம் அனைவருக்குமே சொந்தம் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இது இந்திய மக்கள் அனைவருக்குமே பொதுவான பரம்பரை பாத்தியதையுடையதாகும்." நமது பிரதமர் பண்டித நேரு சமீபத்தில் ஆந்திர ராஜ்யத் தலைநகரான கர்நூலில் ஒரு மாபெருங்கூட்டத்தில் பேசுகையில் மேற் குறித்தவிதம் குறிப்பிட்டார். கண்ணினும் இனிய சுதந்திரத்தை நாம் எவ்வளவு கஷ்டப்பட்டு, மகத்தான தியாகங்கள் புரிந்து பெற்றிருக்கிறோம் என்பதை ஞாபகப்படுத்தி அத்தகைய சுதந்திரமும் நாம் அனைவரும் இந்தியர் என்ற ஐக்கிய பாவமும் அற்பக் காரணங்களுக்காகவும், சிறு விஷயங்களுக்காகவும் சீர் குலைந்து விடக்கூடாது என்ற ஆதங்கத்தினால்தான் நமது மாபெருந் தலைவரான நேரு இது போன்று அடிக்கடி வற்புறுத்தி வருகிறார். அதிலும், ராஜ்யப் புனர் அமைப்புக் கமிஷன் யாதாஸ்து வெளிவந்துள்ள பின், பல ராஜ்யங்களிலும் ஏற்பட்டுள்ள கிளர்ச்சிகளைக் கண்டதும் பாரத தேசத்தின் ஒருமைப் பாட்டைப் பற்றி அவர் அடிக்கடி அழுத்தந்திருத்தமாக வற்புறுத்திச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. அதனால்தான் போகும் இடங்களிலெல்லாம் தன் கருத்தை வெளியிடச் சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் இவ்விதம் பேசி வருகிறார்.

"ராஜ்யப் புனர் அமைப்புக் கமிஷன் அறிக்கையைப்பற்றி இப்போது நாடெங்கும் சர்ச்சை நடந்து வருகிறது. அறிக்கையில் சிற்சில அம்சங்களை ஒவ்வொருவரும் விரும்பவில்லை....அதைப் பார்விமெண்டும் அரசாங்கமும் காங்கிரஸ் மகாசபையும் விவாதிக்க வேண்டும். பெரும்பாலான மக்கள் ஒப்புக்கொள்ளக்கூடிய முடிவுக்கு நாம் வரவேண்டும்.

"ஒரு சிறிய பிரதேசம் ஒரு ராஜ்யத்தில் சேர்ந்திருப்பது பற்றியோ அல்லது மற்றொரு ராஜ்யத்தில் சேர வேண்டும் என்பது பற்றியோ சச்சரவு செய்யக் கூடாது............

"அந்த ஊர் வேண்டும், இந்த ஊர் வேண்டும் என்று ராஜ்யங்கள் பேராசைப் படக்கூடாது; ஒரு சிறு பிரதேசத்தின் உரிமையைக்கூடப் பிரமாதப்படுத்தக் கூடாது. நல்லெண்ணத்துடனும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடனும் இந்தப் பிரச்னையை அணுக வேண்டும்.

"ராஜ்யங்களின் புனர் அமைப்பு சம்பந்தமாக, கிளர்ச்சிகள், உண்ணாவிரதங்கள் போன்ற பயமுறுத்தல்களைக் கண்டு காங்கிரஸ் கமிட்டியோ இந்திய சர்க்காரோ பயந்து விடாது."

இவை யனைத்தையும் பொதுவாக இந்தியாவிலுள்ள எல்லா ராஜ்ய மக்களுக்கும் சொன்னதுபோல் சொ[illegible]லும், எல்லா ஊர்களிலும் பாத்திய[illegible] கொண்டாடி வல் வழக்காடும் பேராசை மிக்க ஆந்திர ராஜ்ய அரசியல் தலைவர்களுக்குத்தான் முக்கியமாக அறிவுரை செய்திருக்கிறார் என்று அறியவேண்டும். ஏனென்றால், அவர்கள்தான் சேலம் ஜில்லாவில் ஓசூர் தாலுகா எங்களுக்கு வேண்டும். கோலார் ஜில்லா வேண்டும். சித்தூர் எல்லையோரத்திலுள்ள பல கிராமங்களும் வேண்டும் என்று கேட்டு வீண் கிளர்ச்சி செய்து வருகிறார்கள். தீர்ந்து போய்விட்ட விஷயமான சென்னை மாநகர்மீது இன்னமும் நப்பாசை கொண்டு தென்னேட்டி விசுவநாதம் போன்றவர்கள் பாத்தியதை கொண்டாடிப் பேசி வருகிறார்கள் அல்லவா! அந்த எண்ணம் தவறானது என்பதை, "ஸ்ரீ பொட்டி ஸ்ரீராமுலுவின் மரணத்தினால்தான் ஆந்திர ராஜ்யம் ஏற்பட்டது என்று எண்ணுவது தவறு. ஆந்தி

1-A

DL
൭൧, N32-8V
K3-18
167933

ரர்கள் சென்னை நகரத்தின்மீது தங்களின் பாத்தியதையை விட்ட பிறகே ஆந்திர ராஜ்யம் ஏற்பட்டது. இது தான் உண்மை" என்று சொல்வதன் மூலம் பிரதமர் நேரு தெளிவுபடுத்தி யிருக்கிறார். பிரதமரின் நடு நிலையான இப்பேச்சைக் கேட்ட பின்பேனும், ஆந்திர அரசியல் வாதிகள் நல்லறிவு பெறுவார்கள் என்று நாம் நம்புகிறோம்.

சென்ற மாதத் தொடக்கத்தில் ஆந்திர சர்க்கார் சென்னை சர்க்காருடன் எல்லைப் பகுதிப் பிரச்னை விஷயமாகப் பேசினர். சித்தூர் எல்லைப் பிரச்னை இரு சர்க்காரும் சமரச மனோபாவத்துடன் பேசுவதன் மூலம் சுமுகமாகதீரும் என்று நாம் மட்டுமல்ல; எல்லோருமே எதிர்பார்த்தனர். ஆனால், ஆந்திரர் மும்மொழிப் பிரதேசங்களில் ஒன்றான ஓசூர் தாலூகா தங்கள் ராஜ்யத்துடன் சேரவேண்டும்; ஆதலால், அதைப்பற்றியும் பேசி முடிவு காண வேண்டுமென்று வற்புறுத்தினர். சென்னை சர்க்காரோ தமிழர் அல்லது தெலுங்கர் பாதிக்கு மேலுள்ள கிராமங்கள் விஷயத்தைத் தனியாகவும் எந்த மொழியினரும் பெரும்பான்மை யில்லாத பகுதிகளின் பிரச்னையை வேருக்வும் கவனிப்பதுதான் நல்லது என்று இதமாக எடுத்துக் கூறினர். ஆந்திர சர்க்கார் அதற்கு இசையவில்லை. அப்படி யிருந்தும், சென்னை சர்க்கார் ஆந்திர சர்க்காருக்கு இவ் விஷயத்தைப் புனராலோசனை செய்து கூறுமாறு நவம்பர் மாதக் கடைசி வரை அவகாசங் கொடுத்தனர். ஆயினும், ஆந்திர சர்க்கார் தங்களுடைய பழைய பிடிவாதத்தை விடவில்லை. ஆகவே, வேறு வழியின்றி, சென்னை சர்க்கார் இந்த எல்லைத் தகராறைத் தீர்த்து வைப்பதற்கு எல்லைக் கமிஷன் ஒன்றை நியமிக்குமாறு மத்திய அரசாங்கத்தைக் கேட்க வேண்டியதாய் விட்டது. ஆந்திர அரசியல் வாதிகள் தங்களுக்கு எவ்வகையிலும் உரியதல்லாதனவான பிரதேசங்களையும் கூட அடா பிடித்தன் மாகப் பேசித் தங்களுடையதாக்கி ஆந்திர ராஜ்யத்தின் விஸ்தீரணத்தைப் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்ற ஒரே வெறியில் மூழ்கி யிருக்கிறார்களே யொழிய, எல்லையோரப் பிரச்னைகளை இரு சாராருக்கும் நியாயம் ஏற்படக் கூடிய வகையில் சமரசமாகப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணங் கொள்ளவில்லை.

ஆந்திர அரசியல் வாதிகள் போன்றவர்களை மனத்திற் கொண்டுதான், "தங்கள் பிரதேச நன்மைகளை மட்டும் கவனித்தால் போதாது. நாட்டின் நலன்களையும் மறந்து விடக்கூடாது. நிர்வாக சௌகரியங்களுக் காகத்தான் ராஜ்யங்கள் மாற்றி யமைக்கப் படுகின்றன. மக்களைப் பிரித்து வைப்பதற்கு மொழியைத் திரையாக உபயோகிக்கக் கூடாது" என்றும், "இந்தியாவைத் துண்டாடுவது முக்கியமல்ல. இந்தியா முழுவதுமே முன்னேற வேண்டும் என்பது தான் நமது லட்சியம். யார் எந்த ராஜ்யத்தில் வாழ்ந்தாலும், எல்லோரும் சுபிட்சமாக வாழவேண்டும் எனவும் எல்லோருக்கும் சம சந்தர்ப்பங்கள் கிடைக்க வேண்டும் எனவும் நாங்கள் விரும்புகிறோம்" என்றும் மிகத் தெளிவாக நிலைமையை விளக்கி யிருக்கிறார்.

ராஜ்யப் புனர் அமைப்பு விஷயத்திலும் எல்லைப் பிரச்னை விஷயத்திலும் பிரதமர் நேரு வற்புறுத்திக் கூறி யுள்ள இந்த அடிப்படை உண்மையை மனதிற் கொண்டு நாம் நடப்பது தான் நல்லது. "விருப்ப மில்லாதவர்களின் மீது எதையும் திணிக்க நாம் விரும்பவில்லை. சுமுகமாகப் பிரச்னைகள் தீருவதையே நாம் விரும்புகிறோம். அமைதியாகவும் கண்ணியமாகவும் தெரிவிக்கப்படும் அபிப்பிராயங்களை நாம் வரவேற்போம்" என்று அவர் அரசாங்கத்தின் சார்பிலும் காங்கிரஸ் கமிட்டி சார்பிலும் உறுதி கூறி யிருப்பதை நாம் அனைவருமே கவனித்து ஏற்றுக்கொள்ள வேண்டும்.

# காலச்சக்கரம்

## புயல், வெள்ளம் விளைத்த கோரம்

நமது தமிழகத்தில், தஞ்சை, திருச்சி, மதுரை, இராமநாதபுரம் ஆகிய நான்கு ஜில்லாக்களிலும் இம்மாத முதலில் பெருமழையும் புயலும் ஏற்பட்டுப் படுகோரமான விளைவுகளை உண்டாக்கி யிருக்கின்றன. இதனால் தஞ்சை ஜில்லாவில் உயிர்ச்சேதம் அதிகம். வேதாரண்யம் என்ற சிறு நகரம் வெள்ளத்தில் மூழ்கடிக்கப் பட்டுவிட்டது. கால் நடைகளும் ஆயிரக்கணக்கில் இறந்திருக்கின்றன. பட்டுக்கோட்டை போன்ற இடங்களில் குடிசைகள் மட்டு மல்லாமல் கட்டிடங்களாயுள்ள பலவும் கூடப் பாழாகி விட்டன. பயிர்கள் வெள்ளத்திலும் கடல் நீரிலும் மூழ்கியிருக்கின்றன. வாழைத் தோட்டங்கள், தென்னந் தோப்புகள், வெற்றிலைக் கொடிக் கால்கள் ஏராளமாகச் சேதமாயிருக்கின்றன.

திருச்சியில் புதுக்கோட்டைப் பகுதியில் அதிகச் சேதம். ஆலங்குடி, திருமயம் தாலூகா வெகுவாகப் பாதிக்கப்பட் டிருக்கிறது.

மதுரையில் மேலூர் மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிறது. பெரியாறு நீர்ப்பாசனத் திட்டத்தில் 90 பெரிய குளங்களும், 40 சிறு குளங்களும் உடைப்பெடுத்து விட்டன. இதனால் 4000 பேர் வீடு வாசல் இழந்திருக்கின்றனர். சிலர் இறந்திருக்கின்றனர்.

இராமநாதபுரம் ஜில்லாவில்தான் புயல் கோர தாண்டவமாடி யிருக்கிறது. இராமநாதபுரம், முதுகுளத்தூர், சிவகங்கை, திருவாடானை, திருப்பத்தூர் தாலூகாக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட் டிருக்கின்றன. திருப்பத்தூர், தேவகோட்டை, சிவகங்கை, பரமகுடி, இராமநாதபுரம், முதுகுளத்தூர் ஆகியவை போக்குவரத்து தடைப்பட்டுத் தனித் தீவுகள் போல் இருக்கின்றன. இங்கும் மனிதர்கள், கால் நடைகளின் உயிர் இழப்பு அதிகம். வீடு வாசல், தோப்புத் துரவு மிகுந்த சேதம்.

இவ்விதம் புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு நமது முதல் அமைச்சர் கனம் காமராஜர் அதிகாரிகளுடன் பறந்து சென்று முதல் உதவிகளைச் செய்ய ஏற்பாடு செய்யலானார். விமானங்கள் வாயிலாக உணவு தானியங்கள், உடை முதலியவைகளைச் சாத்தியமான அளவுக்குக் கொடுத்துதவ ஏற்பாடு செய்ததும், அரசாங்க அதிகாரிகளுடன், இராமகிருஷ்ண மடத்துச் சாமியார்கள், தொண்டர்கள் புயலால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இயன்ற உதவிகள் அனைத்தும் செய்து வருவதும் ஓரளவு ஆறுதலை நமக்கு அளிக்கிறது. சென்னை ஷெரீப் நகர மக்கள் கூட்டமொன்றைக் கூட்டி நிவாரண நிதி திரட்ட முன்வந்திருப்பதும் 'தினமணி' காரியாலயத்தாரும், கலைஞர்களும், மற்றும் மாணவர் முதலியோரும் நிதி திரட்டி யுதவ முன் வந்திருப்பதும் பாராட்டவேண்டிய தாகும். பிரதமர் பண்டித நேரு தேசிய நிவாரண நிதியிலிருந்து ஒன்றரை லட்ச ரூபாய் வழங்கி யிருக்கிறார். மேலும் உதவப் போவதாகவும் கூறி யிருக்கிறார். முதல் அமைச்சர் காமராஜர் நிவாரண வேலையில் முனைந்து நிற்பதால், எதிர்பாராத இடங்களிலிருந்தெல்லாம் கூட உதவிகள் கிடைத்து வருகின்றன. ஆனால் இவ்விதம் உதவி நிதிகள் அனைவரும் சேர்ந்து திரட்டுவது பெரிய காரியமல்ல. அவை எந்த மக்களுடைய கஷ்ட நிவாரணத்துக்காக திரட்டப் படுகின்றனவோ அவர்களுக்கே போய்ச்சேர்ந்து உண்டி, உடை, உறையுள் ஆகியவசதிகளை உடனடியாக ஏற்படுத்திக் கொடுக்க உதவும்படியாக ஒழுங்காகப் பார்த்துக் கொள்ள வேண்டும். இவ்விஷயத்தில் அரசாங்க அதிகாரிகளும் இராமகிருஷ்ண மடத்துச் சாமியார்கள் முதலிய பொது நலத் தொண்டர்களும் கண்ணுங் கருத்துமாய்—கண்டிப்பாய்- இருந்து கவனித்துக் கொள்ள வேண்டும்.

இவ்விதம் பொதுநல ஸ்தாபனங்களும், பொறுப்புடையவர்களும் திரட்டும் நிதிகளுக்கு மனிதாபிமானமும் இரக்க நெஞ்சமும் உள்ள எல்லோரும் தங்களால் இயன்ற பொருளுதவியை வழங்குமாறும் நாம் கேட்டுக் கொள்ளுகிறோம்.

## பொறுப்புணர்ச்சியற்ற எம். பி. கள்

சுதந்திரமும் சுக சௌகரியங்களும் தங்கள் வாழ்க்கையில் நிலவ வேண்டு மென்று எல்லோருமே ஆசைப்படுகிறார்கள். அவற்றைப் பெறப் படாத பாடெல்லாம் படுகிறார்கள்

அதே சமயத்தில் இவைகளைப் பெற்று அனுபவிப்பதற்கு அடிப்படையாக, பொறுப்புணர்ச்சியும் பேருழைப்பும் இன்றியமையாது இருக்கவேண்டும் என்பதைப் பெரும்பாலார் உணர்வதில்லை. எவ்விதச் சிரமமுமின்றித் தங்களுக்கு வேண்டியன வெல்லாம் எளிதில் கிடைத்துவிட வேண்டும் என்று எதிர் பார்க்கின்றனர். இவ்விதமான சோம்பல் உணர்ச்சி—அசட்டுத்தனம்—சாதாரண மக்களிடம் மட்டும் நிலவியிருப்பதாக யாரும் எண்ணிவிடக் கூடாது; பெரிய பதவியிலுள்ளவர்கள், மெத்தப் படித்தவர்களிடையே கூட இருந்து வருகிறது. சமீபத்தில் இந்தியப் பாராளுமன்றத்தில் சர்க்கார் சார்பில் கொண்டுவரப்பட்ட அரசியல் சட்டத்தின் மூன்றுவது ஷரத்தைத் திருத்துவதுபற்றிப் பரிசிலிக்கக் கோரிய ஒரு பிரேரணை தோல்வியடைந்த செய்தியையும், அதுபற்றிப் பிரதமர் நேரு, 'இது மிகவும் கவலை தரும் விஷயம்' என்று வருத்தந் தெரிவித்ததோடு, காங்கிரஸ் பார்லிமெண்டு உறுப்பினர்களுக்கு அனுப்பியிருக்கும் சுற்றறிக்கையையும் கவனித்திருப்பவர்களுக்குப் பார்லிமெண்டு உறுப்பினர்கள், மந்திரிகளுக்குக் கூட எவ்வளவு தூரம் பொறுப்புணர்ச்சியோ கடமையுணர்ச்சியோ இல்லாமல் போய்விட்டது என்பதை அறிந்து கொள்ள முடியும். லோக சபை யங்கத்தினர் பலர் டில்லியில் இருந்திருக்கின்றனர்; ஏன்? சபைக்குப் போய் ஆஜர் புத்தகத்தில் கையெழுத்தும் செய்திருக்கின்றனர். ஆனால், முக்கியமாக இருக்கவேண்டிய சமயமான ஓட்டெடுப்பின்போது அவர்கள் இல்லாமல் வெளியேசுற்றிக் கொண்டிருந்திருக்கின்றனர். இதுபோன்ற சம்பவம் இது தான் முதல் தடவையல்ல; இதற்கு முன் பல தடவை இது போன்றே பெரும்பாலான அங்கத்தினர்கள் இல்லாமல் திருமணத் திருத்த மசோதா போன்ற முக்கியமான மசோதாக்கள், பிரேரணைகள் நிறைவேறியிருக்கின்றன. பல சமயங்களில் 'கோரம்'கூட இருப்பதில்லை. இவ்விதமான நிலை பார்லிமெண்டில் மட்டும் இருக்கிறது என்று நேயர்கள் எண்ண வேண்டியதில்லை. ராஜ்யச் சட்டசபைகளிலும் இருந்து வருகிறது. நம் சென்னை ராஜ்யச் சட்ட சபையிலும் நாம் பார்த்து வருகிறோமல்லவா! இவர்கள் இப்படிப் பொறுப்புணர்ச்சியில்லாமல், உல்லாசமாக ஊர்வலம் வந்து கேளி விலாசங்களில் ஆழ்ந்திருப்பதற்கா நாம் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுத்து அனுப்பினோம் என்று நாட்டு மக்கள் வருந்தாமலிருப்பார்களா? என்பதைப் பொறுப்புணர்ச்சியில்லாமல் திரிந்து கொண்டிருக்கும் அங்கத்தினர்கள் அறிய வேண்டும். இந்த அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய அந்தந்தத் தொகுதியிலிருக்கும் வாக்காளர்கள், சபைக்கூட்டம் முடிந்து இவர்கள் ஊர் திரும்பியதும், டில்லிக்குப் போய் என்ன செய்தீர்கள்? முக்கியமான மசோதா, பிரேரணைகள் சர்ச்சை செய்யப்படும் போது, நிறைவேற்றப்படும் போது கூட இல்லாமல் எங்கு போனீர்கள்? பார்லிமெண்டுக்கு—லோக சபைக்குப் போய் நீங்கள் சாதித்த சாதனைதான் என்ன? என்று கேட்க வேண்டும். இப்படிக் கேட்டு அவர்களுடைய கடமை யுணர்ச்சியை நினைவு படுத்த வேண்டும். தாங்கள் கேட்டும் அலட்சியமாயிருக்கும் அங்கத்தினர்களை ராஜிநாமாச் செய்யச் சொல்ல வேண்டும். இதுவன்றி, எந்தெந்தக் கட்சி சார்பில் இந்த அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுச் சென்றிருக்கிறார்களோ அந்தந்தக் கட்சியின் தலைவர்களும் இவர்களைக் கண்டிக்க வேண்டும். இனி மேலாயினும் ஒழுங்காக நடந்து கொள்ளத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். காங்கிரஸ் அங்கத்தினர்கள் மீது கட்சித்தலைவர் என்ற முறையில் பண்டித நேரு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வார் என்றே நாம் நம்புகிறோம்.

## கலைவாணருக்குப் பொன்னாடை

சென்ற மாத மத்தியில் தென்னிந்திய நடிகர் சங்கத்தால், 'நாடக உலகத் தந்தை' எனப் புகழப்பட்டு வந்த சங்கர தாஸ் சுவாமிகள் நினைவு விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடினார்கள். அப்பெரியாருடைய திருவுருவப் படத்தையும் அவருடைய நாடகத் தொண்டை நன்கறிந்த ஒரு பெரியவரைக் கொண்டு திறந்து வைக்கப்பட்டது. இவ்விழாவிலேயே கலைவாணர் திரு என். எஸ். கிருஷ்ணன் அவர்களுக்கும் நாடகக் கலை, சினிமாக் கலை வளர்ச்சிக்காக வேலை செய்து வரும் அவருடைய நெடுங்காலச் சேவையைப் பாராட்டும் வகையில், பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டது. நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்த முதலியார். தம் கரத்தால், நகைச்சுவை மன்னருக்குப் பொன்னாடை போர்த்தினார். பிரசித்திபெற்ற கலைஞர்களும், ரா. பி. சேதுப் பிள்ளை, ம. பொ. சி. ஜீவானந்தம் போன்ற பேரறிஞர்களும் அவரைப் பலபடப் பாராட்டினர். நடிகவேள் எம். ஆர். ராதா கலைவாணருக்கு 25 பொற்காசுகள் பரிசளித்தார். இவ்விரு பெரு விழாக்களும் நடத்தவேண்டுமென்று விரும்பி வேலை செய்த திரு டி. கே. ஷண்முகம் சங்கரதாஸ் படத்தையும், பொன்னாடையையும் வழங்கினார். அதுவன்றி நடிகர்கள் சார்பில், 4,500 ரூபாயையும் கலைவாணருக்குக் கொடுத்தார். இவ்வளவு சிறப்பாக நடந்த இவ்விழாவுக்கு. அதுவும் தென்னிந்திய நடிகர் சங்கம் நடத்தும் இவ்விழாவுக்கு லலிதா, பத்மினி, எம். ஜி,

இராமச்சந்திரன் போன்ற ஒரு சிலர் தவிர, திக்குறிச்சிபோன்ற அசல் மலையாளி நடிகர்களும் ஆந்திர நடிக நடிகையரும் கன்னட நடிகர்களும் வராதது குறிப்பிடத்தக்கது. இதற்கு அடுத்த நாளே, ஆந்திர நடிகர்கள் ஒன்றுகூடி, கண்ணாம்பா என்ற ஆந்திர நடிகையைக் கௌரவித்திருக்கின்றனர். இதற்கு நம் தமிழ் நடிக நடிகையர் பலர் சென்றிருக்கின்றனர். கலைவாணர் என் எஸ். கிருஷ்ணனுக்கு மலையாள நடிகர்களும் ஆந்திர நடிகர்களும் எத்தனையோ வகைகளில் கடமைப் பட்டவர்கள். அப்படியிருந்தும், அவர்கள் அவரைக் கௌரவிக்கும் விழாவுக்கு வரவில்லை. அவருக்காக வராவிட்டாலும் தமிழ்ப்பட முதலாளிகளால் ஆதரிக்கப்பட்டுத் தமிழ்ப் படங்களில் நடித்து பேரும் பொருளும் பெற்று வருகிறோமே என்ற நன்றி யுணர்ச்சிக்காக வாயினும் மலையாள, ஆந்திர, கன்னட நடிக, நடிகையர் மேற்குறித்த விழாக்களில் கலந்து கொண்டிருக்க வேண்டாமா? அதுதான் இல்லை. தென்னிந்திய நடிகர் சங்கம் என்ற பெயர் வைத்துக் கொண்டு தென்னிந்தியாவிலுள்ள எல்லா மொழி பேசும் நடிகர்களுக்கும் இடங் கொடுத்துக் கொண்டிருக்கும் ஸ்தாபனத்துக்காயினும் மலையாளி, தெலுங்கு, கன்னட நடிகர்கள் மதிப்புக் கொடுக்க வேண்டாமா? பிற மொழி நடிகர்கள் இவ்வளவு அலட்சியஞ் செய்தும் கூட, தென்னிந்திய நடிகர்சங்கத்தில் பெரும்பான்மையாக வுள்ள தமிழ் நடிகர்கள் இவ்வாண்டு நிர்வாக சபைத் தேர்தலில், திரு. சி. நாகையா என்ற தெலுங்கு நடிகரைச் சங்கத் தலைவராக ஏகமனதுடன் தேர்ந்தெடுத்திருக்கின்றனர். இது கண்டேனும், தமிழ் நடிகர்களின் பெருந்தன்மையான இப்பரந்த மனோபாவத்தைப் பார்த்தேனும் ஆந்திர, மலையாளி நடிகர்கள் மனம் மாறுவார்களா? வரிப் புலியின் கொடுங் குணத்தை மாற்றினாலும் மாற்றலாம் இவர்களுடைய துவேஷ புத்தியை, மொழி வெறியை மாற்ற முடியும் என்று நாம் நினைக்கவில்லை.

## பாரத் பைன் ஆர்ட்ஸ் பொன்விழா

சென்னைமா நகரில், சங்கீத சபைகள் நாளுக்கு நாள் பெருகி வருவதை, கலை ஆர்வங் கொண்டோர் அறிவர். 'பாரத் பைன் ஆர்ட்ஸ்' சமீபத்தில் ஏற்பட்ட சபைகளில் ஒன்று. ஆனால், இது சாதுரியமாக ஒரு அரும் பெருங் காரியத்தைச் சாதித்து மிகச் சுருங்கிய காலத்திலேயே பெரும் புகழைச் சம்பாதித்துக் கொண்டது. இச் சபை நிர்வாகிகள் அசகாய சூரர்கள் என்று இதிலிருந்தே தெரிகிறது. அப்படி அவர்கள் செய்த காரியந்தான் என்ன? என்று அறிய நேயர்கள் ஆவல் கொள்வார்கள். டி. கே. எஸ். சகோதரர்கள் சமீபத்தில் அரு. இராமநாதன் எழுதிய இராஜ ராஜ சோழன் என்ற நாடகத்தைப் பலவிதமான ஜோடனைகளுடனும் கவர்ச்சிகளுடனும் சிறப்பாக நடத்தி வருகிறார்கள் அல்லவா! அந்த நாடகம் அரங்கேறிய ஆறு மாதத்துக்குள் ஸ்பெஷல் நாடகங்களாகவே 50 நாடகங்கள் நடந்து விட்டது. அந்த ஐம்பதாவது பொன் விழா நாடகத்தைத் தாங்கள் நடத்திப் பேர் பெற வேண்டுமென்று கருதி அதற்கு ஏற்பாடு செய்து விட்டார்கள். இப்படி அப்பொன் விழா நாடகத்தை நடத்தும் பெருமையோடு, இது போன்ற சிறந்த நாடகங்களை நடத்தி முப்பது வருஷ காலமாக, நாடகக் கலைக்குச் சேவை செய்து வரும் முத்தமிழ் கலா வித்வ ரத்ன டி. கே. எஸ். சகோதரர்களுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கும் பெருமையையும் மற்றவர்களுக்கு முன் பெற்றுவிட வேண்டுமென்று ஏற்பாடு செய்தார்கள். நீதிபதி என். சோமசுந்தரம் அவர்கள் தான் டி. கே. ஷண்முகத்துக்கும் பகவதிக்கும் பொன்னாடை போர்த்தினர். மற்ற நடிக, நடிகையருக்குப் பொற்சரிகை மாலைகள் போட்டுக் கௌரவித்தனர். யார் யாருக்கோ எல்லாம் ஏதேதோ கௌரவங்கள் நடக்கும் இக் காலத்தில், தமிழ் நாட்டின் தலை சிறந்த நடிகர்களான டி. கே. எஸ். சகோதரர்களுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கும் பெரும் பணியில் ஈடுபட்ட பாரத் பைன் ஆர்ட்ஸ் நிர்வாகிகளுக்கு—முக்கியமாக அதன் தலைவர் திருப்புகழ் மணி டி. எம். கிருஷ்ணசாமி ஐயருக்கும், செயலாளர் கலியாணசுந்தரத்துக்கும் நம் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.





# கடிதம் விடு தூது

ஜீவா

ஒரு நாளேனும்—என்றுயினும் ஒரு நாள்—உன்னை நேருக்கு நேர் பார்க்க முடியும்; நேரில் சந்தித்துப் பேசும் வாய்ப்பு கிடைக்கும் என்று நான் எண்ணியதில்லை; ஆதலால் நீயாக என்னைப் பார்த்துப் பேச விரும்பிக் கூப்பிட்டதும், எனக்குத் தியக்கம் ஏற்பட்டது. உன்னுடனிருக்கும் சங்கரம் பிள்ளை என்னைப் பார்த்துப் பேச விரும்புகிருர் எனக் கூறி என் நண்பன் என்னை வற்புறுத்தி அழைத்தபோது, உன்னையும் பார்க்க வாய்ப்புக் கிடைக்கலாம் என்ற ஒரு நம்பிக்கையால்தான் அவனுடன் உங்கள் மாளிகைக்கு வந்தேன். ஆனல், சங்கரம் பிள்ளை என்னுடன் குழையக் குழையப் பேசினுலும் உன்னைப் பார்க்கவிடாமலே பக்குவமாக விடை கொடுத்து வழியனுப்பியதும் என்பால் கொஞ்ச நஞ்சமிருந்த நப்பாசையும் நீங்கியது. இவ்விதம் என் நெஞ்சத்தில் எழுந்த ஆசை அற்றுப் போனது என்ற நிலையில், நீ பார்க்கக் கூப்பிடுகிருய் என்றது என்னைத் திகைப்பில் ஆழ்த்தியது வியப்பில்லை. அத்துடன், நீ நலிந்து மெலிந்து முகம் வேறுபட்டு, படுத்த படுக்கையாய்க் கிடந்தது எனக்குத் திடுக்காட்டத்தை உண்டு பண்ணியது.

உன் எதிரில் உன்மத்தன்போல் நிற்கக்கூடாது என்ற உணர்வு எழவும், சில விநாடிகளில் என்னைச் சுதாரித்துக் கொள்ளலானேன். அதற்கப்புறம்தான் உன்னை நோக்கி, நான் பதில் வணக்கஞ் செலுத்தினேன். இதற்குள் நீ சங்கரம் பிள்ளைக்குச் சைகை காட்டி, ஒரு நாற்காலியை உன் கட்டில் அருகில் போடச் செய்தாய். இக்குறிப்பை என் கண்கள் கவனிக்கத் தவறவில்லை.

“உட்காருங்கள், நிற்கிறீர்களே!....” என்று நீ குயிலினும் இனிய குரலில் கூறிய உபசார மொழி என் உச்சியைக் குளிர்வித்தது. அதற்கு மேலும் தயங்குவது நாகரிகமாய் இராது எனக் கருதி நான் உன் எதிரில் அமர்ந்தேன். ஆனலும், உன்னை நேருக்கு நேர் பார்க்க என் கண்கள் கூசின. நான் எதிர்ச்சுவரில் மேலே மாட்டப்பட்டிருந்த சாரதா தேவியின் திருவுருவப் படத்தைப் பார்ப்பதுபோல் பாவனை செய்யலானேன். உள்ளுக்குள் மட்டும், எனக்குக் கிடைத்துள்ள அருமையான சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொண்டு, உன் மதி வத

னத்தை நன்கு பார்த்து மகிழவேண்டும்; உன்னுடன் சரளமாகப் பேசிப் பழக வேண்டும் என்ற ஆவல் எழுந்து துள்ளிக்கொண்டிருந்தது. ஆதலால், கடைக் கண்ணால் உன்னைப் பார்க்க முயன்றேன்.

நோயால் செந்தாமரை போன்ற உன்முகம் வெளிறியிருந்தாலும், சோபை மட்டும் சிறிதும் மாறாம லிருந்தது. செவ்வரி படர்ந்த உன் சேல் விழிகள் என்னை ஆராய்ந்து கொண்டிருந்ததைக் கண்டு நான் துணுக்குற்றேன். நான் எப்படிப் பட்டவன் என்பதை நீ எடைபோட்டுப் பார்க்கிறாயோ என்னவோ என்று ஆகுலப்பட்டேன். நான் உன்னுடைய சங்கீதக் கச்சேரிகளைப்பற்றி விமர்சனஞ் செய்து வரும் விமர்சனத்தைப் பார்த்து என்மீது ஏதாயினும் தப்பபிப்பிராயம் கொண் டிருக்கிறாயோ! அதனால்தான் என்னை எப்படிப் பேசி மட்டந் தட்டியனுப்பலாம் என்று எண்ணி அப்படிப் பார்க்கிறாயோ என்று நான் கருதி அஞ்சலானேன். ஆதலால், நான் உன் முன்னரிருந்து எவ்வளவு சீக்கிரமாக நீங்கிவிட வேண்டுமோ அவ்வளவு விரைவில் போய் விடவேண்டுமென்று நான் தீர்மானிக்கலானேன். ஆகவே, நான் உன் உடல் நிலையைப்பற்றி மட்டும் இரண்டொரு வார்த்தைகளைப் பேசிவிட்டு விடை பெற்றுக்கொள்ளவேண்டுமென்று எண்ணி, "உங்களுக்கு உடம்புக்கு என்ன?" எனக்கேட்கத் தொடங்கினேன்.



நான் இவ்விதம் கேட்கும் அதே சமயத்தில், நீ என்னை நோக்கி, "உங்களைப் பார்க்க வேண்டும்; பேச வேண்டும் என எங்களுக்கு ரொம்ப நாளாக ஆவல். அது இன்றுதான் நிறைவேறி

யது............'' என்று உபசார மொழி கூறிக் கொண்டே சிறிது தூரத்தில் பய பக்தியுடன் நின்று கொண்டிருந்த சங்கரம் பிள்ளையைக் குறிப்பாகப் பார்த்து, "மாதவனைக் கூப்பிட்டு........'' என்று ஆரம்பித்தாய்.

சங்கரம் பிள்ளை அசட்டுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டே, "இவ்வளவு நேரம் வரை நம் வீட்டுக்கு வந்தவர்களைத் தக்க படி உபசரிக்காமல், சும்மாவா பேசிக் கொண் டிருந்திருப்பேன். இவர்கள் வந் ததுமே காபி பலகாரங்களைச் சாப்பிடச் சொல்லிவிட்டுத்தான், பேசத் தொடங்கி னேன், அம்மா!'' என்று தாம் சாதுரிய மாக மகத்தான காரிய மொன்றைச் சாதித்து விட்டது போன்ற பெருமை தொனிக்கத் தெரிவித்தார்.

நானும் என் மன அதிர்ச்சியை மறைக்க நகைப்பை வலுவில் வருவித்துக் கொண்டு, "ஆமாம்; ஆமாம். பிள்ளை வாள் எங்களை லேசில் விடவில்லை. நாங் கள் சிற்றுண்டி சாப்பிட்டு விட்டு வந் தோம் என்று சொல்லியும் கேட்காமல், நிறைய பலகாரத்தைச் சாப்பிடவைத்து விட்டார்....................'' என்று சொல்லி, "எனக்கும் உங்களைப் பார்க்க வேண்டு மென்று நெடு நாளாக ஆசைதான். ஆனாலும்............'' என்று இழுத்தவாறு சொல்ல முயன்றேன். ஆனால் இவ் வார்த்தைகள் தொண்டைக்குள்ளாகவே அடங்கிவிட்டதே யொழிய, வெளியே கேட்கவில்லை.

"திடீரென்று உங்களுக்கு என்ன உடம்பு?......போன வாரங்கூடக் கச்சேரி செய்தீர்களே !............'' என்று பரிவு தோன்ற ஒருவிதமாகக் கேள்வி கேட்டு வைத்தேன்.

நீ புன்முறுவல் செய்தவாறு, "லேசாக நிமோனியா சுரம். அவ்வளவு தான்........'' என்றாய்.

"சாதாரணமாக இருந்தாலும் ஜாக் கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள்.



ஒய்வு நிரம்ப எடுத்துக்கொள்ள வேண்டும்..........." என்று உன்னை முன்னிலைப் படுத்திப் பேசினாலும் சங்கரம் பிள்ளையையும் பார்த்துச் சொன்னேன்.

"அதிருக்கட்டும். நீங்கள் எவ்வளவு காலமாகச் சங்கீத விமர்சனம் எழுதி வருகிறீர்கள்? எல்லாச் சங்கீத வித்வான்களுடைய கச்சேரிகளையும் கேட்பதுண்டா? அல்லது........" என்று வாக்கியத்தை முடிக்காமலே இடையில் நிறுத்தி நீ என் முகத்தைப் பார்த்தாய்.

நீ என்ன நோக்கத்தோடு இவ்விதம் கேள்வி கேட்கிறாய் என்பதை என்னால், உடனடியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆதலால், "நன்றாயிருந்தால் யாருடைய கச்சேரியையும் போய்க் கேட்பது என் வழக்கம். பிரபலமானவர்களுடைய சங்கீதத்தை மட்டும் தான் கேட்பது என்று வைத்துக் கொள்ளுவதில்லை. இளமையிலிருந்தே இன்னிசையிலே எனக்கு ஈடுபாடு உண்டு. இசைவாணர்கள் பாடுவதைக் கேட்பது மட்டுமில்லை; அவர்களைப் போலப் பாடுவதிலும் எனக்குப் பிரியம் அதிகம். இதயத்தை அள்ளும்படியாக இனிய மெட்டுகளிலே யாராயினும் பாடல்கள் பாடுவதைக் கேட்டால் உடனே, அந்த மெட்டுகளை வைத்துச் சுயமாகச் சில இசைப்பாடல்களைப் பாடுவதில் எனக்குக் கட்டுக்கடங்கா ஆர்வம் உண்டு...."

"நீங்கள் பாட்டுக் கட்டுவது கூட உண்டா? அப்படியானால்............?"

"ஆத்மார்த்தமாகத்தான். என்மனச் சாந்திக்கு. இதைத் தொழிலாக வைத்துக் கொள்வதில்லை. இந்தச் சங்கீத விமரிசனம் செய்வது கூடப் பொழுது போக்குக் காகவேயொழிய, என் அபிப்பிராயங்களைத் தெரிவித்து, சங்கீத உலகத்தை உத்தாரணஞ் செய்துவிட வேண்டுமென்ற நோக்கமல்ல. அதுகூட, 'கலைமணி' பத்திரிகை ஆசிரியர் எனக்கு நண்பராதலால், அவருடைய வற்புறுத்தலின் மீது கவின் கலைகளைப்பற்றிய விமர்சனங்களை எழுதி வருகிறேன். அதுவும் தொடர்ந்து அல்ல. எனக்கு அவகாசம் ஏற்படும் போதுதான். அவருடன் நான் கலை இலக்கியங்களின் வளர்ச்சி குறித்துக் கடுமையாக விவாதஞ் செய்வதுண்டு. என்னுடைய மூர்த்தனியமான வாதத்தைச் சமாளிக்க முடியாமல், அவர் 'உங்களுடைய அபிப்பிராயங்களையெல்லாம் அவ்வப்போது எழுதிக்கொடுங்களேன். நான் என் பத்திரிகையில் பிரசுரித்து வருகிறேன். இது பலருக்குப் பயனுடையதாகவும் இருக்கும்' என்று அடிக்கடி வற்புறுத்திக் கூறி வந்ததால், அவகாசம் வாய்க்கும்போது எழுதி வருகிறேன். அவ்வளவுதான்........."

'கலைமணி பத்திரிகாசிரியர் நல்ல காரியஞ் செய்தார். இல்லையானால், என்னைப்போன்ற சங்கீதக்காரர்களுக்கு, கலைஞர்களுக்கு உங்களுடைய அருமையான யோசனைகளும் அபிப்பிராயங்களும் கிடைக்காமல் அல்லவா போயிருக்கும்? எங்கள் போன்றவர்களுடைய நன்மையை உத்தேசித்தாயினும், நீங்கள் சங்கீதம், நடனம், நாடகங்கள்பற்றி விடாமல் வியாசங்கள் எழுதி வர வேண்டும். இல்லையா? என்ன சொல்லுகிறீர்கள், ஐயா!" என்று எனக்குக் கூறிக் கடைசியாகச் சங்கரம் பிள்ளையையும் அபிப்பிராயம் கேட்கலானாய்.

அவர், "ஆமாம். ஆமாம். ஐயா கட்டாயம் எழுத வேண்டியதுதான்" என்று தாளம் போட்டார்.

உன்னுடைய கனிவான கருத்துரையைக் கேட்டு என் உள்ளத்தில் ஆனந்தமும் அச்சமும் ஒருங்கே கொண்ட இரண்டு விதமான உணர்ச்சிகள் ஏற்பட்டன. என்னுடைய அப்போதைய மன உணர்ச்சி வார்த்தைகளாக வெளிப்பட்டன.

"இசையுலகில் இணையற்ற பேரும் பெரும் புகழும் பெற்று விளங்கும் நீங்கள் உண்மையாகவே இதைச் சொல்வதானால், நான் கலைக் கட்டுரைகள், விமர்சனங்களைக் கூடுமானவரை தொடர்ந்து எழுதி வருவேன்...............என்னுடைய அபிப்பிராயங்கள் உங்கள் போன்றவர்களால் இவ்வளவுதூரம் வரவேற்கப்படும் எனச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. ............"

"லளித கலைகள் நல்லவிதமாக வளர வேண்டுமென்ற ஆர்வ மொன்றையே மனத்துட் கொண்டு உண்மையான உணர்ச்சியுடன் வெளியிடப்படும் கருத்துக்களுக்கு எப்போதுமே எங்குமே மதிப்புண்டு. விருப்பு வெறுப்புகளுக்கும் தயை தாட்சணியத்துக்கும் மட்டும் உள்ளத்தில் லவலேசமும் இடங் கொடுக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இதை வெகு பேர் உணர்வதில்லை" என்று என்னைப் பார்த்து உணர்ச்சியோடு சொல்லி வந்த நீ, "உண்மையாகச் சொல்லுகிறேன். நான் அகம்பாவத்துடன் பேசுவதாக நீங்கள் எண்ணக் கூடாது. நான் பொதுவாகப் பத்திரிகைகளில் வரும் அபிப்பிராயங்களைப் பார்ப்பதில்லை. 'இசைத் தேனீ' என்ற பெயருடன் இசை, நடனக் கலைகளில் அனுபவமுள்ள அறிஞரொருவர், தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகளில் எழுதி வருவதை மட்டும் எப்போதேனும் பார்ப்பதுண்டு. நீங்கள் 'கலைமணியில்' எழுதி வரும் விமர்சனங்களைப்பற்றி எனக்கு மிக வேண்டிய சிநேகிதைகள் சிலர், என்னுடைய முன்னேற்றத்தை உண்மையாக விரும்பிப் பாடுபடும் பெரியவர்கள் சிலர் வெகுவாகப் பாராட்டிச் சொன்ன பின்னர் தான், நான் பிள்ளையவர்களிடம் தெரிவித்து, உங்கள் விமர்சனக் கட்டுரைகள் வெளிவந்த பத்திரிகைகளை வாங்கிவரச் சொல்லிப் பார்த்தேன். உங்களுடைய கருத்தில் தெளிவிருந்தது; நேர்மை காணப்பட்டது. விஷய ஞானம் புலப்பட்டது. அத்துடன் நீங்கள் விமர்சனம் எழுதும் முறையும் என்னை வெகுவாகக் கவர்ந்தது. இதையெல்லாம் பார்த்த பின்னர்தான் உங்களைப் பார்க்க வேண்டும்; பேச வேண்டும் என்று என் மனத்தில் ஆசை பிறந்தது. ஆனால் உங்களைப் பார்த்துப் பேசவேண்டுமென்று யாரிடமும் சொல்லவில்லை. ஆனால், என் உள்ளக் குறிப்பை யுணர்ந்தோ அல்லது தாமாகவோ பிள்ளையவர்கள் உங்களை எங்கள் இல்லத்துக்கு அழைத்திருக்கிறார். எல்லாம் திருமுருகன் அருள் விளையாடல் என்றுதான் நான் எண்ணுகின்றேன்" என்று உண்மை யுணர்ச்சி வெளிப்பட உருக்கமாகச் சொன்னாய்.

உன்னுடைய இப் பேச்சுகளைக் கேட்டு என் நெஞ்சம் அடைந்த பரவசத்தை என்னென்று சொல்வேன், கோகிலா! கோடி கோடியாகப் பொற் குவியலை என் முன் குவித்தாலும் கூட நான் இவ்வளவு ஆனந்தம் அடைந்திருக்கமாட்டேன்.

நீ மீண்டும் பேசத் தொடங்கினாய். "உங்களுக்கு ஒன்று மட்டும் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் இதுவரை கையாண்டு வந்துள்ள நேர்மையான விமர்சன முறையை மட்டும் எக்காரணங் கொண்டும் மாற்றிக் கொள்ளக் கூடாது. தயை, தாட்சணியத்துக்கோ, செல்வாக்கு சிநேகம் முதலிய சூழ்நிலைக்கோ உள்ளாகக்கூடாது. உதாரணமாக, நாங்கள் உங்களைக் கூப்பிட்டு அழைத்துப் பேசினோம்; உபசரித்தோம் என்ற முக தாட்சணியத்துக்காக, நாளை நான் செய்யும் சங்கீதக் கச்சேரிகளைப் பற்றி நடுநிலை தவறி எழுதக் கூடாது. உண்மையாக உள்ள குற்றங் குறைகளை இதற்குமுன் சொல்லி வந்தது போலவே, இனியும் சொல்லி வரவேண்டும்....இதை எதற்காக இவ்வளவுதூரம் வற்புறுத்திக் கூறுகிறேன் என்றால், சங்கரம்பிள்ளை போன்றவர்கள் லௌகிக முறையை அநுசரித்துக் கையாளும் சாகஸங்களில், சாதுரியப் பேச்சுக்களில் மயங்கிப் போய் சிலர் நேர்மை தவறி விடுவதுண்டு என்பதை நான் பலமுறை பார்த்திருக்கிறேன்" என்று கடைசியாகச் சங்கரம் பிள்ளை பக்கம் பார்த்தவாறே சொன்னாய்.

இது கேட்டுச் சங்கரம் பிள்ளையின் சிரம் தானகவே கவிழ்ந்து விட்டது. நான் உன் நேர்மை யுள்ளத்தை வியக்கலானேன். சில விநாடிகள் அங்கு மௌனம் நிலவியது.

முடிவாக நீ என்னைப் பார்த்துக் கேட்டுக்கொண்ட ஒரு விஷயம் என்னைப் பேராச்சரியத்தில் ஆழ்த்தியது.

(தொடரும்.)

# உயிர்ப் புதையல்

சோலை - இருசன்

★

"இன்பத்திலே துன்பமும், துன்பத்திலே இன்பமும் தான் மனிதர்களாகிய நமக்கு இயற்கை எழுதிய மாற்ற முடியாத விதி. காலதேவியின் கருணையால் எல்லாம் சரியாகி விடும் என்கிற தன்னம்பிக்கையில் தான் மனித வாழ்வு சுற்றிச் சுழல்கிறது!" ஆம்.

கிராமப் பள்ளிகளின் தணிகை அதிகாரியாக அன்று நான் சிரங்கப்பட்டி என்னும் கிராமத்திற்குப் போக நேர்ந்தது. சிரங்கப்பட்டி சிறிய ஊர்தான்; என்றாலும் அழகிய கிராமம். ஏலகிரி மலைத்தொடர் அந்த ஊரைச் சுற்றிலும் அமைந்து அழகை அள்ளித் தெளித்துக் கொண்டிருந்தது.

எனது சுற்று பிரயாணத் திட்டப்படி அன்று மாலை 3-55 மணிக்கெல்லாம் நான் சிரங்கப்பட்டியை அடைந்து விட்டேன். இரவு வேளைகளில் அந்தந்தக் கிராமப்பள்ளிகளில் தான் நாங்கள் தங்கவேண்டும். வழக்கப்படி சிரங்கப்பட்டியிலும் பள்ளிக்கூடத்திற்கே நேராகப் போய்விட்டேன்.

சைக்கிளைக் கொண்டு போய் வெளியே நிறுத்திவிட்டு பள்ளியினுள் நுழைந்தேன். பள்ளி இன்னும் விடவில்லை. மாணவ மாணவிகள் எல்லோரும் எழுந்து ஒரே குரலில் "வணக்கம் ஐயா" என்று நீட்டி முழக்கி அவர்களுக்கே உரியதான மரியாதையும் வரவேற்பும் அளித்தார்கள்.

"வணக்கம்!" என்றொரு தனிக்குரல் என்னை மீண்டும் திரும்பிப் பார்க்கச் செய்தது. அவள் என்னைப் பார்த்ததினால் ஏற்பட்ட அதிர்ச்சியைச் சமாளிக்க முயன்று கொண்டிருந்தாள்.

மிகப் பழகிய நினைவுக் குரலாக இருக்கவே நான் மீண்டும் பார்த்தேன். ஆம், அது என் உயிர்க்குரல் தான். அவள் நெற்றியில் வியர்வை துளித்துக் கொண்டிருந்தது. சேலைத் தலைப்பை எடுத்து ஒற்றிக் கொண்டாள்.

"எவ்வளவு பெரிய மாற்றம்? கடவுள் காட்டும் இந்த வேடிக்கைக்குத்தான் என்ன அர்த்தம்? என்று எண்ணி வியந்துக் கொண்டிருந்தேன். அவள் கூப்பிய கைகளுடன் என்னிடம் வந்து கொண்டிருந்தாள். பதில் வணக்கம் சொல்லக்கூட என் உள்ளம் ஒத்துழைக்கவில்லை. நான் ஒரு கோழை. அவள் எதிரில் நிற்கக்கூட எனக்கே வெட்கமாகி விட்டது. வியப்பும், அதிர்ச்சியும் என்னைச் சுற்றி வேலி யிட்டுவிட்டது.

இவள் எப்படி......இங்கே......அதுவும் ஆசிரியையாக...? என்னைப் பழையபடி ஏற்றுக் கொள்வாளா? மாட்டாள்...அந்த வணக்கம் கூட தன் மேலதிகாரிக்குத் தரும் கட்டாய மரியாதை என்னும் முறையில் தான் இருந்தது.

"உறுதி யற்ற உள்ளம் கொண்டவர்களை—கோழைகளை மனித இனத்திலிருந்தே மாய்த்துவிட நான் முழுதும் முனைந்து விட்டேன்" என்பதுபோல வண்மையான போக்கு. நிமிர்ந்த நடை; ஒளிவீசும் கண்கள்; மெல்லிய நிலை; துல்லிய ஆடை; ஹீம், என் இதயம் துள்ளிக் குதித்தது, உயிர்ப்பு தையல் கண்டது போல.

ஆனாலும், நான் கோழை என்பதை மட்டும் அந்தக் கடிதம் நினைவூட்டிக்கொண்டேயிருக்கிறது.

நான் பேசாமல் மூலையிலிருந்த விசுப் பலகையின்மேல் உட்காரப் போனேன். அதற்குள் ஒரு மாணவனைவிட்டு நாற்காலியை எடுத்து போடச் செய்தாள். போய் அமர்ந்தேன்.

கடுமையான வெய்யிலில் வந்தது; களைப்புத் தீர கைக்குட்டையால் முகத்தை ஒத்திக் கொண்டு ஜாடையாக அவளைப் பார்த்தேன். ஒளி யிழந்த அந்த விழிகள் என்னை ஒருமுறை பார்த்து விட்டு, கண்ணீரைக் கக்கிக்கொண்டிருந்தது. அதற்குமேல் நான் அவளைப் பார்க்கவில்லை. எதிரே மாட்டி யிருந்த பூகோளப்படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவள் தோற்றமும் செயலும் என் மனதை உலுக்கியது.

நான்கு மணிக்குப் பள்ளிக்கூடம் விடப்பட்டது. மாணவ மாணவிகள் எல்லோரும் வெளியேறி விட்டார்கள். ஆனால் என் யமுனா மட்டும்......ஊஹீம் அவள் யாருடைய மனைவியோ? காலால் தரையைக் கோடு கிழித்துக் கொண்டிருந்தாள். நான் அவள் கழுத்தைப் பார்த்தேன்.

அங்கே கிளியின் கழுத்து மாலையைப் போல ஒரு சரம் முத்துமாலை மட்டும்தான் தவழ்ந்துக் கொண்டிருந்தது.

நான் பார்த்ததை குறிப்பறிந்து கொண்டவள்போல "இன்னும் இல்லை!" என்றாள்.

நறுக்கென்று என் தலையில் குட்டுவது போலிருந்தது. நான் தலை கவிழ்ந்து கொண்டேன்.

சிறிது நேரத்தில் ஒரு சிறுவன் காபியைக் கொண்டு வந்து மேஜைமேல் வைத்தான்.

"யார் அனுப்பினது?" என்றேன்.

"உச்சரம்மா வீட்டிலிருந்து சார்!" என்றான்.

"நான் வருவது உனக்கு எப்படித் தெரியும், யமுனு?" என்றேன் சற்று தைரிய மடைந்தவனாய்த் தான் கேட்டேன்.

"தெரியும். உங்கள் சுற்றுப் பிரயாணப் பட்டியலை நேற்று முன் தினம்தான் பார்த்தேன். கையெழுத்திலிருந்து நீங்கள் தான் என்று தெரிந்து கொண்டேன்" என்று எங்கேயோ பார்த்துக்கொண்டே பதில் சொன்னாள்.

எதிரே இருந்த காபியில் ஆவி பறந்து கொண்டிருந்தது. குடிக்கலாமா, வேண்டாமா, என்று யோசித்துக் கொண்டிருந்தேன்.

"காபி ஆறிப் போகிறதே? சாப்பிடுங்கள்! என்றாள்.

"இல்லை இப்போது தான் டவுனில் சாப்பிட்டேன்!" என்றேன்.

"பரவாயில்லை. நீங்கள் "காபி பித்தர்" என்பதை என்னிடம் கூட மறைத்து விட வேண்டாம்!" ஒரு ஒயிலாகப் பார்த்து 'கலுக்' கென்று சிரித்தாள்.

அந்தச் சிரிப்புக்குதான் என்ன பொருள்? உரிமைச் சிரிப்பா? போலிச் சிரிப்பா? ஹீம், எந்தச் சிரிப்போ ஒரு சிரிப்பு. மெய்யன்பைக் காட்டுகிறாள் என்று நானாக நினைத்துக் கொண்டு காபியைக் குடித்து முடித்தேன்.

அப்போது புது அழகைப் பெற்று பூரிப்புடன் திகழ்ந்தாள். மொத்தத்தில் புதிய மகிழ்ச்சி பெற்றேன்.

காபி தம்ளரை கீழே வைக்கப் பார்த்தேன் "இப்படிக் கொடுங்கள்!" என்று தம்ளரை வாங்கக் கையை நீட்டினாள். என் கையோடு அவள் கையின் உராசல்–புதிய ஸ்பரிசம், அதிர்ச்சியால் தம்ளர் தரையில் விழுந்து புரண்டது. ஆனாலும் அது உடையவில்லை. ஆம், அது வெங்கலத் தம்ளர்.

"இப்படித்தான் நீங்கள் என்னையும்..." என்றாள். சம்பந்தா சம்பந்தமற்ற இந்த வார்த்தைகள் ஆயிரம் அர்த்தம் கொண்டது. கீழே விழுந்த தம்ளரை எடுத்துக்கொண்டு நிமிர்ந்தாள். முகத்தை மூடிக்கொண்டு விம்மினாள்.

"யமுனு!" என்றேன்.

எதையோ என்னிடம் எதிர்பார்ப்பதைப் போல என்னைப் பார்த்தாள்.

"அழாதே, யமுனு!" என்பதோடு நிறுத்திக் கொண்டேன், வார்த்தையை.

அவள் எதிர்பார்த்த "அந்த ஒன்று" என்னிடம் கிடைக்கவில்லை போலும்.

முதலில் அவளைத்தேடி அலைந்து கொண்டிருந்தேன். அவளைக் கண்டதும் களிப்படைந்தேன். நீண்ட நாட்களாக தேடிக் கொண்டிருந்த மகிழ்வைப் பெற்றேன். ஆயினும் அவள் உள்ளத்தைத் தெரிந்து கொள்வதற்கு முன் என்ன பேசுவது? பேசாதிருந்தேன்.

"எழுந்திரிங்க, போகலாம்!" உரிமை அழைப்புத்தான்.

"எங்கே போவது?" தெரியாதவன் போல கேட்டேன்.

"வீட்டுக்கு!" அன்பை மீண்டும் அறிவித்தாள்.

அந்தக் கலை நிறைந்த முகத்திலே சிறிது கவலை படர்ந்தது. நான் வருவேனா, மாட்டேனா, என்று.

"இல்லை யமுனு, இன்று நான் பள்ளிக்கூடத்தில் தான் தங்குவதாக ஆபீஸுக்குக் கடிதம் எழுதி யிருக்கிறேன். குமாஸ்தாவும் பியூனும், இங்கேதான் வந்து விடுவார்கள் அதனுல்—"

"நீங்களாகச் சொல்லுவீர்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனுல்—"

"எது யமுனு?"

"உங்க மனைவி சௌக்கியமா?" அடக்கி அடக்கிப் பார்த்தும் முடியாமல் வெடித்த வினு இவை. இந்த ஒரு கேள்வியில் தான் பாரத நாட்டுப் பெண்களின் வாழ்க்கை அமைக்கப் படவேண்டும். ஆகையால் தான் பண்பாடு தெரிந்த பெண்கள் அதை முக்கியமாக் கொள்ளுகிறார்கள்.

"மனைவியா? அப்படி என்று ஒருத்தி எனக்கு இல்லவே இல்லை யமுனு! என் உள்ளம் சேரனின் அறியாசனம். அதில் அந்த ஒருவரைத் தவிர வேறு யாரும் அமர முடியாது!" நான் உனக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னும் அதைத்தான் சொன்னேன். இன்றும் அதைத்தான் சொல்லுகிறேன். ஆனுல்—"

திரும்பிப் பார்ப்பதற்குள் சித்திரதித்லே அசைந்தாடிச் செல்வதுபோல் பள்ளி வாயிற் படியைத் தாண்டி சென்று கொண்டிருந்தாள். நான் நடந்து வந்த பாதையை என் சிந்தனை இதயம் திரும்பிப் பார்த்தது.

* * *

அப்போது நாங்கள் கிருஷ்ணகிரியில் இருந்தோம். என் அப்பாவுக்குத் தபால் ஆபீஸில் வேலை

எங்கள் வீட்டுக்கு நான்காவது வீடுதான் வேணு செட்டியார் வீடு. சில்லரைக்கடை. செட்டியார் என்றால் அவரை எல்லோருக்குமே தெரியும். அப்போதுதான் பக்கத்துக் கிராமத்தில் கணக்கர் வேலையையும் மேற்கொண்டிருந்தார்.

யமுனா, செட்டியாரின் ஒரே புதல்வி. கள்ள மறியாத அன்புள்ளங் கொண்டவள். பருவக்குமரி.

பள்ளியிலே என் தங்கை வசந்தாவுடன் படித்துக் கொண்டிருந்தாள். இருவரும் உயிர்த் தோழிகள். தினமும் பள்ளிக்குப் போகும் போது யமுனா, எங்கள் வீட்டுக்கு வந்து என் தங்கையை அழைத்துச் செல்வாள். இது வழக்கம்.

வழக்கம் போல் என் தங்கையை அழைத்துக் கொண்டு போகும்போது என் உள்ளத்தையும் 'அந்த' ஒரு பார்வையில் அழைத்துக் கொண்டு போய்விடுவாள். இவ்வளவும் ஊமை நாடகம்.

அன்று ஞாயிற்றுக்கிழமை நான் என் அறையில் உட்கார்ந்து கொண்டு ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தேன். யமுனா வந்து வசந்தாவுடன் வம்பளந்து கொண்டிருந்தாள்.

நான் யமுனாவைப் பார்ப்பது இதுதான் முதல் தடவை யல்ல. இருந்தாலும் பார்க்கத் தூண்டியது என் ரசிக்கும் உள்ளம். எழுந்து அப்படியே கூடத்துப் பக்கம் போனேன். வசந்தா குதித்துக் கொண்டோடி வந்து என் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டுபோய் தன் சினேகிதியின் முன் நிறுத்திக்கொண்டு,

"இவர்தான் நான் முன்பு சொன்னேனே, என் அண்ணா. கலைக்கழகத்தின் சார்பில் இலங்கைக்குச் சுற்றுப் பயணம் போகப் போகிறார். இந்த ஊர் கழகத்தின் காரியதரிசி ஹீ... அப்புறம்... வந்து... இன்னும்—" என்றெல்லாம் அடுக்கிக்கொண்டே போனாள் என் தங்கை.

"குறும்புக்காரி!" என்று வசந்தாவின் தாடையில் தட்டப் போனேன்.

"வணக்கம்!" என்று கூறி, அழகாகக் கை கூப்பியபடி, தன் முல்லைப் பற்கள் தெரியக் குறுநகை புரிந்தாள். அப்போது என் இதயத்தில் தென்றலின் குளிர்ச்சி படர்ந்து படிந்தது. பதில் வணக்கம் சொல்லி முடிப்பதற்குள்.

"உங்களைப்பற்றி இவள் என்னிடம் நிறையச் சொல்லி இருக்கிறாள். அன்றைக்கு எங்கள் பள்ளிக் கூடத்தில் நடந்த பேச்சுப் போட்டிக் கூட்டத்திற்குக் கூட நான் வந்திருந்தேன்" என்றாள் பெருமையுடன்.

கலைந்து அலைபாயும் கேசம் ஒன்றிரண்டு காற்றில் திரிந்து அலை மோதியது. அந்த நிலை அவளைக் காவியத்தின் சுவையேற்றி அழகு படுத்தியது.

நான் அப்படிப் பார்ப்பது அவளுக்குப் பிடிக்கவில்லை போலும். "சரி, வசந்தா, அம்மா தேடுவாங்க, நான்போய் வருகிறேன்."

அவள் போய்விட்டாள். அந்தப் பின்னழகைக் கண்டு ரசித்துக்கொண்டிருந்தேன் நான்.

யமுனாவின் மீது எனக்கு அர்த்த மில்லாத ஆழ்ந்த அன்பு ஏற்பட்டு விட்டது. அது, அவளின் அகன்ற கலையுள்ளமும், தெளிவான புதுமையும், பண்பும் ஏற்படுத்திய பாசமோ?

திடீரென என் அப்பாவை கவிபுரத்திற்கு மாற்றி விட்டார்கள். இந்தச் செய்தி என் இதயத்தில் பட்டு அவள் இதயத்தில் மோதி எதிரொலித்தது.

அன்று மாலை கலைக்கழகத்தில் எனக்கு பிரிவுபசாரக் கூட்டம் நடத்தினார்கள்.

தேனீர் விருந்துக்குப் பின் கூட்டம். எனக்கு மாலை அணிவித்தனர். பெண்கள் பகுதியில் என் கண்கள் அவளைத் தேடியது. அதோ அவளும் இருக்கிறாள். மாலையுடன் இருந்த என்னைப் பார்த்து பெருமூச்சு விடுகிறாள். ஒருகணம், அந்தக் கண்களைப் பார்த்தேன். ஒரு மின்வெட்டுப் பளிச்சிட்டது.

நண்பர்களிடம் விடை பெற்றுக்கொண்டு வீடு திரும்பினேன். வரும் வழியில் யமுனா என்னைப் பார்த்தாள்" "அடிக்கடி கடிதம் எழுதுங்கள்!" என்று மட்டும் கேட்டுக்கொண்டாள் 'சரி' என்றேன். நண்பர்கள் சிலர் கூடவே இருந்ததால் அதற்குமேல் அவளிடம் பேச முடியவில்லை.

அவள் என்னமோ பேசத்தான் துடித்தாள். நான்தான் கோழையாகி விட்டேன்.

* * *

கவிபுரம் செழிப்பான நகர். சோழநாட்டுப்பகுதி வேறு எப்படி இருக்கும்? அமைதியின் நிலைக்களம் தான் கவிபுரம். கலைத்தாய் அங்கேதான் நிலைத்து நின்றுவிட்டாள் போலும். வசந்தபுரத்து வேல் முருகன் ஆலயத்திற்குச் சென்று விட்டால்...காலத்தின் நினைவு மாய்ந்தே போகும்.

அன்பான நண்பர்கள் பண்பான இடம்; இது கூட என் மனதுக்கு அமைதி யளிக்க முடியவில்லை. காரணம்?

யமுனாவுக்கு கடிதம் எழுதலாம் என்று என் எண்ணத்தைப் பிரதிபலித்து ஒரு கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில் என் நெஞ்சமே துடித்தது. ஆனாலும், எப்படி அனுப்புவது? எந்த விலாசத்திற்கு? அவள் வீட்டு விலாசத்திற்கு அனுப்பினால் அது விபரீதமாக முடிந்தாலும் முடியலாம். என்கிற நினைப்பில் என் கோழைத்தனம் குறுக்கிட்டது. அச்சப்பட்டேன்.

அவளிடமிருந்து மட்டும் அடிக்கடி கடிதம் வந்து கொண்டிருந்தது. கலைக் கழகம்தான் யாருக்கும் என் விலாசத்தைத் தெரியபடுத்திக் கொண்டிருந்தது. எனது தமிழ்ப்பணியைப்

பாராட்டி எழுதுவாள் ஒரு கடிதத்தில்; காதலை யும், பிரிவும் ஏக்கமும் பற்றியும் பெருமூச்சை இழைத்து எழுதி யிருப்பாள் மற்றுமொரு கடிதத்தில்.

காலதேவி புன் சிரிப்போடு பறந்து கொண்டே யிருந்தாள். இதற்கிடையில் ஒரு மாதம் இலங்கை சுற்றுப் பிரயாணத்தையும் முடித்துக்கொண்டு வந்துவிட்டேன்.

யமுனவின் கடிதங்கள் அத்தனையும் 'காதல் காவியம்' என்று தொகுத்து வெளி யிடலாம். அத்தனை சுவையான சம்பவங்கள்.

அவள் தன் புகைப்படத்தை அனுப்பி யிருந்தாள். எனது படம் ஒன்றும் கேட்டு எழுதி யிருந்தாள். எப்படி அனுப்புவது? பேசா திருந்துவிட்டேன்.

ஒவ்வொரு நாளும் பூதாகரமாக வளர்ந்து நின்று என்னைப் பயமுறுத்திக் கொண்டிருந் தது. யமுனு கடிதங்களைக் காதலுக்கு, கண் ணீரைக் காணிக்கையாக்கி எழுதுகிருள்.

யாரோ பெண் கேட்க வந்தார்களாம். ஜாதகம்...பெயர் பொருத்தம் எல்லாம் மிகவும் சரியாக இருந்ததாம். பழைய உறவாம். வேறென்ன...அழுது வடிக்கிருளாம் யமுனு. பாவம்...நேரில் போய்ப் பார்க்கலாம் என்றும் நினைவு எழாமல் போகவில்லை. ஆனல்...

கடைசியாக ஒரு கடிதம்...கடிதமல்ல... என்னைச் சுட்டெரிக்கும் 'தீப்பந்தம்' வந்தது.

இந்தக் கடிதத்தைக் கண்டதும் நான் மறு நாளே புறப்பட்டுக் கிருஷ்ணகிரிக்குச் சென் றேன். அப்போதும் கூட நேராக அவள் வீட்டுக்குப்போய் பேசத் துணிவு இல்லை. நாங் கள் குடி யிருந்த வீட்டுக்குப் பக்கத்து வீட்டுப் பாலாமணியை வீதியில் சந்தித்துக் கேட் டேன்.

"யமுனு நேற்றைய இரவோடு இரவாக எங்கேயோ ஓடி விட்டாள் என்கிற விஷ யத்தை அறிந்தேன். மேலும் விசாரிக்க மன மில்லாமல் திரும்பி விட்டேன்.

நான் அங்கு போகும்போது, கதிரவன் இருந்தான், உலகுக்கே ஒளி யூட்டிக்கொண்டு. ஆனல் திரும்பும்போது உலகம் இருண்டு கிடந் தது; என் உள்ளம் கூடத்தான்......

இன்று இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டது. அவளைப் பார்த்து.

இப்போது தான் நான் கிராமப் பள்ளி களின் தனிக்கை அதிகாரியாக நியமிக்கப் பட்டேன். இந்தப் புதிய வேலையின் கவனிப் பில் சிறிது அவளை மறந்திருந்தேன். ஆனல்... கடவுளின் கருணையை யாரால் மாற்ற முடியும்?

* * *

"இருட்டி விட்டது. அதைக் கூட கவ னிக்காமல் இருட்டிலேயே உட்கார்ந்து விட்டீர் களே. விளக்குக்கொண்டு வரவா?"

"கொண்டுவா, யமுனு. இருட்டைப் போக்க விளக்கு வேண்டியதுதானே? அதோ பார் புது நிலா!" என்று சன்னல் வழியாகக் காட்டினேன்.

"இங்கே மட்டும் என்னவாம்......அது சரி...சாப்பாடு தயாராகி விட்டது. எழுந்து வாங்க சாப்பிடலாம்!" என்று அழைத்து விட்டு முன்னே நடந்தாள்.

நானும் எழுந்து நடந்தேன். பள்ளிக் கடுத்த.வீதியில் முதல் வீட்டின் ஒரு பகுதியைத் தனக்கு வீடு என அமர்த்திக்கொண்டிருந் தாள்,

"நீங்கள் ஏன் எனக்குக் கடிதமே எழுத வில்லை?" என்று கேட்டாள்.

"நான்தான் 'கோழை' என்று முடிவு கட்டி விட்டாயே. நான் எந்த விலாசத்திற்கு எழுத முடியும்? என்று திருப்பிக் கேட்டேன்."

"அந்த முடிவு நான் கட்டியதில்லை. நீங்க ளாகவே தேடிக் கொண்டதுதான். ஹீம் நான் எங்கேபோனல் எக்கேடு கெட்டால் உங்க ளுக்கு என்ன?"

"உன் கடிதத்தைக் கண்டதும், மறுநாளே நான் வந்தேன். அதற்குள் நீதான் எங்கேயோ போய் விட்டதாக அறிந்தேன். நான் எங் கெல்லாம் தேடினேன் என்பது உனக் கெப் படித் தெரியும் யமுனு? நான் சற்று வருத்த மாகவே சொன்னேன் அதற்குள்,

"நடந்து விட்டதை மறந்து என்னை மன் னித்து விடுங்கள்!" என்று அழ மாட்டாத குறையாகப் பேசினள்.

"இங்கே எப்படி வேலைக்கு வந்தே? உன் அப்பா, அம்மா எல்லாம் எங்கே?"

"அதைத்தான் நான் கடைசிக் கடிதத்தில் எழுதி யிருந்தேனே காலராவில் இறந்து விட் டார்கள் என்று. நான் மட்டும் ஏனே வாழ் கிறேன், அர்த்த மில்லாமல். வேலூருக்குச் சென்றிருந்தேன், என் தோழி ஒருத்தியைப் பார்க்க, அவள்தான் யாரிடமோ சொல்லி இந்த வேலையை ஏற்பாடு செய்தாள்!"

"வேலையின் ஜோரில், என்னை மறந்து விட்டாய். அப்படித்தானே?"

"ஆமாம் அப்படித்தான் சொல்லுவீர் கள்."

இவ்வுரையாடலுடன் சாப்பாடு முடிந்தது.

"சாப்பாடு எப்படி இருக்கிறது? என்ருள்.

"தமிழமுதுபோல! என்றேன்.

"அப்படி யென்ருல்?

"உன்னைப்போல! என்றேன் சிரித்தாள்".

அன்று இரவு பள்ளியில் படுத்துக் கொண்டேன். தூங்காமல் தூங்கிய அந்தப் புதிய இரவு கழிந்தது. மறுநாள் காலை என்னை யாரோ தட்டி எழுப்பினர்கள். நான் தூங்கும் போது யாராவது என்னை எழுப்பினல் எனக்குக் கோபம் வந்துவிடும். ஆனல் எழுப்பியது வேறு யாருமல்ல. யமுனதான், கையில் காபியுடன் நின்றுகொண்டிருந்தாள்.

அதிகாலையில் குளித்துவிட்டு ஈரத்தலை கேசத்தைத் தளர்த்தியாக முடிந்துக்கொண்டு காலைத் தேவதையைப்போல......

"காபி சாப்பிட்டுவிட்டு எழுந்து வாங்க!" என்ருள். உத்திரவுப்படி காபி சாப்பிட்டுவிட்டு அவள் வீட்டுக்குப்போய் குளித்து டிபன் சாப்பிட்டு விட்டுவந்து பள்ளியின் தணிக்கை வேலைகளைக் கவனித்தேன். வேலை முடிந்தது.

ரராஜிநாமாவை எழுதிக் கையெழுத்து போடச் சொல்லி யமுனவிடம் கொடுத்தேன்.

'இதற்கென்ன அர்த்தம்?' என்று கேட்பதைப்போல என்னைப் பார்த்தாள்.

"இரண்டு பேர் வேலை செய்வது, தேவைக்குமேல் சம்பாதிப்பது, இப்படியெல்லாம் நாட்டுக்கும், சர்க்காருக்கும் துரோகம் செய்யலாமா?" என்று சொல்லிவிட்டு பியூனை அனுப்பி வண்டி கொண்டு வந்து யமுனவின் சாமான்களை ஏற்றச் சொன்னேன்.

"என்னங்க இது?" என்ருள்.

"ஒன்றுமில்லை யமுன, எனது கோழைத் தனத்தைக் கொளுத்தி விட்டேன். போய் வண்டியிலேறு" என்றேன்.

எல்லோரிடமும் சொல்லிக்கொண்டு வந்து வண்டியில் ஏறினள். உயிர்ப்புதையலைப் பெற்றதாக மனம் நிறைவு கண்டது. யமுனவின் கண்களிலே புது ஒளி வீசிக்கொண்டிருந்தது. இனம் புரியாத உயிர்ப்பு அவள் முக மண்டலத்தில் இயங்கிக்கொண்டிருந்தது.

காலதேவியின் கருணையைத்தான் என்னென்பது?

---

## சங்கு

[ஆசிரியர்கள்: சங்கு கணேசன், என். இராதாகிருஷ்ணன், 22-A, நரசிங்கபுரம் தெரு, மவுண்ட் ரோடு, சென்னை. தனிப்பிரதி விலை அணு ஒன்று.]

சுதந்திரப் போராட்ட காலத்தில், 'சுதந்திர சங்கு' 'காந்தி' ஆகிய காலணு பத்திரிகைகள் செய்த சேவையை, தேசப் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் மறந்திருக்க மாட்டார்கள். பாமர மக்களுக்கும் தேச பக்தியையும் சுதந்திரப் போராட்ட உணர்ச்சியையும் அவை உண்டுபண்ணின என்ருல் மிகையாகாது. 'சங்கு கணேசன்'தான் சுதந்திர சங்கு பத்திரிகையை நடத்தியவர். காந்தியடிகள் ஆசிரியராயிருந்த 'யங் இந்தியா' வையும் 'ஹரிஜனை'யும் சிலகாலம் நடத்தியவர் நண்பர் கணேசன். இத் தேசப் பணியில் அவர் தம் சொத்து சுதந்திரத்தை யெல்லாம் இழந்திருக்கிருர். சிறைவாசம், தியாகம் பல செய்திருக்கிருர். காங்கிரஸை விட்டு நீங்கிய பிறகும், காந்தியின் நிர்மாண வேலையைச் செய்யத் தவறியவரல்லர். 'சுதந்திர கிராமத்'தை ஏற்படுத்தக் கிராமங்களுக்குப் போய் பல ஆண்டுகள் அமைதியாக வேலை செய்து வந்தார். அப்பேர்ப்பட்டவர் இன்று நண்பர் இராதா கிருஷ்ணன் துணையுடன் 'சங்கு' பத்திரிகையை நடத்தத் தொடங்கி யிருக்கிருர். இவர்களின் இந் நன்முயற்சி வெற்றி பெறுவதாக.

## ராஜ்ய லட்சுமி

[ஆசிரியர்கள்: ஜி. தஞ்சம்மாள், வே. ரங்கராஜன், திருச்சி சேவா சங்கம், 2, வில்லியம்ஸ் ரோடு கண்டோன்மெண்ட், திருச்சி. தனிப்பிரதி விலை அணு 4.]

சென்னை ராஜ்ய சமூக நல ஆலோசனை போர்டார் இம்மாதப் பத்திரிகையை வெளியிட முன் வந்திருக்கின்றனர். ராஜ்யத்திலுள்ள பல்வேறு பொது நல ஸ்தாபனங்களை ஒன்று சேர்ப்பதிலும், அவற்றை விரிவுபடுத்துவதிலும் பணியாற்றி வரும் சமூக நல ஆலோசனை போர்டார் எண் வகை லட்சுமிகளுடைய அருளும் பரிபூரணமாக நாட்டு மக்களுக்குக் கிடைக்க இப்பத்திரிகை வாயிலாகப் பாடுபடுவார்கள் என நாம் நம்புகிருேம்.


## "பிரசண்ட விகடன்"

(மாத மிருமுறை ஹாஸ்யப் பத்திரிகை)

### சந்தா விபரம்

| | |
|---|---|
| வருஷ சந்தா | ரூ. 4—8—0 |
| ஆறுமாத சந்தா | ரூ. 2—4—0 |

தனிப் பிரதி விலை அணு 3.

### வெளி நாடுகளுக்கு

| | |
|---|---|
| வருஷ சந்தா | ரூ. 5—8—0 |
| ஆறுமாத சந்தா | ரூ. 3—0—0 |

"தெய்வமே! ஏன் என்னை அரசன் மகளாய்ப் பிறப்பித்தாய்?" என அமராவதி நொந்து கொள்வதும், கடைசியாக, அவள், "தந்தையே! காதலரைத் தீர்த்தால் என் ஆவி தீர்ந்து ஒழியும்" என முறையிட்டுக்கொண்டே காவலருடன் போவதும், கல்லும் கரையும் இக் காட்சியைக் கண்டு மக்கள் மனம் உருகுவதும், "நீதியா? அல்லது நிலைகேடா? ஓதுக யாது என்று?" கேட்ட ஒட்டனுக்கு மன்னன், "நீதிக்கே வாழ்வு அளிக்க நிச்சயித்தேன்" என்று கூறிக் கொலைஞரைக் கூப்பிடுவதும், புகழேந்தி 'வருவது உணர்ந்து தண்டனை வழங்குக' எனக் கடைசி முறையாக எச்சரிப்பதும், அரசன், 'பாவலனின் நாவு பலவாறு பேசலாம். ஆனால், காவலனின் நாவு கடமை யுணர்வுள்ளது' என்று அரசன் அறைந்து, என்னை இழிவு படுத்திய இளைஞனை இக்கணமே கொண்டு சென்று கொல்லுங்கள்' எனக் கொலைஞர்களுக்குக் கட்டளையிடுவதும், அம்பிகாபதி, 'அரசனே! உன் மகளுடன் காதல் உறவுற்றபோதே, மரணலோகம் திறந்துவிட்டது என்று தான் தீர்மானித்தேன். காலன் காதல் உருவிலே எனக்கு வந்தான். ஆதலால் சாவுக்குப் பயப்படவில்லை' என்று கூறுவதும், காண்போர் மனமிரங்க, கொலைஞர் அவனைக் கொலைக்களத்துக்கு அழைத்துச் செல்வதும் அம்பிகாபதி சாவுக்கு அஞ்சாமல் சென்றாலும், புகழேந்தி மனம் பொருமுவதும், கம்பர் மகன், 'எனக்காக இரங்காதீர்கள்; எந்தைக்கு மட்டும் ஆறுதல் கூறுங்கள்' என்பதும், இவ்விருவருடைய துயர மொழிகளைக் கேட்டு கொலைஞர் மனம் மாறி அம்பிகாபதியைக் கொல்லாமல் விட்டுப் போவதும், இச் செய்தி கேட்டு மன்னன் கொலைக்களம் ஓடிவருவதும் ஆகியவற்றை இப்பகுதியில் மிகவும் உணர்ச்சி ததும்ப எழுதி யிருக்கிறார்.

# அமரன் அம்பிகாபதி

சே.ர.குமாரசாமி

## 7. பெருந்துயர்க் காதை

வையமதில் பெற்றடைந்த வாழ்வின் நிலையாமை
மெய்யதனைக் கண்டுணர்ந்த மேலோரைப்போல் அந்தக்
காளை மடியக் கலங்காது நின்றிருந்தான்!
வேளை நெருங்கிவந்து விட்டதே என்றுதுயர்
பொங்கி யெழவில்லை! 'போக அமுதளித்த
மங்கை யவள்தன் மதுவார்க்கும் கூரியகண்
வேல்செய்த கேட்டை விடவோ தனக்கெதிரில்
மால்செய்து வந்து மருட்டும் கொலைவாள்கள்
தீமை செயும்'என்ற திட்பம்தான் போலுமது!
ஊமையாய் மக்கள் உரையின்றி நின்றார்கள்!
வாட்கு இடையினிலே வாய்ந்தான் இளங்கவிஞன்!
நாட்கடந்த தீந்தமிழை நாடி இசைத்திருந்த
செம்மல் கொலையுண்டு செத்து மடிவதுவோ?
அம்ம! பெருந்துயரம்! யாரே பொறுத்திருப்பார்?
கற்ற புகழேந்தி கண்ணீர் உகுத்தயர்ந்தார்
உற்ற துயரால் உளம்நெகிழ்ந்து வாடியதைக்
கண்ட இளவல் கழறினன்: ".அண்ணலே!
அண்டத்து வாழ்வு அழிவுடைய தேயன்றோ?

காரிகையைக் கூடிக் கலந்துவிட்ட அஞ்ஞான்றே
பேரிகையைக் கொட்டிப் பெருங்காலன் என்னெதிரே
வந்து கலந்துவிட்டான்! வாடுவதால் யாதுபயன்?
நொந்து துயரில் நுழைந்தஎன் எந்தைக்கு
ஆறுதல் கூறி அருளுங்கள்! என் வணக்கம்
கூறுதல் செய்துவிட்டு கூற்றன் வலைக்குள்ளே
வீழ்கின்றேன்!" என்றான் விரிந்த தமிழ்க்கடலில்
ஆழ்கின்ற தீந்தமிழ் ஐயன், "அருந்தமிழைப்
பாடித் திரிந்துவக்கும் பாலகனே! காலனைத்
தேடித் திரிகின்றான்! தீஞ்சொற் கவியரசன்
பெற்ற நலஞ்சான்ற பிள்ளைக்கோ இச்சாவு
உற்றது? நீண்ட உலகம் முழுவதுமே
துன்பதிலே மூழ்காதோ? தூற்றியிச் செம்பியனை
மன்பதை எல்லாமே மாபழிபே சாதோ?
என்ன விதியோ? எதுவருமோ இச்சோழ
மன்னனுக்குக் காணேன்? மதிகெட்டுப் போய்விட்டான்
கம்பன் மகனைக் கடிந்தெழுந்து வாள்கொண்டு
பம்பி முடிக்கப் பயமின்றி செல்லுகின்றான்!
நாட்டுக்கும் மக்கள் நலத்துக்கும் தன்புகழ்க்கும்
ஏட்டுக்கும் தீமைதர எய்துகின்றான் சோழர்
குலத்தெழுந்து வந்த குலோத்துங்கன்! பாட்டு
நலத்தெழுந்த தீந்தமிழ் நம்பியே! நீயே
இறப்பினைக் கண்டு இதங்கலங் காதே!
பிறப்பினைக் கண்ட பிறகு உயிரனைத்தும்
மீண்டிந்தச் சாவினை மேவாமற் போவதில்லை!
ஆண்டிந்த நாடெல்லாம் ஆட்சி புரிந்து
நிலமெல்லாம் வென்றாலும் நீண்டு வளைக்கும்
புலமெல்லாம் வென்றாலும் பூரித்து வந்தடையும்
சாவினை வெல்லுகின்ற சக்தியினைப் பெற்றாரோ?
நீவினை யொன்றிற்கு நின்று உயிர்கொடுத்துக்
காத்துப் புகழுற்றாய்! காளையே நீயுனது
மூத்த கடமை முடித்துவிட்டு ஓடுகின்றாய்!
அஞ்சாதே கொள்க அமைதி!" எனவுரைத்து
வெஞ்சாவை நோக்கி விரையும்அம்பி காபதிக்கு
நல்லுறுதி சொன்னார்! அந் நம்பி மகிழ்வுற்றான்
வல்லுறுதி கொண்டதோள் வாட்கைக் கொலைஞர்தம்
கன்னெஞ் சுருகிற்று! கைசோர்ந்து ஆடிற்று!
"அன்னம் கொடுத்தான் அரசன் எனினுமென்ன?
கம்பன் மகனைஎங் கையாலே கொல்வோமா?
எம்பழியைத் தாங்கோமே!" என்று கொலைஞர்கள்
கூறிப் பழிபங்குக் கொள்ளாது போய்மறைந்தார்!
சீறி யெழுமந்தச் சீற்றத்து மன்னனுக்குச்
செய்தி பறந்தோடிச் சென்றது! ஓடிவந்தான்!
உய்திபெற்று இன்னும் உயிரோடு நின்ற
இளைய கவிபால் இடியிடித்துச் சொன்னான்:



# விளையாட்டுத் தோழி

மா. இளங்கோவன்

இளம் நீல நிறமான அந்தச் சிறிய தாளிலிருந்த உருவத்தை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தேன். சிலுவையை மார்போடு அணைத்துக் கொண்டு பாதியும் பகுதியுமாக மூடிய விழிகளில் சாந்தி ததும்ப சலனமற்ற சிந்தையோடு மரணத்தையே மறந்து நிற்கும் யாரோ ஒரு புண்ணியவதி, இதயம், ஆத்மா எல்லாமே இயேசுவினிடம் இலயித்துச் சேர்ந்ததைப் போலவே நிற்கிறாள். ஓவியத்தின் அடியில், தங்க வர்ணம் வடித்த லிபி எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருந்தது:

"சிநேகம், சிநேகத்தால் மட்டுமே பூரணத்துவம் பெறும்!"

—சகோதரி, ஸோபியா, ஸி.டி."

என் கண்களில் வேதனையின் நீர்த்துளிகள் மெல்ல நிறைந்தன. இதயத்தின் அடித்தட்டில் விகாரக் கடல் அலை எழுப்பிற்று. அப்படியே அந்தச் சித்திரத்திலேயே நிச்சலனமான பார்வை குத்திட்டு நிற்க, அதில் இருந்த உருவம் வேறொருத்தியாக மாறி வருவதைப் போல எனக்குத் தோன்றியது.

விசாலமான செவ்வரி படர்ந்த ஆகாயத்தின் சௌந்தரியம் முழுவதும் அலைமோதும் கன்னங்களிலே சிநேகத்தின் மாயாத மதுரம் நிறைந்த பிரகாசம் படர்ந்து நிற்கும் ஒரு இளம் பெண், எதனோடும் இதயபூர்வமாக அணுகாத எதைப் பற்றியும் அவளுக்குத் தெரியாது. தோள் வரை வெட்டப்பட்ட தலைமுடி பின்புறம் அலட்சியமாகத் தொங்கும். சிரிக்கும் போதெல்லாம் தெள்ளிய நீரோடையில் மிதக்கும் நீர் சுழிகளைப் போன்ற குழிகள் விரியும் கன்னங்கள் செம்பனி நீர்ப்பூக்கள் மொட்ட விழித்து நிற்பதைப் போலத் தோன்றும். யாருக்கும் அவசியமில்லாத, ஆனால், எல்லாருக்காகவும் மலரும் ஒரு குவளை ஒளிந்து விளையாடும் சிறு மந்தகாசம், செம் பருத்திப் பூவின் நிறமுள்ள அந்த அதரங்களை எப்பொழுதும் அலங்கரித் திருக்கும்.

அவள் என் விளையாட்டுத் தோழி!......... கிரெய்ஸி!.........சுற்றுப் புறத்தின் வலிமையான கொடிய அடிகளால் தாக்கப்பட்டு அமைதி இழந்துபோன வேதனை நிறைந்த ஒரு வாழ்வின் துயரம் ததும்பும் வடிவமாகும். அவள் எனக்கு அனுப்பித் தந்துள்ள இந்தச் சித்திரம்!.........

இன்று அவள் கிரெஸ்ஸி அல்ல; இவள் தான் கிரெய்ஸி என்று இனி யாரும் குறிப்பிட முடியாது; இனிமை பொங்கி வழியும் அந்தப் பெயரைக் காதல் சொட்ட இனி யாரும் அழைக்கமாட்டார்கள். ஆம்; இனி என்றென்றும் அவள் சகோதரி ஸோபியா ஆகவே தான் இருப்பாள்!

காதல் வாழ்வுக்குக் கற்ப கோடி தூரத்திற்கு அப்பாலுள்ள அந்த மலைச் சாரலில், பிரசித்தமான கன்னிகா மடத்தில் அவளுடைய வாழ்க்கை அமைதியாகக் கழியும், சுந்தரமான கார்க் கூந்தலில் தவழும் இயற்கை மணம்

அழிந்துபோய், அவளுடைய தலையில், வெறும் துணியால் நெய்த ஒரு வட்டம் மட்டுமே திகழும். கருமை கலந்த தவிட்டு நிறமான ஒரு மேலங்கியை மாத்திரமே அவள் அணிந்து கொண்டிருப்பாள். சிலுவை தொங்கும் கரு மணிகள் கோத்த மாலை எப்பொழுதும் அந்தக் கரங்களில் சுழன்று வரும். முடிவுவரை இடையில்முறியாத பிரார்த்தனையின் மொழிகள் மட்டும் தான் அந்த நெஞ்சில் நிறைந்திருக்கும். இவ்வாறு, அடுக்கடுக்காக, இலட்சியத்தை மட்டும் நோக்கும் விழிகளை உடைய விதியின் இடையில் அந்த வாழ்வு ஊர்ந்து செல்லும்!

பகற்கனவுகள் நிறைந்த இகத்தை நோக்கி அவளுடைய விழிகள் இனி திரும்ப மாட்டா... ஆனால், இங்கு அவள் கோத்து இணைத்து வைத்திருந்த சிநேகத்தின் மிருதுவும் ஆனந்தமுமான இழைகளை நசுக்கிச் சிதைத்து விட்டுப் போக அந்த இளம் மனம் எப்படித் துணிந்தது? கதறும் நெஞ்சும், ஜீவனுள்ள இரத்தம் கசியும் இதயமுமாகவா, அல்லது, கேவலம் எந்த விதமான சலனமும் இல்லாமலா?

எப்படி இருந்தாலும், அவளைப்பற்றி வேறுவிதமாக என்னால் சிந்திக்க முடியாது. கண்ணீர் வெள்ளத்தின் அடியிலுள்ள நூறாயிரம் மதுர நினைவுகள் மட்டுமே இன்று என்னிடம் உள்ளன. எளிதில் மறக்க முடியாத வாழ்வு வாழ்ந்த அவளைப்பற்றி நான் எண்ண! எதற்காகவோ, என்றோ, எவராலேயோ கோக்கப்பட்ட அந்த இழைகளை அலங்கோலமாக அறுத்துக் கொண்டு அவள் கடந்து போய்விட்டாள்! என்றாலும், என் அந்தரங்கத்தின் அடித்தட்டில் அவைகள் அப்படியேதான் சிதறிக் கிடக்கும்! அறுந்து சிதைந்து போனாலும் மீண்டும் தேடி எடுத்துக் கோத்து இணைக்க வேண்டிய மங்காத நினைவுகளல்லவா அவைகள் எனக்கு! என் வாழ்க்கையின் பின்னணியிலே பின்னிப் பிணைந்துள்ள அந்தச் சாகாத நினைவுகள் ஒன்றும் அவ்வளவு விரைவில் கழுவிக் களையக்கூடியவைகளுமல்ல; இதயத்தின் ஒவ்வொரு அணுவிலும் இரண்டற இணைந்து சேர்ந்துள்ளவை!

வாழ்க்கைப் பாதையின் சிரமமான கட்டங்களின் இடையே கூம்பிய விழிகளும் சூன்யமான நம்பிக்கைகளுமாக நான் சஞ்சலப்படும் போது அவை எனக்கு மதுர மதுர நினைவுகளாக இருக்கும். காரணம்; விசாரமற்று, விசனத்தின் சிறு ரேகைகள்கூட தென்படாமல் கடந்து வந்த அந்த மடியாத நிகழ்ச்சிகள் தான் மங்கிய என் வாழ்வில் முதல் முதலில் ஒளி விளக்கேற்றி வைத்ததாகும்!

* * *

ஏழோ எட்டோ வயதுள்ள ஒரு பாலகன் நான் அப்பொழுது. வாழ்வைப் பற்றிய எதையும் அறிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லாத பருவம். ஆனால், நான் ஒரு சிந்தனைச் சிற்பியைப் போலத் தான் வளர்ந்தேன்; எப்பொழுதும் ஊமையாகவே இருந்தேன். யாரோடும் அதிகம் பேசுவதில்லை. என் பால்யம் முழுவதுமே கற்பனை என்ற அந்தப் பிரம்மாண்டமான உலகத்திற்குள்தான் அடங்கி இருந்தது. எந்த வகையிலும் எல்லைக்குட்படாத அந்த விசாலமான பிரபஞ்சத்தை என் சின்னஞ் சிறிய சிந்தனைக்குள் அடக்கி அதன் ஏகச் சக்ரவர்த்தியாகத் திகழ்ந்தேன் நான்.

வீட்டிலுள்ளவர்கள் என் சுபாவத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். சொந்தக்காரர்கள், வீட்டிற்கு வரும் நண்பர்கள்—பொதுவாக யாரோடும் நான் அதிமாகப் பேசுவது கிடையாது. என் விருப்பங்கள் எல்லாம் மறுவினாடியே செயலாக மாறும் அளவுக்கு அன்பும் பிரியமுமாக நான் வளர்க்கப் பட்டேன்.

பள்ளிக்கூடத்திலும் எனக்கு நண்பர்கள் கிடையாது. என்னோடு மாணவர்கள் யாரும் பழகுவதில்லை. அத்தகைய அமைதியில், "பேசாத பிராணி"யாக நான் வளர்ந்து வரும் போதுதான், கிரெய்ஸி என் வாழ்க்கையில் குறுக்கிட்டாள். நானும் அவளும் முதல் முதலில் சந்தித்துக் கொண்டது ஒரு அசம்பாவிதமான சம்பவத்தால்தான் என்றாலும், அதுவேதான், ஆழமான சிநேக பந்தத்திற்கும் அன்னியோன்னிய அன்புப் பிணைப்பிற்குமான முதல் முதற்சுவடு என்பதை நாங்கள் இருவருமே அறியவில்லை.

பள்ளிக்கூடத்திலும், மாதாக் கோவிலிலும் நான் அவளைப் பின்னர் காணவாரம்பித்தேன். சில தடவை தன் தாயாரோடு அவள் வீட்டிற்கு வந்து போனாள். ஆனால், நான் அதை அவ்வளவு முக்கியமானதாகக் கவனிக்கவில்லை. காற்றிலாடும் ஆலிலைகளைப் போலவே நிமிடந்தோறும் கலகலவெனச் சிரிப்பதும், சதா ஏதாவது பேசிக் கொண்டே இருப்பதுமான அந்தச் சிறிய பெண்ணின் சுபாவம் அப்பொழுதெல்லாம் என்னைக் கவரவில்லை.

ஞாயிற்றுக் கிழமைகளில் மாதாக் கோவிலில் நடக்கும் ஓய்வு நாள் வகுப்பில்தான் நாங்கள் ஒன்று சேர்ந்தோம். பள்ளிப் படிப்பைப் போலவே வேத உபதேசங்களைப் படிப்பதிலும் நான் படுமக்காக இருந்தேன். அதனால், ஓய்வு நாள் வகுப்பிற்குச் செல்லும் போதெல்லாம் என் சின்ன இதயம் சஞ்சலத்தால் வாடும். எங்களுக்குப் படித்துக் கொடுக்க கோயில் மேடை மீது நிற்கும் 'தந்தை' என் அருகில் நடந்து வருவதைக் காணும்போதுகூட ஒரு சின்ன பயம் என்னைப் பாதிக்கும்; என்னை அவர் ஏதாவது கேள்வி கேட்டால்,—பதில்

சொல்ல மாட்டேன் — அவருடைய தடித்த கண்ணாடிகளுக்கப்பால் உருளும் இரண்டு விழிகளைப் பயத்தோடு பார்த்தபடி பேசாமல் நின்று விடுவேன் நான்!

அன்று நானும் கிரெய்ஸியும் ஒரே இடத்தில்தான் உட்கார்ந்திருந்தோம்—என் அருகில் அவள். வேதாகமப் புத்தகத்தில் உள்ளவை எல்லாம் அவளுக்கு மனப் பாடம்! கேட்டு முடிப்பதற்குள், இதழ்களில் தத்தி நிற்கும் மாயாத மந்தகாசத்தோடு, அணையுடைத்துப் பாயும் நீர்பெருக்கைப் போலவே அவள் பதில் சொல்லி விடுவாள்.

"உன்னைச் சிருஷ்டித்தது யார்?"

"தேவன்! இல்லாமையிலிருந்து என்னைச் சிருஷ்டித்தார்!"

கிரெய்ஸிக்கானால் இதைச் சொல்ல எந்த விதமான தாமதமும் ஏற்படாது. ஆனால், என்னுடைய மூளையில் அது நிலைத்து நிற்பதே இல்லை! ஆயிரம் முறை படித்துப் படித்துச் சொன்னாலும், அதை மறந்து விட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன். அவற்றைப் படிக்கும் போதெல்லாம் புரிந்து கொள்ள முடியாத என் மூளையில் ஓராயிரம் சிந்தனைகள் கார்காலத்து நரிகளைப் போலவே ஊளையிட்டு அலறும்! இவைகளெல்லாம் பிசாசின் வேலைகள் என்று நான் படித்திருக்கிறேன். ஆனாலும், அந்தச் சிந்தனையின் சகிக்க முடியாத ஓலம் என்னவோ தொடர்ந்து இருக்கத்தான் செய்தது! நலிவேற்படுத்தும் சிந்தனைகள்—அவை மட்டும் என்னை விட்டுப் பிரியவே இல்லை!

கடவுளைப் பற்றிப் போதிக்கப்படும்போதெல்லாம், அவருடைய அற்புத வல்லமையைப் பற்றி என்னால் ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது. அவிழ்க்க அவிழ்க்க முடிச்சுகளாக முறுக்கேறி வரும் நாவிழைகளைப் போலத்தான், மனிதன் அவரால் படைக்கப் பட்டதை எண்ணும்போது எனக்கு ஒரே சிக்கலாக இருக்கும். இதயத்தில் கடவுளைக் காணவேண்டுமென்ற ஆவலில் நான் ஒவ்வொரு உருவத்தையும் அதில் நிறுத்தி எடை போடுவேன்: புனித ஜோசப்பைப் போல இருப்பாரா தேவன்? அதோ, புனித அகஸ்தீன்—அவருடைய சாயலாக இருக்கலாமோ? எப்படியானாலும் அவர் ஒரு வயோதிகராகத்தான் இருக்கவேண்டும் என்பது மட்டும் நிச்சயம். கற்ப கோடி காலமுதல் அவற்றைச் சிருஷ்டித்தவரல்லவா?

ஆனால், கர்த்தர் எதற்காக மனிதர்களை உண்டாக்கினர்? இந்த மனித வர்க்கம் முழுவதையும் படைத்தழிப்பது அவருக்கு ஒரு விளையாட்டா? அதில்தான் எவ்வளவு பேர்கள் சபிக்கப்பட்டவர்களாக மாறி விடுகிறார்கள்! அவர்களை எல்லாம் கர்த்தர் ஒருநாள் நித்திய நரகத்தில் தள்ளி—ஓ! அவற்றைச் சிந்தித்துப் பார்க்கவே எனக்குப் பயமாக இருக்கும்! ஏனென்றால், பிசாசுகளைப் படைத்த கடவுளுக்குப் பிசாசுகளுக்குப் பயப்படுவதைவிட அதிகமாகப் பயப்பட வேண்டாமா?

முடிவற்ற என் சிந்தனை இப்படிப் பரந்து விரியும்போது, அதை இடையிலேயே வெட்டி எறியும் பட்டமாக வந்தது அந்தக் கேள்வி:

"தேவன் உன்னை எதற்காகப் படைத்தார்?"

முதலில் அது எனக்குக் கேட்கவே இல்லை. என்னுடைய சிந்தனைகள் அந்த வகுப்பறையைக் கடந்து எப்பொழுதோ சுவர்க்கத்தை அடைந்து விட்டிருந்தது.

கேள்வி மீண்டும் தெளிவாகக் கேட்கப் பட்டது: ஆனாலும் நான் உணரவில்லை. தந்தையின் கண்கள் சிவந்தன. அவர் உரத்துச் சப்தமிட்டார்:

"டேவிட்."

நான் திடுக்கிட்டு எழுந்தேன். பயத்தோடு அவர் முகத்தை நோக்கினேன். அந்த முகத்தில் கோபம் இழைந்து கறைந்து கொண்டிருந்தது.

"கடவுள் உன்னை எதற்காகப் படைத்தார்?"

நான் முதலில் வியர்த்துப் போனேன். பிறகு நிமிர்ந்து கூரையைப் பார்த்தேன். அங்கே ஒரு இழவும் எழுதி ஒட்டி இருக்கவில்லை. இம்ம்.........அந்தக் கேள்விக்குரிய விடை என்ன?.........ஊஹூம், ஒரு பதிலும் கிடைக்கவில்லை. மிரண்ட விழிகள் அவர் முகத்திற்கே தாவின. தடித்த கண்ணாடி வட்டங்களுக்கு அப்பால் சிவந்த இரண்டு விழிகள் என்னை நோக்கியபடி சுழன்றுகொண்டிருந்தன.

நானும் அதைப்பற்றித்தானே அப்பொழுது சிந்தித்துக்கொண்டிருந்தேன்! இம்......கடவுள் என்னை எதற்காகப் படைத்தார்? விளையாட்டிற்கா? அப்படி இருக்காது... பிறகு?......என் அம்மாவின் சொற்கள் என் நினைவில் பளிச்சிட்டன; எங்கள் குடும்பத்தில் மூத்தவன் நான்தான். என் இளமைப் பருவத்திலே நான்தான் அந்தக் குடும்பத்தைத் தாங்க வேண்டுமாம்; என் சகோதர சகோதரிகளை நான்தான் காப்பாற்ற வேண்டுமாம்!......... ஆ!......வீட்டிலுள்ள மற்ற எல்லோருக்குமாக இருக்கலாமோ கடவுள் என்னைப் படைத்தது?

பதிலைக் கண்டு பிடித்து விட்டவனைப் போல் நான் உடனே சொன்னேன்:

"எல்லோருக்காகவும் வேண்டி!"

வகுப்பிலே கேலிச்சிரிப்பு எதிரொலித்தது. சிரித்து முடித்த அதே கணம் அவர் முகம் சிவந்தது.

எத்தகையதொரு கேலிக்குரிய பதிலை நான் சொல்லித் தொலைத்திருக்கிறேன்! என்னுடைய மூளைச் சுவடுகளை நான் மீண்டும் ஆராய்ந்தேன். அந்தக் கேள்விக்கான சரியான விடை என் நாவின் விளிம்பில் ஊறி நின்றது ......ஆனால்......ஆனால்......

நிர்மூலமாகிப் போன நினைவுச் சுருள்களை எட்டிப் பிடிக்க நான் முயல்வதற் கிடையில், புருக்குஞ்சு கொக்கரிப்பதைப் போன்ற கோலாகலமான ஒரு மதுர மெல்லிய குரல் கேட்டது:

"அவரை அறிந்து சிநேகிக்க!"

எனக்குப் பிடி கிடைத்து விட்டது. பதில் சொல்லிய பிறகு என் வலது புறத்திற்கு என் விழிகளை விரட்டினேன்.

கிரெய்ஸி!

அவள் மந்தகாசமாகப் புன்னகை பூக்கிறாள்; இரண்டு செம்பருத்திப் பூவிதழ்களுக்கு நடுவே வெண்மையேறிய முல்லை மொட்டுக்கள் சிரிக்கின்றன; செம்பனி நீர்ப் பூக்கள் மலர்ந்து நிற்கும் கன்னங்களில் அந்தக் குழிகள் நீர்க் குமிழிகளாகச் சுழலுகின்றன; சிநேகத்தின் பிரகாசம் நிறைந்து வழியும் கண்களில் மானசீகமாவ ஒரு மாயாத சௌந்தரியம் பொங்கித் ததும்புகிறது!

என் இளம் இதயத்தில் நன்றி கசிந்தது. அவள் மட்டும் அந்தப் பதிலை நினைவுபடுத்தி இருக்காவிட்டால்.........? பயபீதி பனிபோல கறையும் கண்களால் நான் அந்த வகுப்பை நோக்கினேன். என்னைப் பார்த்து ஏதோ குசு குசு வென்று பேசிச் சிரிக்கும் அந்தச் சிறுவர்கள்! எல்லோரும் புதுமையான என் பதிலை எண்ணி எண்ணிச் சிரிக்கிறார்கள்!......

மௌனமாக வீட்டை நோக்கி நடந்து கொண்டே நான் அவளைப்பற்றிச் சிந்தித்தேன். அழியாத சிநேகத்தின் இலக்கியத்தைக் கண்களின் ஒளியாக்கி வைத்திருக்கும் அந்தச் சின்னப் பெண்! ஒரு சாதாரண குடிசை—என் வீடு என்று சொல்லிக் கொள்ள அவளுக்குரியது அது ஒன்றுதான். அத்தகைய தொரு வீட்டிற்குப் போவதோ, அவர்களோடு பழகுவதோ தவறு என்ற எண்ணம் எப்படியோ என் மனதில் பதிந்து போயிருந்தது! அவளுடைய அன்னை எங்கள் வீட்டிற்கு வந்து தன் துயரங்களையும் துக்கங்களையும் என் அம்மாவிடம் சொல்வது மூலம் ஆறுதலைத் தேடிக் கொள்ள முயல்வதை நான் பல முறை கேட்டிருக்கிறேன். அவர்களுடைய கணவன் பெரிய குடிகாரன். ஒரே நாளில் இரண்டு பேருடைய வேலையைச் செய்து விடுவான்; ஆனால் ஒரு காசு கூட வீட்டிற்குக் கொடுக்கமாட்டான். வீட்டைப் பொறுத்தவரை எல்லாவற்றையும் கவனித்துக் கொள்ள வேண்டியவள் மனைவி தான் என்பது அவனுடைய சித்தாந்தம்! அவனுடைய மூத்த மகள்தான் கிரெய்ஸி!......

பின்னால் ஆரவாரம் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். குறும்பு நிறைந்த மடியாத மந்தகாசத்தோடு அவள் ஓடிவந்து கொண்டிருந்தாள்.

இரண்டு நிமிடங்கள் நாங்கள் ஒன்றும் பேசவில்லை.

"என்ன யோசிக்கிறாய்?"

"ம்...உம்..."—நான் முணகினேன்:

அவள் நினைத்து நினைத்துச் சிரித்தாள். பிறகு தனக்குத் தானே சொல்லிப் பார்த்துக் கொண்டாள்.

"எல்லோருக்காகவும் வேண்டி!"

என் நா எழவில்லை எதுவும் சொல்ல: சொல்லத்தான் என்ன இருக்கிறது? அவளிடம் வெறுப்புத் தோன்றவும் காணோம்.

ஆத்ம சிநேகிதியைப் போல அவள் என் முகத்தைப் பார்த்துக் கொண்டே பேசினாள்:

"இனிமேல் எல்லாவற்றையும் நான் உனக்குச் சொல்லித் தருகிறேன்; என்ன? எனக்கு எல்லாப் பாடங்களும் மனப்பாடம்!"

என்னுடைய சுய கௌரவம் தலையுயர்த்தியது.

"ஒரு பெண் சொல்லிக் கொடுத்து எனக்கொன்றும் தெரிய வேண்டியதில்லை!"

நான் என் இதயத்தோடுதான் இப்படிப் பேசிக் கொண்டேன். குனிந்து கொண்டே அவளிடம் சொன்னேன்.

"அடுத்த வாரம் நானே எல்லாவற்றையும் படித்துக் கொள்வேன்!"

"உம்......ம்......படித்துக் கொள்வாய்... ஆனால், "எல்லோருக்காகவும் வேண்டி" என்று பதில் சொல்வாய்! அப்படித் தானே?"

அவள் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாள்; கோயில் கை மணிகள் கூட்டமாக ஒலிப்பதைப் போல! அதற்கிடையில் கலகலவென என்னமோ சொல்லவும் செய்தாள். நான் பேசவில்லை—பேச வேண்டு மென்பதில் அவளுக்கும் அக்கரை இல்லை. பேச்சை இடையில் நிறுத்திவிட்டு,ஒரு பாட்டின் இரண்டு அடிகளைப் பாடினாள்.

தன் வீட்டை அணுகியவுடன் அவள் என் முதுகில் தட்டி விட்டுச் சப்தமிட்டுக் கொண்டே உள்ளே ஓடினாள். நடுவில் ஒரு வினாடி நின்று "நாளைப் பள்ளிக்கூடத்திற்குப்போகும்போது, என்னையும் கூப்பிடுகிறாயா?" என்றாள்.

நான் தலை யசைத்தேன்.

* * *

எங்கள் நட்பு அரிச்சுவடிப் படிக்கவாரம்பித்தது இப்படித்தான். நாங்கள் இருவரும் உற்ற சிநேகிதர்களாக அதிக நாட்கள் தேவையிருக்கவில்லை. என்னைக் காணும்போதெல்லாம் நூறு விஷயங்கள் என்னிடம் சொல்ல வேண்டியதிருக்கும் அவளுக்கு, இளமையின்

களங்கமற்ற துடிப்புள்ள செய்திகள் அவை எல்லாம்!

ஓய்வு இருக்கும்போதெல்லாம் நானும் அவள் வீட்டிற்குப் போவேன். என்னைப் பார்த்தவுடன், மெல்லிய ரோஜா இதழில் பிரகாசிக்கும் பனியின் துள்ளியமான ஒளி கண்களில் விளையாட ஓடிவந்து என்னை வரவேற்பாள் கிரெய்ஸி!

காட்டுச் செவந்திப் பூக்களைப் பறித்து ஆற்றொழுக்கிலே மிதக்கவிடும் விளையாட்டு எங்களுக்கு மிகவும் விருப்பம். வளர்ந்த நேரம் மடிவது கூடத் தெரியாமல் நானும் கிரெய்ஸியும் அதில் ஈடுபட்டிருப்போம். நீரின் மேல் தளத்திலே விடப்படும் ஒவ்வொரு பூவும், தண்ணீர்ப் பரப்பின் மீது மந்தகாசமாகச் சிரித்துத் தவழ்ந்து செல்லும்போது, எங்களுடைய இதயங்களில் ஆனந்தத்தின் சிற்றலைகள் அலைமோதும்! சில தடவைகளில், ஆற்று நீரை விலக்கிக் கொண்டு ஆகாயத்தை நிமிர்ந்து நோக்கி நிற்கும் கடப்பைக் கற்களில் பூக்கள் சிக்கி நின்றுவிடும்; உடனே ஒரு சிறிய குச்சியை எடுத்து அதைத் தள்ளி விட்டு, நானும் கிரெய்ஸியும் கைக்கொட்டிச் சிரிப்போம். அவரவர்களுக்குத் தங்களுடைய பூக்கள், மற்றவர்கள் பூவை நெட்டித் தள்ளிவிட்டு முன்னோக்கி ஓடிவிட வேண்டும் என்றுதான் ஆசை! எங்களது இரண்டு பூக்களும் ஒன்றுசேர்ந்து தவழ்ந்தால், அவள் அகமகிழ்வைப் பார்க்க வேண்டுமே!

“அவை பெண்ணும் மாப்பிள்ளையுமா? அதோ பாரேன், இரண்டும் இணைபிரியாமல் போகின்றன!”

கிரெய்ஸியின் அன்னைக்கு எப்பொழுதும் வேலை இருந்துகொண்டே இருக்கும். அவர்கள் வசிக்கும் அந்த வீடும், அதைச் சுற்றிய முள் வேலி படர்ந்த சிறிய இடமும்தான் அவர்களுக்குச் சொந்தமானவை. கிரெய்ஸியும் நானும் சேர்ந்து பள்ளிக்கூடம் போகும்போதெல்லாம், எதையோ திடீரென்று நினைத்துக் கொண்டதைப் போலவே அந்தத்தாயின் கண்கள் பிரகாசிக்கும்.

கவலை, கவலை, ஓயாத கவலை — அது ஒன்றுதான் அந்த அன்னையின் தாய்மை சுரக்கும் இதயத்தை எப்பொழுதும் கவ்விக் கொண்டிருந்தது, அழியாத புன்னகையை உதடுகளின் விளிம்பிலே விளங்க வைத்திருக்கும் தன் மகளின் வருங்கால வாழ்வு—ஆம், அதுதான் அவர்கள் இதயத்தின் உயிர்ப்பிடிப்பில் எதிரொலி செய்து கொண்டே இருக்கும் ஏக்கம்!

“இவளைப் பற்றி இவள் தந்தை நினைப்பதுகூடக் கிடையாது. வீட்டுக்கு என்று ஒரு ஆண் பிள்ளை இல்லாவிட்டால் பணம் எங்கிருந்து கிடைக்கும், அப்பா?”

அந்தத்தாயின் இதயதாபம் இப்படிச் சொற்களாக வெடிப்பவை நான் பல தடவை கேட்டிருக்கிறேன்.

* * *

காலம் கரைந்து கொண்டிருந்தது. அந்த ஆற்றில், சிவந்து கலங்கிய மழை வெள்ளம் பலமுறை ஓடி வற்றி விட்டது.

கிரெய்ஸியின் கன்னங்களில் மதுரமான கனவுகள் இழையத் தொடங்கின. முன்போல எவ்வித அமைதியுமின்றி அவள் என்னிடம் பழகுவதில்லை. ஆனால், அந்தக் கன்னிச் சிரிப்பில் கனியும் கவிதை எழிலுக்கு மட்டும் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை; சிறிய மணிகள் கூட்டங் கூட்டமாகக் குலுங்குவதைப் போலவே பள்ளியிலும் வீட்டிலும் அது முழங்கிக் கொண்டேதான் இருந்தது. முன்னைவிட சிறிது இனிமையும் அதில் இணைந்திருப்பதாக எனக்குத் தோன்றும்.

அவள் அம்மா சொல்வார்கள்:

“ஓ! என்னத்தைக் கண்டப்பா இவள் இப்படிச் சிரிக்கிறாள்! அடி, உன் சிரிப்பைக் கொஞ்சம் குறையடி!”

“ஏனம்மா, நான் சிரிக்கக்கூட கூடாதா?”— களங்கமற்ற கேள்வி—அதிலும் நகையின் கோடுகள் ஓடி இருக்கும்!

“பெண்கள் அதிகம் சிரிக்கக் கூடாது! கொஞ்சம் அடக்கம் ஒடுக்கம் வேண்டும்?”

அதற்குப் பதில், அவளுடைய மற்றொரு பிரகாசமான சிரிப்பாகவேதான் இருக்கும்.

தன் தங்கையைக் ‘கிச்சுக் கிச்சு’ மூட்டி, அந்தச் சிறிய செண்பகக் கன்னங்களில் முத்தங்களைப் பகிர்ந்தளித்துக்கொண்டு அவள் சொல்வாள்:

“நீயும் சிரியடி, அம்மா கேட்கட்டும்!”

கள்ளமறியாத வெள்ளை உள்ளத்தின் பிரதிபலிப்புகள் இவை!

(அடுத்த இதழில் முடிவுறும்.)



# கடமை ★

"பரிதிமலை"

★

புகழூர் மலையடிவாரத்திலுள்ள ஒரு சிறுகிராமம். ஊருக்கு வடக்கே இருந்த மலையில் உயர்ந்தோங்கிய மரங்களும் அடர்ந்த காடுகளும் இடையிடையே சிறு புதர்களும் நெருங்கி இருந்தன. புலி, சிறுத்தை போன்ற கொடிய விலங்குகளும் அங்கு வாழ்ந்து வந்தன. மலைக்குப் போவதற்கு ஒரு சிறு ஒற்றையடிப் பாதை மட்டுமே உண்டு. ஊரிலுள்ள மக்களில் ஒரு சிலருக்கே இந்தப் பாதையில் போய் வந்து பழக்க முண்டு. ஊருக்கு மேற்புறம் ஒரு பெரும் ஏரி உண்டு. மலை இதற்கு ஒரு கரையாக இருந்தது. நகரத்திற்கு மலை ஓரமாக ஏரியில் சென்றால் 7-மைல் தான்; ஆனால் கடப்பதற்கு ஓடமோ தோணியோ கிடையாது. எனவே, மக்கள் மற்றக்கரை வழியாகச் சுற்றித்தான் நகரம் போக வேண்டும். இந்தத் தூரம் 25-மைல்கள். வேறு கார் வசதி ஒன்றும் கிடையாது. நகரப் பழக்க வழக்கங்கள் எதுவுமே இக்கிராமத்தை ஆட் கொண்டதில்லை.

இந்த ஊரில் தான் மாடன் வாழ்ந்து வந்தான். உழைப்பால் பருத்து உருண்டு திரண்ட தோள்களும், பரந்த மார்பும், விரிந்த நெற்றியும், ஒளி பொருந்திய கண்களும் உடையவன். ஆனால் கல்வி அறிவு இல்லாதவன். அந்த ஊரில் அவன் பேச்சுக்கு மறு பேச்சுக் கிடையாது. கொஞ்சம் நிலபுலமும் ஆடு மாடுகளும் இவனுக்கு உண்டு. தவறான தொழிலில் ஈடுபடுபவர்கட்டு உதவி செய்து பணம் சம்பாதித்து வந்தான்.

அந்தச் சுற்று வட்டாரத்தி லுள்ள திருடர்கட் கெல்லாம் மாடன் என்றால் மிகவும் நடுக்கம். இவனுடைய மாட்டுக் கொட்டில் மிகவும் பெரியது. இவ்வளவு பெரிய கொட்டில் எதற்கு என்பது அவ்வூரிலேயே பலருக்குத் தெரியாது. அந்த நாளில் மாடு திருடுகின்ற பழக்கம் அதிகம். அதைக் கண்டு பிடிப்பது மிகவும் கடினம். பொது மக்கள் அச்சத்தால் போலீசுடன் ஒத்துழைப்பது கிடையாது. எனவே மாடு திருடுபவர்கள் பயமின்றித் தங்கள் தொழிலைத் திறமையாகச் செய்து வந்தனர். இவர்களில் பலர் மாடனுக்குத் தெரிந்தவர்கள். நள்ளிரவில் பல இடங்கட்கும் சென்று மாடுகளைப் பிடித்துப் பிறரியாமல் இரவோடு இரவாகக் கடத்தி மாடனுடைய கொட்டிலுக்குக் கொண்டு—வந்து விடுவார்கள். இவனும் தரத்திற்குத் தக்கபடி பொருள் கொடுப்பான். மாடுகளைப் பறி கொடுத்தவர்கள் பல இடங்களிலும் தேடி அலைந்துவிட்டுக் கடைசியாக மாடனிடம் வருவார்கள். அவர்களை விசாரித்து எல்லா விபரங்களையும் தெரிந்து கொண்டு இரவில் கொட்டிலுக்கு அழைத்துக் கொண்டு போவான். மாடுகள் இருந்தால் பிடித்துக் கொடுப்பான்; அவர்களும் ஏதோ பணம் கொடுத்துவிட்டுப் போவார்கள். இவ்வாறு திரும்பவும் கொடுக்கப்பட்டவை போக எஞ்சியுள்ள மாடுகளை வாரம் ஒருமுறை இரவில் ஒற்றையடிப் பாதை வழியாக மலைக்கு நடுவில் ஓட்டிக் கொண்டு போய் எதிர்பார்த்திருக்கும் வேறு ஒரு கூட்டத்தார்க்கு விற்று விடுவான். அவர்கள் மாடுகளைக் கொஞ்ச தூரம் ஓட்டிச் சென்று தங்களுக்குப் பாதுகாப்பான இடத்தில் அவைகளைக் கொன்று தோலைப் பதனிட்டு நகர்ப்புறம் கொண்டுபோய் வியாபாரம் செய்வார்கள்.

மாடன் இந்த வழியில் பணம் சேர்த்து பெரிய மனிதனாக வாழ்வது வீரனுக்குப் பொறாமையாக இருந்தது. வீரன் உயர்ந்த வட்டிக்குக் கடன் கொடுத்துக் கடனைக் கட்ட முடியாமல் தவிக்கும்பொழுது, அவர்களுடைய நிலங்களைக் கிரயமாக எழுதி வாங்கிக் கொள்வான். இதனால் நில புலங்கள் இவனுக்கு அதிகம். ஆனால் மக்கள் யாரும் இவனை மதிப்பதில்லை. மாடனை எப்படியும் போலீசில் காட்டி சிறைக்கனுப்பி விட்டால் தான் பெரிய மனிதனாக வாழலாம் என்பது வீரனின் எண்ணம். ஆனால் மாடுகளைத் திரும்பப் பெற்றுச் செல்லும் எவரும் போலீசில் புகார் செய்ய முன்வருவதில்லை. போலீஸ் என்று ஏதாவது தகராறு செய்தால் அவர்கள் அணைவரையுமே மாடன் ஒழித்துக் கட்ட ஏற்பாடு செய்துவிடுவான். இதனால் வீரன் தக்க சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

இந்தச் சமயத்தில் அந்த வட்டாரப் பிரபல மிராசுதாரரான சாமியப்பப் பிள்ளையின் மாடுகள் களவு போய்விட்டன. அவைகள் சுமார் ரூ. 500 வரை பெறுமானம் உள்ளவை. பிள்ளை பல இடங்களிலும் தேடிக் கடைசியாக, மாடனைப் பற்றிக் கேள்வியுற்றுப் புகலூர் வந்தார். மாடனும் வழக்கம் போல் விசாரித்துத் தெரிந்து கொண்டு ரூ. 500 கொடுத்தால் கொட்டிலுக்கு அழைத்துப் போவதாகத் தெரிவித்தான். பிள்ளையும் வேறு வழியின்றிப் பணத்தைக் கொடுத்து விட்டு மாடுகளைப் பிடித்துக் கொண்டு போனார். ஆனால் அவர் மனம் 'இவனை எப்படியும் போலீசில் சிக்கவைக்க வேண்டும்' என்ற முடிவுக்கு வந்தது. அதற்குக் கையாளாக வீரன் கிடைத்தான். இருவரது நோக்கமும் ஒன்றைப் பற்றியதால் தீவிரமாக முயற்சி செய்ய முற்பட்டனர். மாடுகள் அதிகமாக இருக்கும் சமயம் பார்த்து இரவோடு இரவாக களவு கூறும் வேலை வீரனைச் சேர்ந்தது;

போலீசிற்குத் தெரிவித்துக் கையும் களவுமாகப் பிடித்து மாடன் கையில் விலங்கிடச் செய்வது பிள்ளையின் வேலை.

ஒருநாள் மாலை நேரம். புயல் அதிகமாக வீசிக் கொண்டிருந்தது. மழையும் மின் அதிகமாகப் பெய்தது. எல்லோரும் தத்தம் வீட்டுக் கதவுகளை அடைத்துக் கொண்டு என்ன நேருமோ என்று ஏங்கிய வண்ணம் வாடையில் நடுங்கிக் கொண்டிருந்தனர். மலையின் ஒற்றையடிப் பாதையில் கந்தைத் துணியோடு கையது கொண்டு மெய்யது பொத்திக் கொட்டும் மழையில் நனைந்து நடுங்கியவாறு ஊரை நோக்கி ஒரு சிறுவன் வந்தான். மாடன் வீடு முதல் வீடாகையால் அங்கு நின்று கதவைத் தட்டினான். 'யார்?' என்று குரல் கொடுத்த வண்ணம் மாடன் கதவைத் திறந்தான். பையன் குளிரால் நடுங்கிக் கொண்டே 'நான் ஒரு அநாதை; தங்குவதற்கு இடம்' என்று குழறினான். பற்கள் ஒன்றோடொன்று மோதி ஒலியெழுப்பின. மாடன் மனமிரங்கி அவனை உள்ளே அழைத்துச் சென்று வேற்றுடை கொடுத்துத் தன்னிடமே வேலைக்கு வைத்துக் கொண்டான். கந்தன் அவனைக் கடவுளாக எண்ணித் தன் வேலையை ஒழுங்காகச் செய்து வந்தான்.

கொட்டிலுள்ள மாடுகட்குத் தீனி வைப்பது, குறித்த காலத்தில் அவைகளை அனுப்ப வேண்டிய இடங்கட்கு அனுப்புவது ஆகிய வேலைகளைக் கவனித்து வந்தான். மாடனின் குறிப்பறிந்து நடந்து அவனது அன்புக்குப் பாத்திரமானான். மாடுகளை மலைக்கு ஓட்டிச் சென்று விற்பனை செய்யும் பொறுப்பையும் மாடன் இவனிடத்திலேயே ஒப்படைத்து விட்டான். மாடு கொண்டு வருபவர்கள், வாங்குபவர்கள் எல்லோருமே இவனுக்குத் தெரியும். சுருங்கக் கூறின் மாடனுடைய இரகசிய வேலைகள் அனைத்துமே இவனுக்குத் தெரியும். ஆனால் திருட்டுத் தொழிலில் ஈடுபடுபவர்கட்கு உதவி செய்து பிழைக்கும் ஒருவனிடத்தில் நாம் வேலைக்குச் சேர்ந்து விட்டோமே என்ற எண்ணம் அவனை உறுத்திக் கொண்டிருந்தது. மாடனுடைய அன்புப் பெருந்தன்மையும் பிற நற்பண்புகளும் இவனைப் பேசவோ வேறு இடத்திற்குப் போகவோ விடாமல் தடுத்து விட்டன.

மிராசுதாரரும் வீரனும் தனக்கு எதிராக வேலை செய்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள மாடனுக்கு அதிக நாட்கள் ஆகவில்லை. மிராசுதாரர் வீட்டிலும் அவரைச் சார்ந்து வேலை செய்வோர் வீட்டிலும் ஏராளமான மாடுகள் இருந்தன. அவைகளைப் பிடித்து முதலில் அவர்களை அவமானப் படுத்த வேண்டுமென்று திட்டமிட்டான். அதன்படி ஆட்கள் பலரை வரவழைத்தான். ஒரு நாளைக் குறிப்பிட்டு மாடுகள் அனைத்தும் வந்து சேரவேண்டும் என்று ஆணையிட்டான். அதன்படி அவர்கள் பல பிரிவுகளாகப் பிரிந்து சென்றனர்; இதுவரை தோல்வியையே கண்டறியாதவர்கள் எனவே, குறித்தபடி மாடுகள் பலவேறு பாதைகளில் கொட்டில் வந்தடைந்தன. சுமார் 300-க்கும் மேற்பட்ட மாடுகளைக் கந்தன் சரிபார்த்து ஏற்றுப் பாதுகாத்தான். இன்னும் 3 நாட்களில் தோல் வியாபாரிகளின் கொடுவாட்கு இவை இரையாகிவிடும். அப்புறம் மிராசுதாரர் மாடுகள் சென்ற அடிச் சுவட்டைக் கூட காணமுடியாது.

மலைக்குப் போவதற்கு முதல் நாள் நகரத்தைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் கந்தனை ஆட்டிப்படைத்தது. மாடனிடம் சென்று அனுமதி வேண்டினான். முன்பு பலமுறை மறுத்துவிட்டதால் இம்முறை அனுமதி கொடுத்தான்; ஆனால் அடுத்த நாள் வேலை முக்கியமென்றும், மிக விழிப்பாக இருக்க வேண்டுமென்றும் விடியுமுன் ஊர் வந்து சேர வேண்டுமென்றும் எச்சரித்து அனுப்பினான். கந்தனுக்கு ஒரே மகிழ்ச்சி. வெளுத்த சட்டை வேட்டியைப் போட்டுக் கொண்டு தலையில் ஒரு முண்டாசுடன் கிளம்பினான். நகரத்தின் பல வேறு வீதிகளையும் கடைகளையும் திரைப்பட அரங்குகளையும் இரண்டு கண்களையும் அகல விரித்துப் பார்த்துக் கொண்டே போனான். பின் உணவருந்தி இரண்டாவது ஆட்டம் சினிமாவிற்குப் போனான். சினிமா முடிந்தவுடன் புறப்பட்டால் விடிய ஊருக்குப் போய்விடலாமென்பது அவன் எண்ணம். ஆனால்! சினிமா முடிந்தவுடன் பாதையை நோக்கி விரைந்தான். சற்றுத் தொலைவில் சலங்கை ஒலியோடு கூடிய வண்டி ஒன்று வந்து கொண்டிருந்தது. அது இவனைத் தாண்டும்போது வண்டியில் வீரன் இருப்பதைப் பார்த்தான. வீரனுக்கும் மாடனுக்கும் பகை என்பது தெரியும்; எனவே இந்த இரவில் இவன் எங்கே போகிறான் என்பதை அறிய ஆவல் ஏற்பட்டது. மெல்ல வண்டியைப் பின் தொடர்ந்தான். வண்டி நகரின் பல பகுதிகளையும் கடந்து போலீஸ் ஸ்டேஷன் அருகில் வந்து நின்றது. கந்தனின் சந்தேகம் வலுத்தது. பிள்ளையும் வீரனும் பெரு முயற்சிக்குப் பின் ஸ்டேஷனுக்குள் சென்று உயர்தர அதிகாரிகளைக் கண்டு பேசினர். கந்தன் சன்னலுக்குப் பின்னால் பதுங்கிய வண்ணம் பேச்சை உற்றுக் கேட்டான். "விடிவதற்குள் போனால் கையும் களவுமாக மாடுகளை" என்ற வார்த்தைகளைக் கேட்டான், உடனே அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டான். 'நேற்று வந்த மாடுகள், போலீஸ், மாடன் கையில் விலங்கு.' இவை கந்தன் மனக்கண்ணில் மாறி மாறித் தோன்றி மறைந்தன. எப்படியும்

167933

இந்த ஆபத்திலிருந்து தன் தலைவனைக் காப்பது தன்னுடைய கடமை என்று உணர்ந்தான். கரை வழியாகச் சுற்றி நடந்து செல்வதற்கு குறைந்தது 6 மணி நேரமாவது வேண்டும். அதற்குள் போலீஸ் முந்தி விடும். என்ன செய்வது என்று தெரியாமல் தத்தளித்தான்.

பல படியாக எண்ணிப் பார்த்தான். பின் ஒரு வழி தென்பட்டது. ஆம். அந்த ஒரே வழிதான் உள்ளது. ஆனல் வெற்றி கிட்டுமா? அதுபற்றி யோசிக்க நேரம் இல்லை. மலை ஓரமாக ஏரியில் நீந்திச் சென்றல் இரண்டு மணி நேரத்திற்குள் போய்விடலாம். 12 வயதுச் சிறுவன் ஏழு மைல் முன் பின் பயிற்சியின்றி நீந்துவது முடியாது. முடியும் என்றது கடமை உணர்வு. போரில் கடமையுணர்வு வென்றது. நீந்திச் சென்று தலைவனைக் காப்பது இல்லையேல் சாவது என்ற முடிவுக்கு வந்தான். ஒவ்வொரு விநாடியும் ஆபத்துத் தலைவனை நெருங்கிக் கொண்டிருந்தது. சட்டை முதலிய வற்றைக் கழற்றி எறிந்தான். கோவணம் ஒன்றுடன் ஏரியில் குதித்தான். ஒரே இருட்டு. மலையை எல்லையாகக் கொண்டு நீந்தினன். மலை ஓரமாகச் சென்றல் வன விலங்குகள் நீரருந்த வரும் சமயம் இவன் சிக்கிக் கொள்ள நேரிடும். ஏரியின் மத்தியில் சென்றல் அலைகள், இதற்கிடையில் ஒரு வகை மீன்கள் கடித்தன. உடலிலிருந்து இரத்தம் கசிய ஆரம்பித்தது. உடல் சோர்வுற்றது. கைகள், 'எங்களால் நீரை இழுத்துத் தள்ள முடியவில்லை' என்று பின் வாங்கின. ஐந்து மைல் கடந்தாயிற்று. இன்னும் இரண்டு மைல்கள். கொஞ்சம் ஓய்வு வேண்டும். மலை ஓரமாகப் போய் ஒரு மரத்தின் வேரைப் பற்றி அதன் மேல் உட்கார்ந்தான். உடம்பு குளிரால் சிறிது நடுங்கியது. திடீரென்று காலை யாரோ சுற்றுவது போல் தென்பட்டது; கையை வைத்துப் பற்றினன். நல்ல வேளை நீர்ப் பாம்பு. சுற்றி நீரிலடித்துக் கொன்றன். இனித் தங்கினல் ஆபத்து என எண்ணி மீண்டும் தன் முயற்சியைக் கைக் கொண்டான். எங்கிருந்தோ புலி ஒன்று நீரருந்த வந்து கொண்டிருந்தது. அதன் ஒளி பொருந்திய கண்களைக் கண்டான். அச்சம் அதிகமாகியது. சற்றுத் தள்ளிப் போய் நீரில் மிதந்த வண்ணம் இருந்தான். நல்ல வேளை தொல்லை ஒன்றும் இல்லை. மீண்டும் நீந்தினன். வலக்கரத்தில் ஒரு நீர்ப் பறவை கொத்தி விட்டது. எப்படியும் போய்ச் சேரவேண்டும் என்ற உறுதிதான் அவனுக்கு வலிமையைக் கொடுத்தது. தொலைவில் மாட்டுக் கொட்டிலும் வீடும் தெரிந்தது. நம்பிக்கை மீண்டும் புத்துயிர் பெற்றது. ஒருவாறு கரை சேர்ந்தான். அவனல் நடக்க முடியவில்லை. தரையில் தவழ்ந்த வண்ணமே சென்று கதவைத் தட்டினன். மாடன் கதவைத் திறந்து இவனைக் கண்டதுமே திடுக்கிட்டான். தோளில் தூக்கிச் சென்று படுக்க வைத்து மெல்ல மூர்ச்சை தெளிவிக்க முயன்றன். உடம்பின் பல பகுதிகளிலுமிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. மெல்ல வாயைத் திறந்து "போலீஸ், போலீஸ்" என்றன்.

மாடன் எல்லாவற்றையும் உணர்ந்து கொண்டான். விரைந்து கொட்டில் சென்று எல்லா மாடுகளையும் கயிற்றைக் கழற்றி கொம்பில் சுற்றி ஏரிப் பாதை வழியாகவும் மலைப் பாதை வழியாகவும் விரட்டியடித்து விட்டுத் திரும்பினன். எவ்வளவு விரைவில் அவனுடைய கைகள் இந்த வேலையைச் செய்தன என்பது அவனுக்கே தெரியாது. மாடுகள் மலைக் காடுகளில் சென்று மறைந்து கொண்டிருந்தன. 'டர், டர்' என்ற ஒலி இடையருது நெருங்கி வந்து கொண்டிருந்தது. போலீஸ் லாரியும் ஜீப்களும் ஒன்றன்பின் ஒன்ருக வந்தன. ஊரிலுள்ள மக்கள் அனைவரும் ஒன்றும் புரியாமல் விழித்தனர். போலீஸ் படையினர் மாட்டுக் கொட்டிலை வளைத்துக் கொண்டு மாடன் வீட்டுக் கதவை 'மட மட' வெனத் தட்டினர்.

மாடன் சிறிதும் சலனமின்றி கதவைத் திறந்தான். போலீஸ் உயர்தர அதிகாரி ஒருவர் "உன்னிடம் களவு மாடுகள் உள்ளன: மாட்டுக் கொட்டிலைத் திற. பரிசோதிக்க வேண்டும்" என்று அதிகாரம் நிறைந்த குரலில் கூறினர். மாடன் சிரித்துக் கொண்டே, 'என்னிடம் களவு மாடுகள் இல்லை. என் எதிரிகள் என்னை அவமானப் படுத்துவதற்காக இவ்வாறு பொய் சொல்லித் தங்களை அழைத்து வந்திருக்கிருர்கள்' என்ருன். அதெல்லாம் இல்லை என்று கூறிய வண்ணம் மாட்டுக் கொட்டில் கதவை எட்டி உதைத்தார். கதவு படாரென்று திறந்தது. ஆனல் அங்கு மாடுகள்தான் இல்லையே. போலீஸ் அதிகாரிகள் வந்த வேகத்தில் திரும்பிக் கொண்டிருந்தனர்.

மாடன் மனக்கவலையோடு கந்தனைப் பார்க்கப் போனன். அங்கு அவன் கண்டது கந்தனை அல்ல; கந்தனின் பிணத்தை. கடமையைச் செய்துவிட்ட மகிழ்ச்சியால் அவன் இவ்வுலகத்திலிருந்தே விடை பெற்றுக் கொண்டான். மாடன் கண்களிலிருந்து நீர்த் துளிகள் உருண்டோடி கந்தன் சடலத்தை நனைத்தன. களவு மாடு பிடித்து விற்கும் தொழிலை அன்றேடு விட்டொழித்தான். 'கந்தன் மாட்டுக் கொட்டில்' என்ற பெயரைச் சூட்டி ஊரில் கொட்டிலின்றி மாடு வைத்திருப்பவர்கள் அனைவரும் தன்னுடைய கொட்டிலில் மாடுகளைக் கட்டிக் கொள்ளலாம் என்று அறிவித்தான். தானும் புதிய வாழ்க்கை தொடங்கினன்.

# அணுக் குண்டு

எம். ஜெயலக்ஷ்மி

★

'ணாணங், ணனங், ணங்.'

மணியோசை கேட்டதும் நிர்மலா எழுந்தாள். வழக்கமான பிரார்த்தனைக்காக கரங்கள் குவிந்தன. மறுகணம் படுக்கையை விட்டு எழுந்தாள். அப்போது அவள் முகத்திலே ஒரு அலாதியான சந்தோஷம் தாண்டவமாடியது. அந்த களைக்கு மெருகு கொடுக்கக் கருதினாளோ என்னவோ முகத்தை நன்றாகக் கழுவினாள். அவளின் முத்துப்பற்கள் வெண்மையாகி யிருந்தன. தன்னிச்சையாகத் திரியும் கேசத்தை ஒழுங்கு படுத்தினாள். இப்போது அவள் முகத்தைப் பார்க்கவேண்டுமே: மலர்ந்த புதுதாமரையின் கவர்ச்சி அங்கே பிரதிபலித்துக் கொண்டிருந்தது. ஆங்காங்கே தண்ணீர்த்துளிகள் அந்த தாமரையில் தவழ்ந்து நிற்பதுபோல் மகிழ்ச்சி கீறல்கள் நிர்மலாவின் முகத்திலும் மிளிர்ந்தன.

அவள் நடையிலே ஒரு வேகம்; அவள் அந்தராத்மா எண்ணும் கடமை உணர்ச்சியோடு அதிலே ஒரு தனி ஆர்வமும் மிதந்தது. வேகமாக வந்தவள் திடும் என்று நின்றாள். அவள் கண்கள் விழியை அகலமாக்கிய வண்ணம் எதிரே நின்ற உருவத்தைப் பார்த்தன. மத்யான வெய்யிலில் மலர்ந்த தாமரை வாடுவதுபோல் அவள் முகம் சற்றே வாடியது, ஏற்கனவே அவள் முகத்தில் இருந்த மகிழ்ச்சி கீறல்களிடம் புதிதாக வரும் வாட்டம் காரணம் கூறாமல் இருக்குமா என்ன!

நிர்மலா சுந்ததரேசனின் ஏக புதல்வி. தாயற்ற அப் பெண்ணை நன்றாகக் கவனித்து வந்தார் சுந்தரேசன். நிர்மலா பருவ மடைந்தாள். காலேஜ் படிப்புப் பெற்றவள். இவளுக்கு விரோதமாக எவனையாவது கணவனுக்கிக்கொள் என்று சுந்தரேசன் ஏன் சொல்லப் போகிறார். அறிவு வந்தவளுக்கு அறிவைப் பற்றி வியாக்யானம் செய்வது கேலிக் கூத்துத் தானே!

மாதவன் பிள்ளை கணேசன் அன்று நிர்மலாவைப் பார்க்க வந்தான். கணேசன் ஒரு பட்டாதாரி. மாதம் முன்னூறு ரூபாய் சம்பளத்தில் பம்பாயில் உத்யோகம் பார்த்து வருகிறான். கணேசன்—நிர்மலா மனச் சம்மதம் கேட்டு மணவிழா ஏற்பாடாயிற்று. சுந்தரேசன் வெகு விமரிசையான ஏற்பாடுகள் எல்லாம் செய்யத் திட்டமிட்டிருந்தார். அதைக் கண்டு மாதவன் வீட்டார் பிரமித்தே போய் விட்டனா, நாலைந்து வீட்டுக்கு அப்பால் ஒரு பெரிய பங்களாவில் தான் மாப்பிள்ளை வீட்டார் தங்க ஏற்பாடா யிருந்தது.

அன்று காலை மணவிழா வெகு சிறப்பாக நடந்தது. நிர்மலாவின் கழுத்தில் கணேசன் மாங்கல்யம் சூட்டினான். தன்னிட மிருந்து ஏதோ ஒரு பாரத்தை கணேசன் இறக்குவது போல் சுந்தரராசன் மனம் எண்ணியது. பாரம் இருந்த இடத்தில் இப்போது மகிழ்ச்சி நிறைந்தது. அந்த மங்கலநாண் பூட்டப்பட்டவுடன் நிர்மலாவின் அகமும் முகமும் மலர்ந்தது. மணம் பெறப்போகும் புதுமலர் பூரணப் பொலிவுடன் காட்சி அளிப்பது இயற்கை தானே!

மாலை நிர்மலா அலங்காரம் செய்து கொண்டிருந்தாள். பெண் வீட்டில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரியத்தைக் கவனித்துக் கொண்டிருந்தனர். சுந்தரேசன் வாயிற் திண்ணையில் வெற்றிலைச் செல்லத்துடன் அமர்ந்தார். அன்றிரவு விழாவில் மிகச் சிறப்பாக ஏற்பாடுகள் செய்துவிட்ட பெருமையோடு ஒரு அசோகா பொட்டலத்தைப் பிரித்து வாயில் போட்டுக் கொண்டார். அதை மென்று கொண்டே ஏதோ நினைத்துப் புன்னகை செய்தவர் வெற்றிலை ஒன்றை எடுத்து அதில் சுண்ணும்பைத் தடவி மடித்து வாயில் இட்டுக் கொண்டார். அடுத்து மற்றொரு வெற்றிலையை எடுத்துச் சுண்ணும்பு தடவிக் கொண்டிருக்கும் போது ஒரு பையன் ஓடி வந்து அவர் காதில் ஏதோ சொன்னான். மறுகணம் அவர் முகம் பேயறைந்தது போலிருந்தது. தடவிய சுண்ணும்பு வெற்றிலையை அப்படியே கீழே போட்டுவிட்டு அப்படியே தெரு வீதியில் இறங்கி நடந்தார்.

மாப்பிள்ளை வீட்டார் தங்கி இருந்த மாளிகையின் உள்ளே சென்றார். இவரைக் கண்டு எங்கோ பார்த்த வண்ணம் திரும்பிக் கொண்டார் மாதவன். அந்தச் செய்கை சுந்தரேசன் நெஞ்சைப் புண்ணாக்கியது. என்ன இருந்தாலும் பெண்ணைப் பெற்றவன் 'புண்ணைப்பற்றி' கவலைப்படலாமா என்ன? மாதவனின் முன்னால் போய் நின்று கொண்டார் சுந்தேரசன். அப்போதும் அமரச் சொல்லாதுவாளா இருக்கும் மாதவன் செய்கை ஏற்கனவே ஏற்படுத்திய புண்ணைச்சுற்றி வீக்கம் தருவது போலிருந்தது. மாதவன் முகத்தில் தவழ்ந்த அருவருப்பு வீங்கி யிருந்த சுந்தரேசனின் மனப்புண் உள்ளூர சீழ் வைத்தது

போவிருந்தது. மாதவன் கண்களில் பிரதிபலித்த கோபக்கனல் அந்தப் புண்ணில் வலியையும் ஏற்படுத்தியது!

'என்ன எல்லாம் சரியாக நடந்திருக்கிறதா' என்று எல்லாவற்றையும் மறந்த வண்ணம், ஏதோ நாமாவது பேச்சைத் துவக்குவமே எனக் கருதிக் கேட்டு வைத்தார் சுந்தரேசன். பதிலே தராத மாதவன் ஏதோ ஒரு கட்டையைப் பார்ப்பதுபோல் பார்த்துவிட்டு திரும்பினார்.

'என்னவோ, பெரியவாளுக்கு சற்று கோபம் போலிருக்கு. ஒரு வார்த்தை சொன்னா உடனே கவனிச்சுடலாமே' என்றார் சுந்தரேசன் மெருகு குறையாமல் மாதவன் அருகே அமர்ந்து கொண்டார் சுந்தரேசன்.

"யாருடா அங்கே? வண்டி வந்தாச்சா இல்லையா என்று ஆக்ரோஷத்துடன் உருமிய மாதவன் "பாகிரதி, பாகிரதி......என்ன சாமான் எல்லாம் சித்தமாச்சா?...இந்தப் பயமணி எங்கே போனான்...கணேசன் எங்கே காணும்' என்றார் சரமாரியாக சம்பந்தா சம்பந்தமில்லாமல் முதன்முதலாகப் புண்ணிலிருந்து இரத்தமும் சீழும் மாறி மாறி சம்பந்தமில்லாமல் தானேவரும். மாதவனின் கூப்பிடுகுரல் கேட்டு பாகிரதி வெளிவந்தாள்.

'ஹூம் கண்ணைக் கசக்காமே என் புள்ளையை இத்தனை நாள் வளர்த்தேன்; இப்போ அவன் கண்ணீர் மழை பூமாதேவி மேலே ஓடிண்டு இருக்கு! மாடியிலிருந்து வருந்திண்டிருக்கான் தலையைக் கூட வெளியே காட்டலாமே!'' என்ற பாகிரதி புடவைத் தலைப்பால் கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

'சம்பந்தி அம்மா...எங்காவது ஏதாவது தப்பித் தவறி குறை ஏற்பட்டிருந்தால் சொல்லுங்கோ; உடனே கவனிக்கிறேன்' என்றார் சுந்தரேசன் பணிவாக.

'கவனிப்பீர், ஏனையா கவனிக்க மாட்டீர்; செய்யறதையும் செஞ்சபின் இப்படி தெரியாதவர்போல் ஏன் வேஷம் போடறீரையா?... எவ்வளவு காலமா ஐயா என் தலையை உருட்டணும்னு நினைச்சீரையா?...நான் அப்படி என்னதான் துரோகம் உம்ம குடும்பத்துக்கு பண்ணினேனையா?......இல்லை கேட்கிறேன்' என்று கர்ஜித்த மாதவன் எழுந்தார்.




'உட்காருங்கள் ... ... ...மெதுவாக அமர்ந்து சொல்லுங்களேன்...'

'உட்கார வேண்டியது தானையா? எந்த மானங்கெட்டவனையா உம்ம விட்டில் உட்கார்ந்திருப்பான்? ... ... என்னை என்னையா நினைச்சுக் கிட்டீர்? உணர்ச்சி இல்லாத மரக்கட்டையா நான் உம் முன்னாலே உட்கார?...

'நீங்கள் இப்படியெல்லாம் பேசப்படாது. தவறு நேர்ந்த இடத்தைச் சற்று விளக்கமாச் சொன்னா உடனே நிவர்த்திக் கிறேன்; உடனே கவனிக்க முடியாவிட்டால் கொஞ்சம் தவணை கொடுங்கோ—காரியத்தை நிறைவேற்றிபெண்ணை அனுப்பிக்கிறேன், இதையெல்லாம் விட்டு இரவு முகூர்த்தம்

கழியாம இப்படி திடும் என்று புறப்பட்டா உலகம் பேசாதா.

'பேசட்டும் ஐயா, நன்ருகப் பேசட்டும்; அதைப்பத்தி நான் கவலைப்படவில்லை...... ஆமாம்...இவ்வளாவாவது முன் கூட்டி அறிந் தேனே...தவணை கொடுக்கணுமாமே தவணை. ...தவணை கொடுத்தா பெண்ணை கைக் குழந்தையோடு கொன்று விடுவீர்? இல்லையா ஐயா? என்ன தைர்ய மிருந்தா இப்படி முன்னே பேசமாட்டீர்' என்று சீறினர் மாத வன். கீழ் வடிந்து கொண்டிருந்த புண்ணின் வாய் அகன்று பெரிதாகி வலியும் குத்தும் தாளாதபோது கூச்சல், கதறல் ஏற்படுவது இயல்புதானே. சுந்தரேசன் கதறலும் ஆரம்ப மானது!

'என்ன பெரியவாள் இப்படி பூடகமா கத்தின? கொஞ்சம் மெதுவா ஆர அமர்ந்து விஷயத்தைச் சொன்ன விளங்கும். இதை விட்டுட்டு கன்னுபின்ன என்று உளருவது அவ்வளவு அழகல்ல...

'அழகு...அழகு......அழகைப்பத்தி நீர் என்னையா எனக்குச் சொல்லிண்டிருக்கீர் அது எனக்குத் தெரியும்! கத்தினேனாமில்லா... எவன் அய்யா உம்ம வீட்டிலே வந்து மானங் கெட்டுப்போய்க் கத்துவான்? இல்லை எவன் தானையா உளருவான்...' என்ருர் ஆக்ரோ ஷத்துடன் மாதவன்.

'கோபப்படாதீங்க...அதுவும் உங்களைப் போலுள்ளவா கோபப்படவே கூடாது. உங் களை நான் ஒருபோதும் அப்படிச் சொல்ல மாட்டேன். தாலி கட்டின கையோடு புறப் படுவதற்கு அப்படி என்னதான் இங்கு நடந்து விட்டது...

'இன்னும் என்னையா நடக்கணும்.'

'அதைத்தான் கொஞ்சம் விபரமாச் சொல்லுங்களேன்.'

'விபரம்...விபரம் வேண்டியதுதான், ஐயா விபரம், நாங்கள் எல்லாம் மானத்தோடு வாழணும் ஐயா...தெரிஞ்சுதா...

'உங்கமானம் போகும்படியா அப்படி என்ன தப்புதான் இப்போ நடந்து விட்டது' என்ருர் சுந்தரேசன்.

'மானம்...மானம்...உம்ம மானங்கெட்ட பொண்ணுகிட்டே போய், கேளுமையா' என் ருர் மாதவன். அணுகுண்டு போட வந்த விமானம் ஆகாயத்தில் பறந்தது. அந்த பேரி ரைச்சலில் சுந்தரேசன் மனம் 'பட பட' என அடித்துக் கொண்டது.

'என்ன பெரியவரே இப்படி பிதற்று கிறீர்; வேறு ஒருத்தன் இப்படிச் சொல்லி யிருந் தால் அவனை...அவனை......' பல்லை நற நற வென கடித்துக் கொண்டார். சுந்தரேசன் அவர் உடலெங்கும் ஒரு நடுக்கம் பரவி இருந்தது!

'இந்தக் கோபத்தை உம் வாண்கிட்டே காமிச்சிருக்கணுமையா! எங்கிட்டே அல்ல' என்ருர் மாதவன் ஏளனமாக.

'என்ன சொன்னீர்...'

'அப்படிக் கோபப் பட்டாப்பிலே எல்லாம் ஆயுட்டுதா? இதைப் பார்த்துட்டு அப்புறம் எங்கே கோபப்படணுமோ அங்கே காட் டுங்க' என்று கூறிய கணேசன் ஒரு கடி தத்தை நீட்டினன். சுந்தரேசன் அதை வாங் கிக்கொண்டு எல்லோரையும் ஒருமுறை பார்த் தார்.

'அவர் கிட்டே உனக்கென்னடா பேச்சு! அவர் சம்பந்தம் எப்பவோ அறுந்துப் போச்சு! நீபோய் இந்தச் சாமன் எல்லாம் வண்டியிலே ஏத்து! ஏன் மனசு கொதிச்சு கூழாகுது' என்று தன் மகனை கடிந்து கொண்டாள். கணேசன் சாமான்களை வண்டி யில் கொண்டு வைக்கலானுன். சுந்தரேசன் இதைக் கண்ணுற்ற வண்ணம் கையிலிருந்த கடிதத்தைப் பிரித்தார். அவர் இருதயம் பட படவென வேகமாக அடித்துக் கொண்டது. உடல் மட்டுமென்ன உள்ளமும் நடுங்கிய வண் ணம் கடிதத்தைக் காண விழைந்தார் சுந்த ரேசன்.

''நண்பன் கணேசனுக்கு,

வணக்கம். வெள்ளம் வரும் முன் அணை போடுவது நல்லதுதான். வந்த பின்னும் அணை போட முடிலாம விருப்பது குற்றம். அந்தக் குற்றம் இழைபட நான் காரணமாக இருக்க விரும்பவில்லை. ஏனெனில், காட்டாறு போல வெள்ளம் திடீரெனப் பாய்ந்து பல சேதம் விளைவிப்பதைக்கண்டு நான் அஞ்சு கிறேன்.

நிர்மலா ஒரு காட்டாறு. மலைமேல் உற் பத்தியாகி தணிந்து இடங் கொடுக்கும் பள்ளத் தாக்கில் அருவியாக மாறிக் கொட்டும். எதிர்ப் படும் சிறு சிறுபாறைகள் எல்லாம் தூள் தான்! மதராஸ் கடற்கரையிலே அவள் ஆடிய ஆட்டம், மூர்மார்க்கட்டில் தினம் ஒருவனுடன் அவள் நடந்த ஒய்யார நடை, ஒவ்வொரு பார்க் கிலும் அவள் நடத்திய......எழுதவே கூசு கிறது நண்பா. இருந்தாலும் கடமையை நிறைவேற்ற வேண்டுமல்லவா; அதற்காகத் தான் எச்சரிக்கிறேன்!

நிர்மலாவின் முன் ஹாலிவுட் நடிகைகள் எல்லாம் தோற்றுப் போகவேண்டும். இதெல் லாம் ஏன்? ஒருநாள் அவள் ஒரு ஹோட்டலில் என்னுடன் நடந்து கொண்ட முறை...வெட்கக் கேடு; அந்த ஹோட்டல் முதலாளி 'இதென்ன ஸார் பிரமாதம்...தினம் வருது; இப்படிக் கொட்ட மடிக்குது! புதுப்புது ஆளோடு போகுது...' என்று என்னென்னமோ சொன் ஞர். அந்த ஹோட்டலின் ஒவ்வொரு செங் கும் நிர்மலாவின் கதையை சொல்லிக்

கொண்டே இருக்குமாம்! இவ்வளவு தெரியக் காரணம் அவள் என் சக மாணவி!

நண்பா, நிர்மலா வாழ்வு கெட்டு விடக் கூடாதென்று கருதிதான் இக் கடிதம் மண விழா முடிந்த பின் உன் கையில் கிடைக்கச் செய்திருக்கிறேன். நான் பட்டம் தந்து விட்டேன்; என் பொறுப்பு தீர்ந்து விட்டது. அணை கட்டி வெள்ளத்தைத் தடுத்துப்பயன் படத்தக்க வகையில் ஆக்குவது உன் கடமை. குடும்ப பாரம் ஏற்ற பின்னுவது உன் பூரண கண் காணிப்பில் நிர்மலா திருந்தட்டும்.

இவ்வண்ணம்—உன் நண்பன்.

கடிதத்தைப் படித்துக் கையில் கசக்கி அடக்கினர் சுந்தரேசன். கடிதத்தை அடக்கலாம்; ஆனல் ஊரார் வாயை அடக்க முடியுமா? என்ன கை கால், கண், மூக்கு வைத்து ஜோடிக்கப்பட்டு ஊரெல்லாம் நிர்மலா பேச்சு அடிபட்டதைச் சுந்தரேசன் கையில் கசக்கிவிட முடியுமா?

சுந்தரேசன் நினைவற்று நின்று கொண்டிருப்பதும், மாப்பிள்ளை வீட்டார் வண்டியேறிப் போய் விட்டதையும் அறிந்த நிர்மலா அலங்காரம் செய்வதை விட்டு வாயிலுக்கு வந்தாள். ஏதோ எண்ணி தீர்மானித்தவள் போல் தெரு வீதியில் இறங்கி நடந்தாள். சென்று கொண்டிருந்த மாப்பிள்ளை வீட்டார் வண்டியை அடைந்தாள்.

'இந்தப் பொண்ணுக்கு இருக்கிற தைரியத்தைப் பாரு; வண்டியோடு போட்டி போட்டு ஓடி வந்துடுத்தே வெட்க மில்லாமல்' என்று பாகிரதி கடிந்து கொண்டதையும் நிர்மலா கேட்டாள். 'கடித வாசகம் ஒண்ணு கூட பொய் இல்லே என்று நிரூபிக்கிறதுக்கு வந்திருக்கா' என்று ஏளனமாகக் கூறினர் மாதவன்.

'ஏன், நீங்கள் பேசாம விருக்கிறீர்கள்; என்னைத் தொட்டு தாலி கட்டிய உங்களிடம் உரிமையோடு கேட்கிறேன்; மொட்டைக் கடிதாசிக்கு மதிப்புக் கொடுத்து ஓட நீங்கள் என்ன படிப்பு வாசனை இல்லாதவர்களா என்ன? தீர விசாரித்து முடிவு செய்து தீர்ப்புத் தராமல் ஓடுவது அழகில்லே என்று நான் சொல்ல வேண்டாமென்று கருதுகிறேன்' என்ருள் நிர்மலா கணேசனைப் பார்த்து. அவள் சாற்றிய குற்றச்சாட்டைக் கேட்டு பதில் தராதிருந்தான் கணேசன்.

'ஏண்டி, அடங்காப்பிடாரி, நாங்க இரண்டு பேரும் பேசறதுபோது அவங்கிட்ட என்னடி பேச்சு! நாங்க இருக்கிறபோதே வக்கீல் மாதிரி கேள்வி போட்டு அதட்டுற உங்கிட்ட நாணம், வெட்கம் ஏதாவது இருக்கா...பேசாம வீட்டுக்குப்போய் ஜாலியா காலங்கழி...ஏ...வண்டி ஏன் நிறுத்திட்டே...ஓட்டு...வேகமாக ஓட்டு' என்று பொரிந்து தள்ளினுள் பாகிரதி. வண்டி



யின் வேகத்திற்கு இணையாக நிர்மலா ஓடினாள். தூரத்தில் நடக்கும் இக் காட்சியை ஊர் மக்கள் கண்டு களித்தனர்.

'ஏன், நீங்கள் பேசாம லிருக்கிறீர்கள்' என்றாள் நிர்மலா.

'மானங் கெட்டவளோடு பேச நான் என்ன மடையனா? போய் உன் பழம் சிநேகிதர்களோடு கொஞ்சு, முகத்திலே இனி முழிக்காதே! உனக்கும் எனக்கும் இருந்த சம்பந்தம் அழிஞ்சு போய்விட்டது' என்று உறுமினான் கணேசன். அவள் நடை தளர்ந்தது. வண்டி வேகமாக சென்று இடைதூரத்தை வெகு ஆழமாக வெட்டிக்கொண்டு சென்றது. நிர்மலா திரும்பினாள். வழியில் ஓடி வந்த சுந்தரேசனையும் அழைத்துக்கொண்டு வீடு நோக்கி வந்தாள். ஊரார் என்வென்னவோ பேசிக் கொண்டார்கள்.

வீடு வந்தடைந்த சுந்தரேசன் படுத்தார். மறுபடி அவர் எழுந்திருக்கவே இல்லை. ஒரு வேளை விதி என்று ஏற்படுத்தி இப்படி மனிதனை ஆட்டுவித்து, அனுபவத்தில் பங்கு பெறுமல் நிற்கும் ஆண்டவனிடம் விபரம் கேட்க விரைந்து விட்டாரோ என்னவோ!

அகலமாகிய நிர்மலாவின் விழிகள் சுருங்கின. எதிரே நின்ற கணேசன் உருவத்தை நோக்கி புன்னகை புரிந்தாள் நிர்மலா! இந்த வரவேற்பு கிடைக்கும் என்று கணேசன் எதிர் பார்க்கவே இல்லை. அவன் மனத்தில் இதுகாறும் அடக்கி வைத்திருந்த விஷயங்களை கொட்ட ஆரம்பித்தான்.

'நிர்மலா...நான் நீ சொன்னபடி விசாரிக்க எண்ணினேன்; இதற்குள் என் தந்தை என் மண ஏற்பாடு செய்தார், நான் முதலில் எவளை நாட்டுப்புறம், கர்நாடகம் என்று வெறுத்தேனோ, அவளே குடும்ப பொறுப்பு ஏற்கத் தகுதி என்று கருதி மணந்தேன். கடந்த பத்தாண்டு வாழ்ந்தேன். நேற்று நான் வீடுவந்து சேர்ந்தபோது உள்ளே என் மனைவி யாருடனோ பேசிக்கொண் டிருந்தாள். அந்தப் பேச்சு என் கண்களைத் திறந்துவிட்டது நிர்மலா!

என்னால் வெறுத்துத் தள்ளப்பட்ட அவள் செய்த சூழ்ச்சிதான் அந்தக் கடிதம். அதற்கு உதவிய அவள் தோழியுடன் தான் அதுபற்றி பேசிக்கொண்டிருந்தாள். அது மட்டுமா! அந்த ஊர்க்காரர் என்று நாலைந்து பேர்கள் வந்து எங்களிடம் வந்து உன்னைப்பற்றி இல்லாத தைக்கூற வைத்ததும் அவள்தான். நிர்மலா நம் வாழ்வு மீது எறிந்த அணுகுண்டு. இது வரை நம் இன்ப நகரை அழித்து நிர்மூலமாக்கி விட்டது!

ஆனால் இப்போது நான் வந்திருக்கிறேன்; மன்னிப்பு பெறுவதற்கு மட்டுமல்ல; அழிந்து போன நம் இன்ப நகரை மறுபடியும் நிர்மாணிப்போம்' என்றான் கணேசன் உணர்ச்சி மிகுதியால். நிர்மலா புன்னகை புரிந்தாள்.

'ஏன் நிர்மலா புன்னகையால் என்னைக் கொல்கிறாய்' என்றான் கணேசன்.

'இப்போது தான் விடிந்திருக்கிறது; யாரும் துணிந்து பகலில் கொலை செய்வது கிடையாது; அதுவும் பெண்கள் ஒருபோதும் அவ்வாறு நடக்க மாட்டார்கள், கணேசன்' என்றாள் நிர்மலா.

'நிர்மலா...உன் பேச்சு...'

'புரியவில்லையா கணேசன்; அணுகுண்டால் அழிந்து விட்ட அந்த நகரம் பழைய பொலிவுடன் நிமிர்ந்து நிற்கலாம்; ஆனால் அணுகுண்டால் அழிந்தவன், உதவியவன் இவர்களை உலகம் என்றுமே மறக்காது கணேசன்' என்றாள் நிர்மலா.

'நிர்மலா......அதுபோல...நீயும் கன்னியாகவே காலங் கழித்து விடலாம் என்று கனவு காண்கிறாயா?...நீ...என் உரிமைப் பொருள் என்பதை மறந்து விடாதே' என்று எச்சரிப்பதுபோல் கூறினான்.

'கணேசன்...நீங்கள் மண வறையில் உரிமை யாக்கிக்கொண்ட நிர்மலா அழிந்து விட்டாள். இப்போது இந்த அநாதை சிறுவர் ஆச்ரமத்தின் சேவகி நிர்மலா' என்றாள் புன்னகையுடன்.

'அப்படியானால் உன் முடிவு...'

'என் முடிவு...என் தந்தை விட்டுப்போன சொத்தில் உண்டாக்கப்பட்ட இந்த அநாதை ஆச்ரமத்தை உயிருள்ள வரையில் சேவகியாக காலங்கழிப்பது; அதற்காக என்னை என்றோ அர்ப்பணித்து விட்டேன் கணேசன்' என்றாள் நிர்மலா. ஆச்ரமத்து மணி மறுபடியும் ஒலித்தது. சிறுவர்கள் எல்லோரும் எழுந்து ஒன்றாக நிர்மலாவுக்கு வணக்கம் தெரிவிக்க வந்தார்கள். எல்லோரும் நிர்மலாவைச் சுற்றி நின்றுகொண்டு வணக்கம் தெரிவித்தனர். நிர்மலா அவர்களை அணைத்துக்கொண்டு முத்தமிட்டாள்.

'அப்படியானால் நிர்மலா...உன் வாழ்வை பாழாக்கத்தான் போகிறாயா.'

'இல்லை கணேசன்; பயன் உள்ள தாக்கிக் கொண்டிருக்கிறேன்.'

'என் வார்த்தைக்கு செவி சாய்க்கப் போவதில்லையா?'

'உங்கள் குரலுக்கு நான் செவி சாய்த்தால்...இதோ இத்தனை சின்னஞ்சிறு குழந்தைகளின் குரல்களுக்கு பாதகம் செய்வதோடு என் அர்ப்பணமும் பாழாகி விடும் கணேசன்...இவர்கள் எல்லாம் ஆண் வர்க்கத்தால் வஞ்சிக்கப்பட்ட பெண்களின் குழந்தைகள்!

# இரண்டு உயிர்கள்

எம். ஜி. முருகானந்தம்

★

சூலூர்க் கிராமத்தில் மாரியம்மன் உற்சவம் நடைபெற்றால் ஏழு நாட்களுக்குத் தொடர்ந்து நடைபெறும். அந்த ஏழு நாட்களில் கேலிக்கைகளும், வேடிக்கைகளும் அதிகமாக நடைபெறும். அவைகளிளெல்லாம் புலி வேஷம் தான் அங்கு நல்ல பெயர் போனது.

அந்தப் புலி வேஷத்தைப் பார்க்கும் போது முனியனின் ஞாபகம் வரத்தான் செய்யும், முனியனைப் பற்றித் தெரிந்தவர்களுக்கு. அந்தப் புலி வேஷம் அவனுக்காகவே நடைபெறுகிற தென்றால் ஆச்சரியம் ஒன்று மில்லை!

வேட்டை யாடுவதென்றால், சாதாரண காரிய மல்ல! வேட்டை யாடுவதற்குத் தகுந்த நெஞ்சுரம் வேண்டும். அதோடு புத்திக் கூர்மையும் மிக மிக அவசியம். முயல் வேட்டை, மான் வேட்டை, பன்றி வேட்டை இவைகளில் பழக்கம் கொண்ட பிறகுதான் யானை, புலி, கரடி வேட்டைக்கு முயல வேண்டும்.

வேட்டைகளிலேயே புலி, சிங்க வேட்டைதான் மிகவும் பயங்கரமானது. கொஞ்சம் தவறி விட்டால் உயிருக்கே ஆபத்து விளையும். துப்பாக்கியை எடுத்த வுடனே குறி தவறாமல் சுடும் திறமை முதலில் வேண்டும். அது மட்டும் போதாது; சமயத்திற்குத் தகுந்த புத்திக் கூர்மையும், கண்ணிமைக்கும் நேரத்தில் தீர்மானம் செய்து காரியத்தில் இறங்கும் மனோ தைரியமும், வேகமும் வேண்டும். இதில் அணுவளவாகிலும் தவறினால் நிச்சயம் புலியின் கையில் சிக்கி வேட்டைக் காரனின் உயிர் உடலை விட்டுப் போய் விடும் என்பது மட்டும் நிச்சயம்.

பொன்னி மலைக் காட்டில் ஏராளமான புலிகளும், யானைகளும், கரடிகளும், கலைமான்களும் உள்ளன. மிருக வேட்டைக்குப் பெரிய வேட்டைக் காரர்களெல்லாம் பிரதி தினமும் இம் மலைக்குத்தான் செல்லுவார்கள். இந்தக் காட்டில் வேட்டையாடுவ தென்றால் சாதாரண காரிய மல்ல. எத்தனையோ பிரபல வேட்டைக் காரர்க ளெல்லாம் இங்கு உயிரை விட்டிருக்கிறார்கள். ஆனால் புலியை வேட்டை யாடியவர்கள் ஒருவரு மில்லை.

பொன்னி மலைக்கு அடுத்த நான்காவது மைலிலுள்ள சூலூர் கிராம்த்தில் வசிக்கும் முனியன் புலி வேட்டையில் பிரக்யாதி பெற்றவன். 'முனியன்' என்றாலே பிரபல வேட்டைக் காரன். அவனுடைய சாமர்த்தியம் யாருக்கு வரும்? இதுவரையிலும் எட்டுப் புலிகளின் உயிரைக் குடித்திருக்கிறதே, அவனுடைய துப்பாக்கி!" என்று ஆச்சரியத்தோடு பேசுவார்கள்.

உண்மையிலேயே பெயருக்குத் தகுந்த உடல் வனப்பும், முறுக்கி விட்ட மீசையும், எடுப்பான முகத் தோற்றமும், நல்ல உயரமும், "அவனொரு பலசாலி" என்பதை எடுத்துக் காட்டும்.

முனியன் இதுவரையிலும் எட்டுப் புலிகளின் உயிர்களை எமன் கையில் ஒப்படைத்திருக்கிறான். ஒரு புலியை வேட்டையாடி விட்டாலே 'பெரிய வேட்டைக்காரர்' என்று யாவரும் புகழ்வார்கள். எட்டுப் புலிகளின் உயிரைப் போக்கிய முனியனின் பெயர் அந்த மாவட்டத்திலேயே ஏன், அந்த மாகாணத்திலேயே நல்ல புகழ்பெற யாரைக் கேட்க வேண்டும்?

முனியனுடைய துப்பாக்கிக்கு புலிகளைத் தவிர எத்தனையோ காட்டெருமைகள், காட்டுப் பன்றிகள், கலைமான்கள், முரட்டு யானைகள், கரடிகள், எண்ணற்ற பறவைகள் இவ்வளவும் இரையாகி யிருக்கின்றன. இத்தனை மிருகங்களையும் அவன் ஏமாற்றி வேட்டையாடிய தில்லை. நேருக்கு நேர் வேட்டையாடி யிருக்கிறான், வேட்டையாடுவதில் அவ்வளவு திறமை வாய்ந்தவன்.

அன்று முன் நிலவு காலம்! முனியன் தன் துப்பாக்கியைத் தூக்கி தோளில் வைத்துக் கொண்டு பொன்னி மலைக் காட்டுக்குள் நுழைந்தான். அவன் எளிதாக வழி வகுத்துக் கொண்டு வெகுதூரம் தைரியமாகச் சென்று கொண்டிருந்தான்.

---

இவர்கள் எல்லாம் வளர்ந்து மணமாகி அக் காட்சியை கண்டு கண்டு மகிழ்வதே என் தொண்டு' என்றாள்.

கணேசன் வேகமாக வெளியேறினான். அணுக்குண்டால் அழிக்கப்பட்ட ஜப்பானிய நகரம் மறுபடியும் பூரணப் பொலிவுடன் விளங்கியபோது, அதுவரை அதிகாரம் செலுத்தி அழித்தவன் ஓடுவதைப்போ லிருந்தது கணேசனின் ஓட்டம். அதோ நிர்மலாவின் பிரார்த்தனைக்குரல் அநாதை ஆசிரம சிறுவர்கள் குரலுடன் இழைந்து ஆண்டவன் பாதத்தை அடைந்து கொண்டிருக்கிறது; இனி அவள் எந்தக் குண்டுகளுக்கும் அஞ்ச மாட்டாள்!

பொன்னி மலைக் காடு லட்சக் கணக் கான மரங்களையும், பயங்கரப் பள்ளத் தாக்கு களையும், ஆயிரக் கணக்கான புதர்களையும் கொண்டதாகும். பகல் நேரத்தில்கூட அந்தக் காட்டிற்குள் வெளிச்சம் புகாதபடி அவ்வளவு அடர்த்தியாக மரங்களும், கொடிகளும் ஒன்றோடொன்று பின்னிக் கிடக்கும். எங்கும் ஒரே பேரிசைச்சலும், அருவிகளின் 'சல சல' வென்ற சப்தமும் நிறைந்திருக்கும். ஆனல் இரவில் இரைச்சல் சற்று குறைந் திருக்கும்.

ஒரு குன்றின் ஊற்றிலிருந்து தண்ணீர் 'சிலு சிலு' வென்று ஓடி வந்து ஒரு பெரிய பள்ளத்தை நிரப்பி வழிந்து கொண் டிருந்தது. அந்த நீர்நிலையை சுற்றி சிறிது காலி யிடம். அதற்கு அடுத்து மற்ற இடங்களைப் போல் ஒரே மரக் கூட்டங்கள்.

இந்த இடத்திற்கு முனியன் வந்ததும் அங்கிருந்த பாறை மீது துப்பாக்கியை வைத்து விட்டு உட்கார்ந்தான். இதே இடத் தில் முனியன் நீரருந்த வந்த இரண்டு புலிகளை யும், மற்றும் மான், எருமை, பன்றி முதலி யவைகளை வேட்டையாடி யிருக்கிருன். அன் ெருரு நாள் இதே இடத்தில்தான் முனியனு டைய குறிக்குத் தவறி ஓடி விட்டது ஒரு புலி. அவன் வைத்த குறி இது வரையிலும் தவறிய தில்லை. அதனல் அந்தப் புலியை எப்படி யாவது வேட்டையாடி விட வேண்டும் மென்று அவனுக்கு ஒரு ஆவலும், ஆத்திரமும் இருந்து வந்தது. அந்தப் புலியை நினைத்துக் கொண்டுதான் இந்த இடத்துக்கு வந் தான்.

அவன் அந்தப் புலியைப் போல் இது வரையிலும் கண்டதில்லை. நல்ல உடல் உறுதி கொண்டது. நல்ல பள பளப்பான வரிக் கோடுகளையும், அதனுடைய பார்வையையும் பார்க்கும்போது மிகவும் பயங்கரமாக இருக்கும்.

நிலவும் மறைந்தது. எங்கும் இருள் சூழத் தொடங்கியது. அதே சமயத்தில் மெது வாக வந்து கொண்டிருந்தது ஒரு மிருகம், முனியன் கைகள் துப்பாக்கியை இறுக்கிப் பிடித்தன. கண்கள் கூர்ந்து நோக்கின, வந்த மிருகத்தை. என்ன ஆச்சரியம்! அவன் ஆவ லோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த அவனு டைய எதிரியான அதே புலிதான். அது அவனைக் கவனிக்கவில்லை. நீர் நிலையை நாடி வந்து நீரருந்திக் கொண்டிருந்தது. இது தான் நல்ல சமயமென்று குறி வைத்தான். இதோ ஆச்சு! அந்தப் புலியின் உயிர் பறக்கப் போகிறது. திடீரென துப்பாக்கிக் குண்டு பாய்வதற்கும் அது தண்ணீர் தடா கத்திலிருந்து தலையை மேலே தூக்கவும் சரி யாக இருந்தபடியால், ஒரு காதை மட்டும் குண்டு பதம் பார்த்து விட்டுச் சென்றது.

இதைச் சிறிதும் எதிர்பார்க்காத முனியன் சிறிது ஏமாந்து விட்டான். இந்த ஒரு குண்டு அதனுடைய உயிரை உறிஞ்சி விடுமென்று எண்ணி விட்டான். அவன் மறுபடியும் சுட எண்ணியபோது அது அங்கு இல்லை. ஒரே தாவில் மறைந்து விட்டது. அவன் தற்பாது காப்புக்காக சுட்ட இரண்டாவது குண்டும் வீணுகி விட்டது.

முனியன் கவலையோடு வீடு திரும்பிக் கொண்டிருந்தான். வழியில் அந்தப் புலியைப் பற்றித்தான் சிந்தித்துக் கொண்டு வந்தான். 'அது நம்ம கையால் தான் சாகும். அதைச் சுட்டு வீழ்த்தா விட்டால் நான் முனியன் இல்லை' என்று அதன் மேல் கடுங் கோபங் கொண்டு சபதம் செய்தான்,

அதே சமயத்தில் காதை யிழந்த 'மூளி'ப் புலியும் முனியன் மீது 'வன்மம்' வைத்தது. 'அவனை எப்படியாவது கொன்று விட வேண் டும். இல்லா விட்டால் நமது உயிர் போவது மட்டும் நிச்சயம். அதற்குச் சிறிதும் இடம் கொடுக்கக் கூடாது' என்று அந்த முரட்டுப் புலியும் நினைத்தது.

அன்றையிலிருந்தே அந்தப் புலிக்கு 'மூளி' என்று பெயர் வைத்தான், முனியன். அதன் பிறகு எத்தனையோ தடவைகள் அவன் துப் பாக்கிக் குண்டுக்குச் சிக்காமல் எப்படியோ தப்பித்து 'ஏய்த்து' வந்தது.

மாதங்கள் பல மறைந்தன. மூளிப் புலி இது வரையிலும் ஐந்து பேரைத் தனக்கு இரையாக்கிக் கொண்டது மல்லாமல், கணக் கற்ற ஆடு, மாடுகளையும் எளிதாக அடித்துச் சாப்பிட வாரம்பித்தது. விபரமறிந்த கிராம வாசிகள் முனியனிடம் முறையிட்டார்கள், புலியின் அடையாளத்தைச் சொல்லி.

"இருக்கட்டும்! அதன் உயிர் என் கையால்தான் போகும். அதனுடைய காதைக் கூட நான்தான் காணுமல் செய்தேன்." என்று ஊர் ஜனங்களுக்கு ஆறுதல் சொல்லுவான்.

மூளிப் புலியினுடைய பாதி அடையாளங் கள் அவனுக்கு நன்ருகத் தெரியும். மூளிப் புலியும் முனியனுடைய மனித வாடையை நன்ருக அறிந்து வைத்திருந்தது. மூளியும் முனியனை மடக்குவதற்குச் சமயத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்தது. இரவு நேரங்களில் அது மெதுவாகவும், நிதானத்தோடுந்தான் இரை தேட வரும். காட்டிலே காய்ந்து கிடக் கும் சருகுகளைக்கூட மெதுவாக மிதித்து

உலவி வந்தது. மூளியும் முனியன் மேல் ஒரு கண் வைத்திருந்தது. அதற்கு தன்னுடைய காதை இழந்தது முதல் முனியன் மேல் கடுங் கோபங் கொண்டிருந்தது. இருந்தாலும் முனியனிடம் அதற்குப் பயமும் குடி கொண்டிருக்கத்தான் செய்தது. 'அவன் பெரிய தந்திர சாலி' என்று அதுவும் தெரிந்து வைத்திருந்தது.

கிராமவாசிகள் மூளியின் தொல்லையைப் பிரதி தினமும் முனியனிடம் சொல்லி முறையிடத் தவறவில்லை. அவனும் அந்த மூளி மீது கடுங்கோபம் கொண்டான். ஒரு கண்ணும் வைத்திருந்தான். இப்படி மனிதனும், மிருகமும் ஒருவருக்கொருவர் தீராத பகையை வளர்த்து பழி வாங்கவும் காத்திருந்தார்கள். கிராம வாசிகள், "முனியனுடைய கை வரிசை, அந்த மூளியிடம் செல்லாது" என்று பேசிக் கொண்டது காற்று வாக்கில் அவனுடைய காதுக்கு எட்டியது.

"மூளியிடந்தான் முனியனுடைய உயிர் போகுமோ!" என்றும், "முனியனுடைய கையால் தான் மூளிப் புலி சாகும். ஏனென்றால் மூளியிடம் அவ்வளவு கோபம் அவனுக்கு" என்றும் பேசிக் கொண்டது அவனுடைய காதுக்கு எட்டாமலில்லை. இதெல்லாம் அவனுடைய கோபத்திற்குத் தூபமிட்டுக் கொண்டிருந்தன. முனியனும்; "பார்த்து விடுவோம்! என் உயிர் அதனுடைய கையிலா, அல்லது அது உயிர் என் கையிலா?" என்று வாய்விட்டுச் சொல்லிக் கொண்டு, அன்று துப்பாக்கியைத் துடைத்துத் தயார் செய்து தோளில் தூக்கி வைத்துக் கொண்டு பொன்னி மலையை நோக்கிப் புறப்பட்டான், வீர நடையோடு. "அந்த மூளியிடம் கூட நேருக்கு நேர் தான் சண்டை செய்ய வேண்டும்" என்று ஒரு வீர எண்ணம் அவன் மனதிலே குடி கொண்டிருந்தது.

அன்று பௌர்ணமி யானபடியால் எங்கும் பகல் போன்ற ஒளி நிரம்பியிருந்தது. முனியன் வெகு தூரம் நடந்து வந்து அந்தப் பழைய இடமான நீர் நிலையில் வந்து நின்று, ஒரு பெருமூச்சு விட்டு உட்கார்ந்தான். அவன் இந்த இடத்திற்கு வந்து சுமார் இரண்டு மாதமாகி விட்டது.

மூளியும் முனியனைப் பார்த்து பல நாட்களாகி விட்டது. அவன் இந்த நீர் நிலைக்கு வராததைக் கண்ட மூளி தாராளமாக இரவுக் காலங்களில் அங்கு வந்து பல மான்களை அடித்துக் கொன்றிருக்கிறது. மூளிக்கு முனியனிடமுள்ள கோபம் கொந்தளித்ததே தவிர, அதற்குக் குறையவில்லை.

முனியனும் வெகு நேரமாகி மூளிப்புலியின் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தான். நிமிடங்கள் மணிகளாக மாறி மடிந்து கொண்டே யிருந்தது. நீர் நிலைக்கு இதுவரை எத்தனையோ மிருகங்கள் வந்து தங்கள் தாகத்தைத் தணித்துக் கொண்டு சென்றன. அவைகள் மீதெல்லாம் முனியனுக்கு மனம் செல்லவில்லை. அவன் மூளியின் வருகையைத்தான் முழு மனதுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

நடுச்சாமம்!

மலையில் வெகு தூரம் ஏறி வந்த களைப்பால் தூக்கம் கண்ணைச் சுற்றுவது போலிருந்தது, முனியனுக்கு. காற்றும் 'குளு குளு' வென்று வரவே அந்தப் பாறைமீது சிறிது சாய்ந்து கண்களை அவன் மூடிய கால் மணி நேரத்தில் அவன் முன்னிலையில் ஒரு ஆச்சரியமான சம்பவம் நடந்து கொண்டிருந்தது.

பல இடங்கள் சுற்றி அலைந்தும் இரை கிடைக்காத மூளிக்குக் கடுங் கோபமும், பசியும் விநாடிக்கு விநாடி அதிகரித்தது. கடைசியாக அந்த நீர் நிலைக்கு வந்தது மூளிப் புலி. அதே சமயத்தில் கலைமான் ஒன்று நீரருந்திக் கொண்டிருந்தது. உடனே அதன் மீது பாய எத்தனித்தது. இதை அந்தக் கலைமானும் கண்டு கொண்டது. அதுவும் தப்பிக்க முயன்றது. மூளி இதோ பாய்ந்து விட்டது. என்ன ஆச்சரியம்! அந்தக் கலைமான் உயிரை வெறுத்துக் கொண்டு ஒரே 'தாவில்' ஓடிவிட்டது. மூளியின் பாய்ச்சல் ஒரு அடி தவறி விட்டது. இந்தச் சந்தடியில் கண் விழித்துக் கொண்டான், முனியன். உடனே துப்பாக்கியைக் கையில் எடுத்துக் குறி வைக்க முயன்றான்.

ஏமாற்றத்தோடு திரும்பிய மூளியின் கண்களுக்குத் தப்பவில்லை முனியன். மூளியினுடைய கண்கள் முனியனை கோரமாகவும், கொடூரமாகவும், ரத்த வெறியோடும் பார்த்தது.

முனியனுடைய கண்களும் கோபத்தால் சிவப்பேறி இருந்தன. "பார்த்து விடுகிறேன், உன்னை! யார் உயிர் யார் கையிலென்று." என்று உறுமிக் கொண்டே எழுந்து உட்கார்ந்த நிலையில் கையில் துப்பாக்கியை மூளிக்கு நேராகப் பிடித்திருந்தான். அவன் அதைச் சுட சரியான குறி இன்னும் வைக்கவில்லை. அதற்குள் அது அவனைக் கண்டு விட்டது...... . தவிரவும் குறி தவறி விட்டால் தன் உயிர் நிச்சயம் அதனுடைய கையில் என்று அவனுக்குத் தெரியும். அதனால் யோசிக்கக் கூட சந்தர்ப்பமும், அவகாசமும் இல்லை. இந்த நிலையில் யாருக்கும் மனத் தடுமாற்றம் ஏற்படத்தான் செய்யும்.

மூளியும் முனியன்மீது பாய்வதற்குத் தயாராக இருந்தது. அதனுடைய உடலெல்லாம் உறுதி கொண்டது. பாய்வதற்கு தூரத்தையும் அளந்து கொண்டது.

முனியனும் அது நம்மீது பாயத் தயாராகி விட்டதென்பதை அறிந்து கொண்டான். நாம் கொஞ்சம் அசைந்தாலும் பாய்ந்துவிடும். இனி சுடுவதைத் தவிர வேறு வழியில்லை என்று எண்ணிக் கொண்டே சுடத் தயாரானன்.

ஆம்! எதிரிகள் இருவரும் நேருக்கு நேர் சந்தித்து விட்டார்கள். தீராத பகையை இப்பொழுது தீர்த்துக் கொள்ள இரண்டு உயிர்களும் ஒருமைப் பட்டு விட்டன. எமனுடைய 'பாசக்' கயிறு இங்கு மங்குமாக ஊசலாடிக் கொண்டிருந்தது. இரண்டு உயிர்களும் துடித்துக் கொண்டிருந்தன.

ஆஹா! மூளி பாய்ந்தது! முனியன் சுட்டான்! இரண்டு பேரும் தவற வில்லை! முனியன் வைத்த குறி எப்படியோ மூளியின் உயிரைக் குடித்துக் கொண்டிருந்தது. அதே சமயத்தில் முனியனுடைய கழுத்தும் மூளியின் வாயில் சிக்கி அதனுடைய ரத்தப் பசியைத் தணித்துக் கொண்டிருந்தது. முனியனுடைய உயிரும், 'உன் உயிரை நான் குடித்து விட்டேன்' என்று பெருமைப் பட்டுக் கொண்டே காற்றோடு கலந்தது! மூளியினுடைய உயிரும், 'உன் ரத்தத்தை நானும் குடித்து என் பசியைக் குறைத்துக் கொண்டேன்' என்று உறுமியது.

ஆம்! அந்த இரண்டு உயிர்களும் தங்கள் பகையைத் தீர்த்துக் கொண்டன.

முனியனுடைய தீரச் செயலையும், தியாகத்தையும் கண்ட மக்கள் வருஷா வருஷம் குளூரில் நடைபெறும் மாரியம்மன் திருவிழாவில் புலி வேஷம் போட்டு அவனுடைய ஆத்மா சாந்தியடைய இன்றும் அஞ்சலி செலுத்தி வருகிறார்கள்.


**விளம்பர விகிதம்**

மேலட்டைக் கடைசி பக்கம் 2 கலர் ரூ. 120-0-0

„ 2-வது, 3-வது பக்கங்கள் ஒரே கலர் ஒவ்வொன்றுக்கும் ரூ. 80—0—0

உள் பக்கங்கள்

„ முழுப் பக்கம் ரூ. 70—0—0

„ அரைப் பக்கம் ரூ. 37—8—0

நீண்டகால ஒப்பந்தங்களுக்கு "பிரசண்ட விகடன்" விளம்பர மானேஜருக்கு எழுதி அறிந்து கொள்க.


# 'ரேடியோ'

'வண்ணமுத்து'

★

தசையுமின்றி ரத்தமின்றி
சப்தமிங்கு தருகுவேன்
தலையுங் கையு மில்லையானல்
தாளம் போட்டு பாடுவேன் 1

கண்ணு மூக்கு வாயு மில்லை
காலை மாலை பேசு வேன்
கண்டங் களின் ஊர்கள் தம்மை
கணப் பொழுதில் எட்டுவேன் 2

முகமுழுது மெண்களுண்டு
முத்து வரிசைப் பல்லு போல்
முள்ளு நாக்குக் கொண்டு தொட்டு
முற்றுங் களிக்கப் பாடுவேன் 3

ஐந்து கண்டம் திசை களெட்டில்
ஆட்சி செய்யும் மொழிகளை
ஆசிரியர் உதவியின்றி
அப்படியே பேசுவேன் 4

இமையில் உமக்குச் செய்தி சொல்லி
இன்ப துன்ப மாக்குவேன்
ஏழை செல்வர் மேதை பேதை
எல்லோர் சொல்லும் கொட்டுவேன் 5

சாரமுள்ள மின்னின் சார
சக்தியாலே வாழுவேன்
தாழ தூக்கி பேசிப் பாடும்
சாவி கொண்டு சாடுவேன் 6

எந்தன் பெயர் ரேடியோதான்
என்று சொல்லு வார்களே
ஏழை செல்வர் ஏகமாக
இன்பமுற்று கேட்பரே. 7

சிறு தொடர் கதை



# வீழ்ந்த தாரகை

எஸ்.என்.கே.ராஜன்

### முன்னுரை

அன்று சென்னை நகரமெங்கும்—ஏன்? தமிழ்நாடு முழுவதிலும் ஒரே பரபரப்பு! பெயரும் புகழும் பெற்ற பிரபல சினிமா நடிகை புஷ்பாவின் தற்கொலையைப் பற்றியே எங்கும் பேச்சாக இருந்தது. சென்னையில் வெளியான எல்லாப் பத்திரிகைகளிலும் நடிகையின் தற்கொலைச் செய்தி முதல் பக்கத்தில் கொட்டை எழுத்துக்களில் பிரசுரிக்கப்பட்டுக் காற்றாய்ப் பறந்தது! சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் நர்ஸாக இருந்த நான் அன்று காலை வழக்கம்போல ஆஸ்பத்திரிக்குப் போகும் வழியில், பத்திரிகையில் இறந்த நடிகையைப் பற்றிப் பிரசுரிக்கப்பட்டிருக்கும் விஷயம் என்னவென்று அறிய ஆவல் கொண்டு ஒரு பத்திரிகையை வாங்கிப் படித்தேன். பிரசுரிக்கப்பட்டிருந்த செய்தி எனக்கு மிகுந்த வியப்பை விளைவித்தது.

நடிகை புஷ்பாவின் வாழ்க்கைக் குறிப்பு மேலோட்டமாகக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் அவள் கலைக்குச் செய்த சேவை, அவள் நடித்த படங்கள், அடைந்த புகழ் முதலிய எல்லா விஷயங்களுக்கும் இறுதியில் காணப்பட்டதாவது:

‘‘...இவ்வாறு தன் இனிய குரலின் மூலமும், லளிதமான நடனத்தின் மூலமும், உன்னத நடிப்பின் மூலமும் மங்காப் புகழ்பெற்று, ரசிகர்களின் மனதிலே நிரந்தர இடம் பெற்றுவிட்ட பிரபல சினிமா நடிகை ஸ்ரீமதி புஷ்பா தன் வாழ்க்கையின் மேல் ஏனோ வெறுப்புக் கொண்டு தற்கொலை புரிந்து கொண்ட செய்தியை அறிந்த சினிமா உலகம் மிகவும் வருந்துகிறது!...’’ சினிமா வானில் சுடர்விட்டுப் பிரகாசித்த ஒரு நட்சத்திரம் வீழ்ச்சியடைந்ததை நினைக்கச் சினிமாவில் சம்பந்தப்பட்டவர்களும், சினிமா ரசிகர்களும், பொதுமக்களும் வருந்தாமலிருக்க முடியாது. ஸ்ரீமதி புஷ்பாவின் பெற்றோருக்கும், அவளுடைய கணவர் ஸ்ரீ ஜகதீசன் அவர்களுக்கும் எங்கள் மனப்பூர்வமான அனுதாபம். ஸ்ரீமதி புஷ்பாவின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்...’’ என்றிருந்த செய்தியைக் கண்ட எனக்கு என்னையுமறியாமல் சிரிப்பு வந்துவிட்டது. அப்பொழுதுதான் பத்திரிகைகள் எவ்வளவுதூரம் உண்மை வரலாற்றை அலசிப் பார்த்துச் செய்தியைப் பிரசுரிக்கின்றன என்பதை நான் நன்கு அறிந்தேன்.

பத்திரிகைகளில் நடிகையின் தற்கொலை விஷயம் வெளியானதற்கு முன் தினம் இரவு நடிகை புஷ்பா ஜெனரல் ஆஸ்பத்திரியில் மாண்டாள். புஷ்பா தன் மார்பில் ரிவால்வரினால் சுடப்பட்ட காயத்துடன் ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டாள். நானும், என்னைப் போன்ற மற்ற நர்ஸுகளும், டாக்டர்களும் சேர்ந்து காயத்திற்குச் சிகிச்சை செய்து ஒரு தனி அறையில் படுக்க வைத்தோம். பிறகு போலீஸார் வந்து புலன் விசாரணை செய்தார்கள். புஷ்பா தன் வாக்கு மூலத்தில் வாழ்க்

கையில் ஏற்பட்ட வெறுப்பின் காரணமாகத் தற்கொலே செய்து கொண்டதாகவும், தன் மரணத்திற்கு வேறு யாரும் காரணம் இல்லே என்றும், வாக்கு மூலம் கொடுத்தாள். போலீஸார் அவற்றை எழுதிக்கொண்டு போய்விட்டனர். இரவு நேரத்தில் புஷ்பாவுக்குத் துணையாக இருந்து வேண்டிய உதவிகளேச் செய்யும் பொறுப்பு எனக்கு விடப்பட்டது.

அப்பொழுது புஷ்பா என்னேப் பார்த்து, "ஸிஸ்டர்! நான் ஒன்று உங்களேக் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் தயவு செய்து அதை மறுக்கக்கூடாது. வாழ்க்கையில் நான் ஒரு பாபி! நான் சாவது நிச்சயம்...சாகத்தான் வேண்டும்! அப்படிச் சாவதற்கு முன் என் வாழ்க்கைச் சரிதத்தை உங்களிடம் சொல்லி என் மனப்புண்ணே ஆற்றிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நீங்கள் அதைக் கவனமாகக் கேட்டு, சோக வரலாருக எழுதி நாவலாக வெளி யிடுங்கள்......நான் இறப்பது இப்பொழுதோ, இன்னும் சற்று நேரமோ என்றிருக்கிறது. அதிஷ்ட மிருந்து என் வாழ்க்கைச் சரிதை முழுவதும் சொல்லும் வரை என் உயிர் தங்கினல் இவ் வரலாறு என்னேப் போன்ற சகோதரிகளுக்குப் பெரிதும் பயன் படும்!" என்ருள்.

நான் புஷ்பா சொன்னதை வெகு கவனமாகக் கேட்டுக்கொண்டு வந்தேன். நடு நடுவே மறந்து போகாம லிருக்கக் குறிப்புகளும் எழுதிக்கொண்டு வந்தேன். அவள் சொன்ன வரலாறு இதுதான்.

## வரலாறு

என் தந்தை பட்டாபுரம் என்ற சிறிய கிராமம் ஒன்றில் ஏழை நெசவாளி. எனக்குப் பத்து வயதானபோது அக்கம் பக்கத்தார் என்னேப்பற்றிப் பலவிதமாகப் பேசிக் கொண்டதை நான் அடிக்கடி கேட்டிருக்கிறேன். "புஷ்பா ஒரு ஏழை நெசவாளியின் மகளாகவே இருக்க முடியாது. அவளுடைய பொன் நிறமான மேனியைப் பாருங்கள். அவளுடைய கூந்தல் தான் எவ்வளவு நீளம்! அவளது தோற்றம்தான் எவ்வளவு வசிகரமாகவும், கம்பீரமாகவும் இருக்கிறது! பத்து வயதுச் சிறுமியான புஷ்பாவின் வெகு நுட்பமான வசீகர சௌந்தரியமும், நடையலங்காரமும், பேச்சு நயமும், குரல் இனிமையும், அப்பப்பா!...அவள் ஏதோ ஒரு ராஜா வீட்டில் ராஜகுமாரியாகப் பிறந்து, அரசசபையை அலங்கரிப்பவளாக இருந்திருக்க வேண்டும்! ஆனல் துரதிர்ஷ்டம் அவளே ஒரு ஏழை நெசவாளிக்கு மகளாகப் பிறக்க வைத்து விட்டது. அவள் எழில் மங்கை! அழகு ராணி!" என்றெல்லாம் என்னேப்பற்றி வர்ணிப்பார்கள்.

ஆம்...அவர்கள் வர்ணிப்பில் அர்த்தமும் உண்மையும் இருக்கத்தான் செய்தது! ஆனல் அத்தனே புகழ்ச்சிகளுக்கும் இடையில் நான்



ஒரு ஏழை நெசவாளியின் மகள்தான்! என் முன்னோர்களைப் போலவேதான் என் தந்தை கூடத் தறியையும், ராட்டையையும் கொண்டு, துணிகள் நெய்து சொற்ப வருமானத்தைப் பெற்று தரித்திரத்தால் வாடும் நாராயணன் தான். ஆம்...அவர் பெயர் நாராயணன்! என் அழகின் காரணமாக என் தந்தை ஒரு தரித்திர நாராயணன் என்பதை யாராலும் மறுக்க முடியாது!

எங்கள் வீடு சாதாரண மண் சுவரா லான அற்பமான சிறு குடிசை. அது ஒரு மூங்கில் தட்டியால் சரி பாதியாகத் தடுத்துப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒரு பாதியில் என் தந்தை தன் தறியைப் போட்டிருந்தார். மற்றொரு பாதியில் சமையல் செய்வதும், படுத்து உறங்குவதும் ஆகும். என் தந்தை தறியில் உட்கார்ந்து காலை முதல் இரவு வரை சதா துணி நெய்வார். சனிக்கிழமை ஒருநாள் தான் தறிக்கும், என் தந்தைக்கும் ஓய்வு. எங்கள் கிராமத்திற்கு ஐந்து மைல் தூரத்தில் இருந்த ஓர் ஊரில் சனிக்கிழமை சந்தை கூடுவதால், அவர் அந்த வாரமெல்லாம் நெய்த துணிகளைக் கொண்டு போய் அச் சந்தையில் விற்று வருவார். என் தாய்க்குச் சமையல் செய்யவும், என்னுடைய நான்கு வயதுத் தம்பி, ஒரு வயதுத் தங்கை ஆகியோரைப் பார்த்துக் கொள்ளவும் நேரம் சரியாக இருக்கும். என் தாய்க்குத் துணையாக நானும் சில வேலைகளைச் செய்வேன். எனக்குப் பத்து வயதானதிலிருந்து தனியே குடத்தை இடுப்பில் வைத்துக்கொண்டு ஆடிப் பாடி விளையாடிக் கொண்டே தண்ணீர் கொண்டு வரப்போனால் ஆனந்தமாக நீந்தி விளையாடிக் களைத்த பிறகு தான் தண்ணீர்க் குடத்துடன் வீடு திரும்புவேன். வெகுநேரம் வீடு திரும்பாத என்னை எதிர்பார்த்து, வசை புராணத்துடன் வாயிற்படியில் நின்று வரவேற்பாள் என் தாய்.

என்னுடைய சிறு பிராயத்திலேயே நான் அந்தக் கிராமத்துப் பையன்களுடன் சேர்ந்து விளையாடுவேன். முரட்டுத்தனமான நாட்டுப்புற விளையாட்டுக்கள் எல்லாவற்றையும் விளையாடுவேன். மரங்களின் மீது ஏறிப் பறவைகளின் கூடுகளைப் பிரித்து, முட்டைகளை உயரத்திலிருந்து கீழே வீசி எறிந்து, அவை உடைந்து சிதறுவதைப் பார்த்துப் பார்த்து மகிழ்வேன். எனக்கும் என் விளையாட்டுத் தோழர்களுக்கும் சண்டை, சச்சரவு வந்தால் அவர்களை நன்றாகப் புடைத்துத் தீர்த்து விடுவேன். என்னுடன் விளையாட வரும் கோழைப் பையன்களுக்கு என்னைக் கண்டால் நடுக்கம் தான்!

மேலும் நான்கு ஆண்டுகள் உருண்டோடின. எனக்குப் பதினான்கு வயது முடிவடைந்தது. நான் முன்பு செய்து வந்த வேடிக்கை விளையாட்டுக்கள் சிறிது சிறிதாக என்னை விட்டு விலகின. என் விளையாட்டுத் தோழர்களை விட்டு, என் சம வயதுத் தோழிகளுடன் விளையாடினேன்.

என்னுடைய சிறு வயதிலிருந்தே வெகு இனிமையாகப் பாடவும், நாட்டியம் ஆடவும் எனக்குத் தெரியும். என் கிராமத்தில் எங்காவது கலியாணம், காட்சி என்றால் அங்கே ஆடவும் பாடவும் நான்தான் ஆஜராவேன். ஆனால் உண்மையில் இவற்றை யாரும் எனக்குக் கற்றுக் கொடுக்கவில்லை. எப்பொழுதாவது எங்கள் கிராமத்திற்கு வரும் நாடகம், தெருக்கூத்து, டூரிங் சினிமா முதலியவற்றில் வரும் நாட்டியத்தைக் கவனமாகப் பார்த்து அதேபோல ஆடிப் பழகுவேன்; பாடிப் பார்ப்பேன். அதில் வெற்றியும் காண்பேன். எங்கள் கிராமத்திற்குப் பிச்சைக்காரர்கள் வருவார்கள். ஒற்றைக் கம்பித் தம்புரா அல்லது சிறிய ஹார்மோனியம் ஆகியவற்றை வைத்துக்கொண்டு பாடியவாறு வீட்டுக்கு வீடு பிச்சை எடுத்துக்கொண்டே வருவார்கள். அப்பொழுதெல்லாம் அவர்களுடைய பாட்டிலே என் மனம் லயித்து விடும். அவர்களுடைய ஜீவனற்ற விரல்கள் அந்த இசைக்கருவிகள் மீது வருடி விளையாடுவதைக் கூர்ந்து கவனிப்பேன். பாட்டுக்களையும் இனிமையாகப் பாடுவார்கள். அப்படி இனிமையாகப் பாடுகிறவர்களைக் கண்டால் அவர்களை அதிக நேரம் பாட வைத்து, அதிகப் பிச்சை போட்டு அனுப்புவேன். இயற்கையாகவே என் குரல் இனிமை வாய்ந்ததாக இருந்தது. அதனால் நல்ல பாட்டுக்களை கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆவலால் தூண்டப்பட்டவளாய் அவற்றைத் திரும்பப் பாடிக் காட்டச் சொல்லுவேன். அதற்காக நான் அப் பிச்சைக்காரர்களுடன் தனி இடத்திற்குச் சென்று அவர்கள் பாடும் பாட்டுகளை நன்றாகக் கற்றுக்கொண்டு வருவதும் உண்டு. அதைக் கண்டு அக் கிராமத்தில் பலர் பலவாறாகப் பேசுவர். ஆனால் நான் அதைப் பொருட்படுத்தவே இல்லை.

நான் வெகு இனிமையாகப் பாடுவதைக் கேட்டு என் தாய் வியப்படைவாள்: என் தந்தை என் பாட்டைக் கேட்டு அனுபவிக்கவோ, அன்றி அவருடைய வேலை விரைவாக நடக்கவேண்டும் என்றோ அவருக் கருகில் என்னை உட்கார வைத்துப் பாடச் சொல்லிக் கேட்டு மகிழ்வார். என் இனிய குரலையும், உணர்ச்சி ததும்பிய பாட்டையும் கேட்கக் கேட்க அவருடைய கைகள் வேலையில் முன்னை விட வேகமாக ஓட ஆரம்பிக்கும். சில சமயங்களில் அவர் என்னைக் கட்டி யணைத்துக் கொண்டு, "புஷ்பா! எல்லோரையும் மயக்கும் அழகே உருவான நீ, வசிகரிக்கும் இனிமையான குரலையுடைய நீ ஏன் இந்தத் தரித்திர

னுக்கு மகளாகப் பிறந்தாய்? உன்னுடைய குரலினிமை இந்த உலகத்தையே மறக்கச் செய்து விடுகிறது. ஆனால் இந்தப் பாக்கியம் இன்னும் எத்தனை நாட்களுக்கு? நீ வளர்ந்து பெரியவளாகி விட்டாய். இனி நான் உன்னை இழக்கவேண்டியது தான்!" என்று துக்கம் தொண்டையை அடைக்கக் கூறுவார்.

அப்பொழுது எனக்குக் கலியாண வயது என்றும், மற்றப் பெண்களையும்போல நானும் கலியாணம் ஆனவுடன் என் பெற்றோர்களை விட்டுக் கணவன் வீடு செல்லவேண்டும் என்பதை நான் அறியவில்லை. ஆனால் எல்லாப் பெண்களுக்கும் நடப்பது போல எனக்கு மணமாக அதிர்ஷ்டம் இல்லை என்றும், அப்படி மணமானாலும் எங்கள் குலத்தானாகிய ஒருவருக்கு நான் வாழ்க்கைப் படாமல் என் விதி வேறு வழியில் அமைந்திருக்கிறது என்பதை அப்பொழுது நான் கொஞ்சங்கூட அறியவில்லை.

இன்னும் இரண்டாண்டுகள் உருண்டோடின. நான் பருவ மடைந்தேன். என் மேனியின் தங்கநிறமும், உடலழகும், முகவசீகரமும் முன்னைவிடப் பன்மடங்கு பெருகின. நாணம் என்னும் இயற்கை யன்னையின் போர்வை என்னை முக்காடிட்டு முன்போல வெளியில் சுயேச்சையாகத் திரிய விடாமல் செய்து விட்டது. ஆயினும் நான் தினமும் குளத்திற்குச் சென்று குளித்து விட்டுக் குடம் நிறையத் தண்ணீர் கொண்டு வருவதை மட்டும் நிறுத்தவில்லை.

ஒருநாள் வழக்கம் போலக் குடத்தை இடுப்பில் தாங்கிக் குளத்திற்குச் சென்றேன். அங்கே அநேக ஆடவரும், சில பெண்களும் அலங்காரமாக உடை யுடுத்திக்கொண்டு கூட்டமாக இருந்ததைக் கண்டேன். அவர்களுக் கருகில் ஏதேதோ கருவிகள் வைக்கப்பட்டிருந்தன. சற்றுத் தூரத்தில் ஒரு மோட்டாரும், சில கார்களும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அநேகர் அங்கே நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்கள் சினிமாப்படம் பிடிப்பவர்கள் என்று அவர்கள் பேச்சிலிருந்து அறிந்து கொண்டேன். அன்று அவர்கள் பிடித்த படம் 'மேனகா' என்றும் விசாரித்துத் தெரிந்து கொண்டேன்.

நான் குளத்தங்கரையை நெருங்கிய போது ஒருவர் ரிஷியைப்போல வேஷம் தரித்துக்கொண்டு ஒரு மரத்தினடியில் தவநிலையில் உட்கார்ந்திருந்தார். அவர் விஸ்வாமித்திரர் என்று தெரிந்துகொண்டேன். அவருக்கெதிரில் தேவ கன்னிகை போன்று வேஷம் தரித்த ஒருத்தி—மேனகா—நாட்டியமாடிக் கொண்டிருந்தாள். அவள் நடனமாடுவதும், பிறகு நிறுத்துவதும், பின்னர் வேறு இடத்திலிருந்து படம் பிடிப்பதுமாக இருந்தனர். அவள் அப்படி நடன மாடும்போது அங்கே வைக்கப்பட்டிருந்த ஒரு கருவியிலிருந்து இன்னிசை வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. அந்த இன்னிசைக் கேற்றாற்போல அந்த நடிகை வெகு அழகாக நடனமாடினாள். நாகரிக வாசனையே படியாத எனக்கு அப்பொழுது அவைகளெல்லாம் ஒன்றுமே புரியவில்லை. நான் ஒரு ஓரமாக நின்று அந்த நடிகையின் நடனத்தைக் கண்டு மிகவும் ஆனந்தத்துடன் ரசித்துக் கொண்டிருந்தேன். அந்த நடனமும், அங்கு நடந்த மற்ற சம்பவங்களும் எனக்கு அளவிலா பிரமிப்பைத் தந்தன. எனக்கு முன்பே நடனத்தில் அலாதி ஆவல். அந்த நடனத்தைக் கண்டதும் அவளுடன் சேர்ந்து நடனமாடலாமா என்கிற அடக்க முடியாத ஆவலை ஏதோ ஒரு சக்தி என் உள்ளத்தில் கிளப்பி விட்டது. குடத்தைக் கீழே எறிந்து விட்டு, அந் நடிகையுடன் கை கோர்த்துக்கொண்டு ஆடலாமா என்று எனக்கு ஒரு கணம் தோன்றியது.

அந்த நடிகையின் நடனம் முடியும் மட்டும் என்னையும் மறந்து கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தேன். நடனம் முடிந்ததும் படமெடுப்பதை நிறுத்தினார்கள். நடனத்தில் லயித்துப் பதுமைபோல் நின்ற என்னை அங்கிருந்தவர்கள் திரும்பிப் பார்த்த பிறகுதான் எனக்குச் சுயஉணர்வு வந்தது. எல்லோருடைய கண்களும் என் பக்கம் திரும்பியதைக் கண்டேன். என்மேல் வைத்த கண்ணைத் திருப்பாம லிருந்ததைக்கண்ட நான் நாண மடைந்து சட்டென்று குளத்தி லிறங்கி, அவசர அவசரமாகத் தண்ணீர் மொண்டு கொண்டு என் வீட்டை நோக்கி விரைந்தேன். வீட்டை நோக்கி விரைந்து சென்றாலும், அந்த நடிகையின் நடனமே என் கண் முன்னால் சதா தோன்றிக் கொண்டிருந்தது. ஓடிப் போய் அவளுடன் சேர்ந்து, அவள் ஆடுவதைப் போல நானும் ஆடவேண்டும் என்று காட்டாற்று வெள்ளம் போலப் பெருக்கெடுக்கும் கட்டுக்கடங்கா ஆவல் என் மனதை நிலை குலையச் செய்துவிட்டது. அப்பொழுது நான் நடந்து செல்லாமல் நடன மாடிக்கொண்டே செல்வதுபோ லிருந்தது எனக்கு!

அவசர அவசரமாக வீட்டை யடைந்து, தண்ணீரை அண்டாவில் கொட்டி விட்டு. மீண்டும் காலிக் குடத்துடன் குளக்கரைக்குப் போனேன். நடனத்தைக் கண்குளிரப் பார்க்கலாம் என்று போன நான், அங்கு அதே நடிகை ஏதோ பேசிக்கொண் டிருந்ததையும், அதை அவர்கள் படம் பிடித்துக் கொண்டிருந்ததையும் கண்டு ஏமாற்ற மடைந்தேன். அவள் மீண்டும் நடன மாடுவாள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் ஏமாற்றமே அடைந்தேன். பிறகு விஸ்வாமித்திரர் வேஷத்தி லிருந்தவர்

ஏதோ பேசினார்; நடித்தார். அதையும் அவர்கள் படமெடுத்தனர். அத்துடன் படப்பிடிப்பு முடிவடைந்தது. பிறகு எல்லோரும் புறப்பட்டுச் செல்லத் தயாரானார்கள். நானும் குளத்தில் இறங்கிக் குடத்தில் தண்ணீரை நிரப்பிக் கொண்டு சினிமாப் படம் பிடிப்பவர்களைத் தாண்டி வரும்போது எல்லோரும் என்னையே கண்ணிமைக்காமல் பார்ப்பதைக் கண்டேன். அவர்களில் ஒருவர் என்னைக் கூர்ந்து பார்த்துவிட்டு, "யார் இது? இவ்வளவு அழகான ஒரு பெண்ணும் இந்தப் பட்டிக்காட்டில் இருக்கிறாளா?" என்று சொன்னது என் காதில் விழுந்தது. உடனே என் உடல் குப்பென்று வியர்த்தது. வேகமாக நடந்து வீடு வந்து சேர்ந்தேன்.

மேற்கூறிய சம்பவம் நடந்து ஒருவாரம் இருக்கும். அடிக்கடி என் வீட்டிற்கு வந்து நான் கேட்கும் பாட்டுக்களை இனிமையாகப்



பாடிக்காட்டும் கிழப் பிச்சைக்காரன் ஒருநாள் என்னிடம், "அம்மா, குழந்தாய்! நீ குயிலைப் போன்ற இனிய குரலையும், மதியைப் போன்ற அழகான முகத்தையும் பெற்றிருக்கிறாய். அத்துடன் எந்தப் பாட்டையும் நீ சீக்கிரம் கற்றுக் கொள்கிறாய். நீ என்னுடைய குடிசைக்கு வந்தால் அநேக வாத்தியக் கருவிகளை உனக்குக் காண்பித்து, அவற்றை வைத்து எப்படிப் பாடுவது என்பதையும் உனக்குச் சொல்லித் தருகிறேன். அங்கே என் மகள் ஒருத்தி இருக்கிறாள். அவளும் உன்னைப்போலப் பாட்டிலும், நாட்டியத்திலும் மகா கெட்டிக்காரி. தெருக்கூத்துகளில் நாட்டியமாடி, பாட்டுப் பாடி அதைக் கொண்டுதான் நாங்கள் ஜீவிக்கிறோம். உனக்கு இஷ்டமிருந்தால் என்னுடன் வாம்மா. என் குடிசை ரொம்ப தூர மில்லை!" என்று சொன்னதைக் கேட்டதும் நான் ஆனந்தத்துடன், அக் கிழவனைப் பார்த்து, "அப்படியானால் ரொம்பவும் சந்தோஷம்! கண்டிப்பாக உன்னுடன் வருகிறேன். ஆனால் என் பெற்றோருக்கு இது விஷயம் ஒன்றும் தெரியக் கூடாது!" என்றேன்.

அதற்கு அக் கிழவன், "நீ ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம், அம்மா! எல்லாம் நான் கவனித்துக் கொள்கிறேன். இந்தக் கிழவனுடன் வருவதில் யாருக்கு என்ன சந்தேகம் வரப் போகிறது? வேண்டுமானால் நான் முன்னால் போகிறேன். நீ என்னைப் பின்தொடர்ந்து வா. என் குடிசையில் பாட்டையும் ஆட்டத்தையும் கற்றுக்கொண்டு சீக்கிரமாகத் திரும்பி விடலாம்!" என்றான்.

அப்பொழுது மாலை ஐந்து மணி. அன்று சனிக்கிழமை யானதால் என் தந்தை சந்தைக்குப் போயிருந்தார். என் தாய் எங்கோ வெளியில் போயிருந்தாள். குழந்தைகள் தூங்கிக் கொண்டிருந்தன.

கிழவனின் குடிசைக்குச் சென்று பாட்டையும், நாட்டியத்தையும் கற்றுக்கொண்டு வர வேண்டும் என்று சூறாவளிபோல என் மனதில் கிளம்பிய ஆவலைக் கட்டுப்படுத்த முடியாமல், முன் பின் யோசியாமல், கிழவன் முன்னே செல்ல அவனைப் பின் தொடர்ந்து நான் சென்றேன்.

செல்லச் செல்ல வழியிலிருந்த வீடுகள் ஒவ்வொன்றாக மறைந்தன. நல்ல பாதையை விட்டு விலகி செடி கொடிகள் நிறைந்த காட்டுப் பாதையில் கிழவன் நடந்து சென்றான். அப்படிப்பட்ட பாதையில் செல்ல எனக்கு ஆனந்தமாகத்தான் இருந்தது.

நாங்கள் அதேபோல அந்தி நேரம் வரை நடந்து போய்க்கொண் டிருந்தோம். நான் அக் கிழவனைப் பார்த்து, "இன்னும் அதிக தூரம் போகவேண்டுமா? நடக்க நடக்க வழி ஓய மாட்டேன் என்கிறதே? என்னால் நடக்கவும் முடியவில்லை!" என்றேன்.

உடனே கிழவன் என்னைத் தட்டிக் கொடுத்து, "ரொம்பவும் களைப்பாக இருக்கிறதா, அம்மா? நான் ஒரு கிழவன். மறதியாக வழி தவறிச் சுற்று வழியாக வந்து விட்டேன். ஆனாலும் பரவாயில்லை. அதோ முன்னால் ஒரு பெரிய பாதை தெரிகிறது. அங்கே போனால் மோட்டார், வண்டி ஏதாவது வரும். அதில் ஏறிக் கொண்டு போனால் சீக்கிரம் என் குடிசையை அடையலாம். கவலைப்படாதே!" என்று பரிவுடன் கூறி அழைத்துச் சென்றான்.



சற்றுத்தூரம் நடந்ததும் ஒரு பெரிய பாதை எதிர்ப்பட்டது. அங்கே ஒரு மோட்டார் வேன் நின்று கொண்டிருந்தது. அந்த மோட்டார்வேன் முன்பு குளக்கரையில் சினிமாக்காரர்கள் கொண்டு வந்த வேன் மாதிரி இருந்ததைக் கண்டேன். என்னை அழைத்து வந்த கிழவன் அந்த வேனின் டிரைவரிடம் சென்று ஏதோ பேசிவிட்டு வந்தான். பிறகு என்னிடம், "நல்ல காலம், அம்மா! இந்த மோட்டார் என் குடிசை வழியாகத்தான் போகிறதாம். இதிலே ஏறிக்கொண்டு போக டிரைவரிடம் கேட்டேன். அவனும் சரி என்று சொல்லி விட்டான். நீ பின் பக்கம் ஏறிக்கொள். நான் டிரைவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொள்கிறேன்" என்றான்.

நான் ஒன்றும் பேசாமல் மோட்டார் வேனில் ஏறிக்கொண்டேன். அதற்குள் இருள் பரவி விட்டதால் வேனினுள் யார் இருக்கிறார்கள் என்று என்னால் கண்டுகொள்ள முடியவில்லை. அத்துடன் என்னையு மறியாமல் ஒரு விதப் பயம் என் உள்ளத்தை உலுக்கியது. இதற்குள் இருட்டி விட்டதே, பிறகு எப்பொழுது நான் திரும்புவது? என்று அஞ்சி நடுங்கினேன். கிழவனின் பேச்சைக் கேட்டு வந்தது எவ்வளவு முட்டாள்தனம்? என்னைக் காணாமல் என் பெற்றோர் என்ன பாடுபடுவார்களோ?—என்றெல்லாம் அங்கலாய்த்துத் தவித்தேன்.

அப்பொழுது வேன் புறப்பட்டு விட்டது. அதே சமயம், "என்னம்மா, குழந்தை? கடவுள் உன்னை எப்பொழுதும் ஏழை நெசவாளியின் மகளாகவே வைக்காமல் ஒரு ராஜகுமாரியாக்கப் போகிறார்! சினிமா வானில் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் தாரகையாக மின்ன வைக்கப் போகிறார்!" என்று எங்கிருந்தோ கிளம்பிய ஒரு ஸ்திரீயின் குரல் என்னைத் திடுக்கிட வைத்தது.

சட்டென்று நான் பேச்சு வந்த திசையைத் திரும்பிப் பார்த்தேன். அதே சமயம் இருண்டு கிடந்த அந்த வேனின் உட்புறம் பளிச்சென்று மின்சார விளக்கால் பிரகாசமடைந்தது. என் அருகில் சுமார் நாற்பது வயது மதிக்கத்தக்க ஒருத்தி அமர்ந்து, என்னைப் பார்த்துச் சிரிப்பதைக் கண்டேன். அவளைப் பார்த்து, "அம்மா! நீங்கள் யார்? இப்பொழுது நான் எங்கே அழைத்துச் செல்லப்படுகிறேன். என்னுடன் வந்த கிழப் பிச்சைக்காரன் எங்கே? நீங்கள் சொன்ன விஷயங்கள் என்ன? நான் எப்படி ராஜகுமாரியாகவும், சினிமா வானில் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் தாரகையாகவும் மாறுவேன்?" என்று கேள்விகளைப் பரபரப்புடன் அடுக்கினேன்.

(தொடரும்.)


ஆரணி-குப்புசாமி முதலியார் எழுதிய

**கிருஷ்ணவேணி** அல்லது **அதிசய மர்மச் சுரங்கம்**

இந்த நாவலில் துப்பறிவோர் வேலையும், திருடர்களின் சாமர்த்தியமும் அடங்கியிருக்கிறது. இக்கதையில் நேரிடும் சம்பவங்கள் பெரும்பாலும் உரோமாபுரியில் நடக்கின்றன. இதில் நடக்கும் சம்பவங்கள் மிக்க வியப்பையளித்து வாசிப்போர் மனதை முழுமையும் கவர்ந்து கொள்ளும்.

**இதன் விலை ரூ. 2-8-0.** (தபாற் செலவு வேறு.)

**கற்பக சுந்தரி** அல்லது **மூன்று கறைகளின் மர்மம்**

இதில் பொதுவாய் ஆண்பாலார் பெண்பாலார் யாவர்க்கும் பல நற்புத்திகளைப் புகட்டத்தக்க விஷயங்களே அடங்கியிருக்கின்றன. நம் சகோதரர், சகோதரிகள் அவசியம் படிக்கத் தக்கவை. (இரண்டு பாகங்கள் அடங்கியது)

**இதன் விலை ரூபா 3-0-0.** தபாற் செலவு வேறு.

**ஆனந்தபோதினி ஆபிஸ்,** தபால் பெட்டி நெ. 167, சென்னை-1.

# தமிழாட்சி தோன்ருதா?

இரா. இளந்திரையன்

★

புன்னைத்தேன் குடித்துவரும் வண்டே! அங்கு
பொன்வண்ணம் கூடநீ பெற்ற துண்டே
உன்னைத்தான் கேட்கின்றேன்: 'இந்த நாட்டில்
ஒருநாளும் தமிழாட்சி தோன்ரு தா?நீ
என்னைத்தான் கேட்பாயா? தமிழ கத்தின்
எல்லாரும்—இங்குள்ள ஆணும் பெண்ணும்
தன்னைத்தான் இக்கேள்வி கேட்டுக் கொண்டு
தலைநிமிர வழியுண்டா? சொல்லேன் வண்டே!

வரலாறு சொல்கிறதே வண்டே! இங்கு
வாழ்ந்தனராம் மிகப்பெரிய வீர ரெல்லாம்!
அரசாட்சி முறைவகுத்த பெருமை கூட
அந்நாளைத் தமிழர்க்கே உரிமை யாமே!
இரண்டாகப் பிளக்கிறதே நெஞ்சம் அந்த
ஏற்றத்தோ டின்றைநிலை சேர்த்துப் பார்த்தால்!
உருண்டோடும் காலத்தின் போக்கில் கூட
உணர்ச்சிதலை தூக்கா்தா இந்த நாட்டில்!

பழம்பெருமை பேசுவதா? தெருவில் வாழும்
பாமரரை நோக்குவதா? அடிமை வாழ்வில்
குழம்புகின்ற தமிழர்மனம் தெளியப் பேசக்
கூட்டமில்லை! எல்லாரும் குழப்பு கின்ருர்!
எழத்துடிக்கும் வேளையிலும் கட்சி என்னும்
எரிதணலால் சுடுகின்ருர் பிரிவு காட்டி
அழுத்துகிருர்! ஐயகோ! தமிழர் நாடு
ஆட்சியின்றி வலியிழந்து கிடப்ப தேயோ?

எத்துறையில் சீர்திருத்தம் செய்ய? எங்கும்
இருள்சூழ்ந்து கிடக்கிறதே! இங்கு உள்ளோன்
சத்துருவா தமிழ்மகனு? யார்கண் டார்கள்?
தமிழனுந்தான் மாற்ருனய் மாறிவிட்டான்!
புத்திவரும் என்பார்கள் அடிமை வாழ்வில்
புன்மைகளை வளர்த்துள்ளான் தமிழன்! வீணே
கத்துகிருர் நல்லவர்கள்! அவர்க்குக் கூட
கைவிலங்கு மாட்டுகிருன் வயிற்றுக் காரன்!

எப்போது இருளாட்சி நீங்கும்? தீயில்
இடப்பட்ட தங்கமாய் மாறுமா? நாம்
எப்போது இலக்கியத்துத் தமிழ கத்தின்
எழுச்சியினைக் கண்டிடுவோம்? அந்த நாளில்
தப்பாது பலியாவோர் யாவர்? எங்கும்
தமிழொலிக்கும் அந்தநாள் எந்நாள்? தன்னை
ஒப்பாரே இல்லாத தமிழன் வாழும்
உயர்வாழ்வைக் காணும்நாள் எந்நாள்? எந்நாள்?

திரைப்பட விமர்சனம் :

# வசன் (இந்தி)

கு. ந. வே.

★

"பிலிம் பேர்" நிறுவனத்தார் ஆண்டு தோறும் நடத்திவரும். 'கிளேர்' பரிசு அளிப்புப் போட்டியில் சென்ற ஆண்டு சிறந்த கதைக்கு ஒதுக்கப்பட்ட பரிசைத் தட்டிச் சென்றவர் கதாசிரியர் முகுர்ராம் சர்மா. அன்னார் எழுதிய கதையான 'வசன்' தற்போது சென்னையில் ஓடிக்கொண்டிருக்கிறது. 'வசன்' படம் பம்பாயிலும் கல்கத்தாவிலும் வெள்ளி விழா கொண்டாடியிருப்பது நமது மக்களின் வளர்ந்து வரும் தரமான ரசனையுணர்ச்சிக்கு மற்றொரு நல்ல எடுத்துக்காட்டு. மூலக் கதை, திரைக் கதை, வசனம் மூன்றையும் எழுதிய முகுர்ராம் சர்மா மூன்று துறையிலும் நல்ல வெற்றி கண்டுள்ளார். டைரெக்ஷன் பொறுப்பையேற்ற ராஜ் ரிஷி சிறந்த ஒரு டைரெக்ஷனை யளித்து நாம் குறித்துக் கொள்ளத்தக்க ஒருவராகிறார்.

தீனாநாத்துக்கு மூன்று குழந்தைகள். மூத்தவன் பி.ஏ. படிப்பவன். கமலா எப்.ஏ. பாஸ் செய்தவள். அடுத்தவன் சிறுவன். கமலா தனது அண்ணனது தோழன் பிரேமை நேசிக்கிறாள். பிரேமின் வீடு செல்வம் கொழிக்கும் வீடு. அவன் வீட்டு முனிம்ஜி (கணக்காளர்) அபினிக்கு அடிமைப்பட்டவன். பிரேமின் தாய் சீமாட்டியானாலும் வரதட்சணையின்றி கமலாவை மருமகளாக்கிக் கொள்ள (முனிம்ஜி வாதித்தாலும்) ஒப்பவில்லை. பி.ஏ. பாஸ் செய்த கமலாவின் அண்ணன் எதிர்பாரா விபத்தில் சிக்கி திடீரென்று மடிகிறான். அவளது அப்பா தாளமுடியாத துக்கத்தில் கண் அடிபட்டு பார்வையை இழக்கிறார். இருந்தும் கமலா-பிரேம் மணம் நடக்கவிருக்கிறது. கமலாவின் தம்பி, அண்ணன் இறந்து அக்காளும் புக்ககம் போய்விட்டால் தானும், குருடரான அப்பாவும் எப்படி வாழ்வது என்று ஓலமிட, தம்பி பெரியவனாகி சம்பாதிக்கும் மட்டும் தன் மணத்தைத் தியாகம் செய்யத் தீர்மானிக்கிறாள் கமலா.

காத்திருக்க சம்மதிக்கிறான் பிரேம். ஆனால் தாய் அவன் மணக்கவில்லையென்றால் உயிர்விடத்துணிய, வேறு வழியின்றி அம்மா பொறுக்கின சம்பா என்ற பெண்ணை மௌனமாக மணக்கிறான் பிரேம். அவன் கமலாவுக்கு எழுதிய கடிதம் முனிம்ஜியால் கிழிக்கப்படுகிறது. கமலாவின் விவர மறிந்து அவளைத் தனது ஜென்ம விரோதியாகக் கருதுகிறாள் சம்பா.

காலம் செல்லச் செல்ல கமலாவின் தம்பி வளர்கிறான், சம்பாதிக்கிறான். முனிம்ஜியின் சகோதரி மகளையும் அவன் எல்லோர் விருப்பப்படி மணக்கிறான். பிரேமின் வீட்டில் வேலையினின்று தள்ளப்பட்டு முனிம்ஜி தன் சகோதரி மகள் புகுந்த கமலா வீட்டுக்கு வருகிறான். அவளது மனதில் நஞ்சைக் கலக்கிறான் அவன். அபினி வாங்கத்தான் திருடிய பொருள்களையெல்லாம் கமலா திருடியதாகச் சொல்லி அவளுக்குத் திருட்டுப் பட்டம் கட்டுகிறான் முனிம்ஜி. அவமானம் தாளாது கமலாவை அழைத்துக்கொண்டு வெளியேறுகிறார் அவள் தந்தை;

வேற்றூர் சென்ற கமலா பிரேமின் வீட்டில் வேலைக்காரியாக விருப்பமின்றி அமருகிறாள். அன்பான பணி விடைகளால் நோயாளி சம்பாவைத் திருப்திப் படுத்துகிறாள் கமலா. தன் விரோதி கமலாவைப்பற்றி கமலாவிடமே பேசுகிறாள் சம்பா. முனிம்ஜியின் சதி அம்பலமாகி, கமலாவைத் தேடி வருகிறான் அவள் தம்பி. தற்செயலாகக் கமலாவைப் பிரேமின் வீட்டில் கண்ட முனிம்ஜி சம்பாவிடம் கமலாவைப்பற்றி இல்லாததும் பொல்லாததும் கூறி வஞ்சக எண்ணத்தைத் தூவுகிறான். சம்பா கமலாவுக்கு நிறைய அபினி கலந்த உணவைத் தந்து வஞ்சம் தீர்க்கிறாள். கமலா பிரேமிடம் சம்பாவைப் பற்றியும், அவள் கணவனாகி விட்ட பிரேமின் கடமை பற்றியும் புத்திமதி சொல்ல வியப்பால் அதிர்ந்து மாடியிலிருந்து விழுந்து இறக்கிறாள் சம்பா. இறக்கு முன் தான் கமலாவுக்கு இழைத்ததைக் கூறுகிறாள். கமலா-பிரேம் சேருகின்றனர். இவ்வளவு கீழ்மையையும், தீய மனதையும், தன்னலத்தையும் அளித்த அபினி டப்பியைத் தூர விட்டெறிகிறான் முனிம்ஜி.

கமலா குற்றமே இல்லாத சிறந்த ஒரு படைப்பு. கமலாவின் தம்பி மனம் கலைக்கப்பட்டு திருந்துவது நன்கு எழுதப்பட்டு டைரெக்ட் செய்யப்பட்டுள்ளது. அபினியின் அடிமையான முனிம்ஜி அபினி அருந்துவோரின் பரிதாபமான நிலையின் அற்புதப் பிரதிபலிப்பு. பிரேம் மன வலுவற்றவன். தந்த

உறுதியைக் காக்க அவனது அன்னைப் பாசம் அனுமதிக்கவில்லை. கமலாவின் தந்தை தன் மானம் மிக்க ஒரு சிறந்த படைப்பு. படத்தில் "வில்லன்" இல்லை. இருக்கும் வில்லன் அமினியே ஒழிய முனிம்ஜி இல்லை. அமினி தடை செய்யப்படுவதன் அவசியத்தைப் பிரசாரம் எதுவும் (வசனத்தில் கூட) இன்றி தெளிவிக்கிருர் கதாசிரியர் சர்மா. இது ஒரு அரிய சாதனை. கதைக் கற்பனை, திரைக் கதையமைப்பு சிறந்து உள்ளது.

கமலாவாக கீதாபாலி வந்து சிறந்ததொரு நடிப்பைப் பட முழுவதும் அளிக்கிருர். முனிம்ஜியாக வரும் ராதாகிஷன் மிக இயற்கையாக நடிக்கிருர். கமலாவின் அப்பா நன்கு நடித்துள்ளார். பிரேமாக வரும் பால் ராஜ் சுமாரான நடிப்பைத் தருகிருர். மற்ற வர்கள் குறையின்றி நடித்துள்ளனர்.

ரவி, சந்திரா ஆகிய சங்கீத டைரெக்டர்கள் இனிமையான இசை அமைத்திருக்கிருர்கள். ஆஷா, ரபி நன்கு பாடியுள்ளனர். ஒளி, ஒலிப்பதிவுகள் அருமை. செட்டுகள் நன்கு உள்ளன. வெளிக் காட்சிகளுக்குப் படத்தில் குறைவில்லை. அலுப்புத் தட்டாது கதையை ஓடவைக்கிறது நன்கு செய்யப்பட்டுள்ள எடிட்டிங். நடனங்கள் சிரமப்பட்டு செய்யப்பட வில்லை; எடுத்துவிட்டிருக்கலாம்.

படாடோபம், ஆடம்பரம் இல்லை; கொலை, கொள்ளை, கற்பழிப்பு இல்லை; வில்லனின் பயங்கரச் சிரிப்பும் கதாநாயகியின் ஓலமும் இல்லை; இருந்தும் படம் சிறந்து விளங்குகிறது. டைரெக்டர் ராஜ்ரிஷியின் டைரெக்ஷனில் நமக்குக் குறை தெரியவில்லை. இது ஒன்றே அவர் திறமையைக் காட்டுகிறது. கோயெல் சினி கார்ப்பொரேஷன் என்ற நிறுவனம் கீழ் தேவேந்திர கோயெல் தயாரித்த "வசன்" இந்தியா படைத்த சிறந்த படங்களுள் ஒன்று.

## தலை முழுக வேண்டியதுதான்

பழகிய மளிகைக் கடைக்காரன்: ஐயா இன்றைக்காவது கிடைக்குமா? பணம் மிகவும் தேவையாயிருங்குங்க. எட்டு மாசமாக் கொடுக்காம காலந் தள்ளீட்டீங்க. உங்க மகன் வரணும்னு சொன்னீங்க. அவரும் வந்து விட்டார்.

கடன்காரர்: நீங்க பணத்தைப்பத்திக் கவலைப் படாதீங்க, கவலைப்படாதீங்கன்னு எத்தனை வாட்டி சொல்றதுங்க. சரி போவுது போங்க. இன்னிக்கி நம்ப வீட்டிலேயே எண்ணெய் தேய்த்துத் தலை முழுகுங்க. இங்கேயே சாப்பிடலாம். நானே உங்க வீட்டிலே வந்து சொல்லணும்னு நினைச்சேன்.

---

# குழந்தை

எச். இராமசாமி

★

குழந்தை என்றதுமே—என்மனம்
குழைந்து போகுதம்மா!
குழப்பம் நீங்குதம்மா—மனத்தே
கும்மாளம் பொங்குதம்மா!

பொக்கைச் சிரிப்பைக் கண்டால்—என்
எக்களிப் பெய்து தம்மா! [ளுளம்
விக்கி விக்கி அழுதால்—என்னுளம்
சுக்கு நூறுகுதம்மா!

கள்ளங் கபடமில்லை—சின்னஞ்சிறு
பிள்ளையின் உள்ளத்திலே
கொள்ளை கொள்கின்ருனம்மா—அவன்
வெள்ளை யுள்ளங் காட்டி [றன்

சாதிச் சழக்குமில்லை—மதலைகள்
வாதம் புரிவதில்லை!
நீதி நெறியில் நின்று—தோழருடன்
வீதியில் போவதைப்பார்!

உயர்வு தாழ்வு மில்லை—குழவியின்
உன்னத உள்ளத்திலே!
பையப்பையத் தவழ்ந்து—நம்மைக்கண்டு
நையாண்டி செய்வதைப்பார்!

அங்குமிங்கு மலைந்து—இறைவனை
எங்கு நீர் தேடுகின்றீர்
அங்கைகளை நீட்டி அழைக்கும்
தங்கை உள்ளத்திலுள்ளான்!

# எதிர்கால பலன்

### நமது ஜோதிட நிருபர்

★

1955-ம்௵ டிஸம்பர்மீ 16உ முதல் 31உ வரை

**கிரஹங்களின் ஸஞ்சாரம்**
**(நிராயன பூர்வம்)**

| | பா-கலை | | பா-கலை | |
|---|---|---|---|---|
| சூரியன்:— | 239-54 | முதல் | 256-12 | வரை |
| சந்திரன்:— | 255-47 | ,, | 112-58 | ,, |
| அங்காரகன்:— | 197-45 | ,, | 208-11 | ,, |
| புதன்:— | 246-07 | ,, | 271-25 | ,, |
| குரு:— | 128-23 | ,, | 128-05 | ,, |
| சுக்கிரன்:— | 266-20 | ,, | 286-09 | ,, |
| சனி:— | 214-04 | ,, | 215-46 | ,, |
| ராகு:— | 233-50 | ,, | 232-58 | ,, |
| கேது:— | 53-50 | ,, | 52-51 | ,, |
| யுரேனஸ்:— | 98-37 | ,, | 98-03 | ,, |
| நெப்டியூன்:— | 186-41 | ,, | 187-02 | ,, |
| ப்ளூட்டோ:— | 125-27 | ,, | 125-16 | ,, |

| | | | |
|---|---|---|---|
| | | கேது | |
| | 16-12-1955-ல் | | யுரே (வ) |
| | சென்னை பூஜ்ய மணிக்கு இராசி குண்டலி | | ப்ளூட் (வ) குரு |
| சுக் சந்தி புத | சனி சூ-ராகு | நெப்டி அங் | |

**சந்திர பலன்:**—23உ காலை மணி 3-04 வரை சுக்லபக்ஷ முற்பகுதி; பின் 29உ காலை மணி 9-14 வரை ஷை பிற்பகுதி; அதன் பின் பகுளபக்ஷ முற்பகுதி.

**பிரவேசங்கள் முதலியன:**— 16உ விடியற்காலை மணி 2-18க்கு சூரியன் தனுசிற்கும், 18உ இரவு மணி 10.51க்கு சுக்கிரன் மகரத்திற்கும், 30உ இரவு மணி 1-55க்கு புதன் மகரத்திற்கும் ப்ரவேசிக்கின்றன. 18உ குரு வக்ர ஆரம்பம். இப் பக்ஷத்திலும் தொடர்ந்து புத-சுக்ர ஸாமீப்யம் நேரிடுகிறது.

**ஆகாயக் காக்ஷி:**—16உ இரவு மணி 11-57க்கு சசிக்குத் தெற்கே பாகை 4-28ல் சுக்ர-சந்திர ஸமாகமம்: 30உ இரவு மணி 12-01க்கு சசிக்கு வடக்கே பாகை 4-08ல் யுரேனஸ்-சந்திர ஸமாகமம்.

* **ஸஞ்சாரபலன்:**—"சந்திரன்" 'தனுசு' முதல் 'கடகம்' வரை ஸஞ்சரித்தலால் இப் பக்ஷத்தில் கடைசி 3 நாட்கள் தவிர மற்ற தினங்கள் சுக்லபக்ஷ பலமும் பின் கிருஷ்ணபக்ஷ பலமுங்கொண்டு பலன் செய்யும். 'சூரியன்' விருச்சிக-தனுசுகளிலும், 'அங்காரகன்' துலாத்திலும், 'புதனும்-சுக்கிர'னும், தனுசு-மகரங்களிலும், 'குரு' சிம்மத்திலும், 'சனி' விருச்சிகத்திலுமாக இதர கோள்கள் யாவும் ஸஞ்சரித்து வருகின்றன. இதனால்:—மேஷம், கடகம், துலாம், மகரம், மீனம் இந்த ராசிக்காரர்களுக்கு நன்மை உண்டாகும். ரிஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம் இந்த ராசிக்காரர்களுக்கு மத்திய பலன்களும், மிதுனம், கன்னி, தனுசு இந்த ராசிக்காரர்களுக்குச் சற்று சிரமமான பலன்களுமாக நடைபெறும். இதில் மேஷ ராசிக்காரர்கள் பிரயாண வகையிலும். கடக ராசிக்காரர்கள் அனுகூல மற்ற வகையிலும், துலா ராசிக்காரர்கள் காதல் வகையிலும், மகர ராசிக்காரர்கள் நூதன முயற்சி வகையிலும், மீன ராசிக்காரர்கள் ஆதாய வகையிலும் அனுகூலம் பெறுவார்கள். மற்ற இராசிக்காரர்கள் ஜாக்கிரதையுடன் இருப்பது நலமாம். அதிர்ஷ்ட சித்திகளில் ரிஷபம், சிம்மம்: விருச்சிகம், கும்பம் இந்த ராசிக்காரர்களுக்கு நன்மை உண்டாகும்.

**பருவ நிலை:**—மழை நின்று குளிரும் பனியும் அதிகரிக்கும். மேக ஸஞ்சாரங்கள் அடிக்கடி ஏற்பட்டு ஸாமான்யமாய் தூறி வரும். வெய்யிலும் காய்ந்து வருவதாகும்,

**வர்த்தக நிலை:**—பண்டங்களின் விலை தேக்கமாகும். சில பொருள்கள் டிமாண்டாய் விற்பனையாகும். வர்த்தகர்கள் விசேஷ நன் நன்மையை எதிர்பார்க்க முடியாது. சர்க்கரை, சாயம், சணல் சம விலையாகவும் ரப்பர், தோல், கொப்பரை சிறிது விலை ஏற்றமாகவும், மணிலா, பருத்தி, பஞ்சுவிலை இறக்கமாகவும் இருந்து வருவதாகும்,

---

* குறிப்பு.—இந்தப் பலன் பொதுவானது. தனித்தனி கூறப்படும் உங்கள் சொந்தப் பலன் முக்கியமானது. ஆனால், ஸஞ்சார பலனில் வரும் பொது நலனும் சேர்த்துக் கவனிக்க வேண்டுவதே. ஸஞ்சார பலன் நல்லதாக விருந்து, சொந்தப் பலன் கெடுதலாக விருந்தால், முன்னையதால் பின்னதன் கெடுதல் சுகமடையும். அதே விதம் சஞ்சார பலன் கெடுதலாயின், சொந்தப் பலனின் நலத்தை ஓரளவு குறைக்கும். இரண்டும் நல்லதாயின் விசேஷமாகும். இரண்டும் கெடுதலாயின் தீது. இப்படிக் கவனித்துக் கொள்ளவும். சஞ்சாரம் சூரியன் நின்ற ராசிக்கே.

**ஸர்வதேச நிலை:**— முன்னேற்றத்திற்காகவும் நாடுகளின் சீர்திருத்தத்திற்காகவும், அங்கங்கே பிரசாரங்கள் வலுத்து வரும். திடுக்கிடக்கூடிய சம்பவம் ஒன்று நடக்கும், சில மாற்றுமாடுகளும் அங்கங்கே ஏற்பட்டு வருவதாகும்.

**இந்திய அரசியல்:**—எதுவும் காரியப் பாட்டிற்கு வ:ராமல், ஆமை வேதத்தில் பிரசாரங்களோ முன்னேற்றத்திற்கான யோசனைகளோ நடந்து காரசாரமில்லாமல் தேக்கமாய் இருந்து வருவதாகும். புதிய ஸம்பவங்கள் எதுவும் நிகழ மார்க்கமில்லையாம்.

**அதிர்ஷ்ட தினங்கள்**

| | | |
|---|---|---|
| வர்த்தகம்:— | 17-19-21கா-28மா | வ |
| கடிதங்கள்:— | 18-21-23கா-30மா | ,, |
| காவியஞ் செய்ய:— | 19-22-27கா-28-மா | ,, |
| ஓவியந் தீட்ட:— | 17-21-23கா-27-மா | ,, |
| விவசாயம்:— | 19-21-27-கா-30மா | ,, |
| பயிற்சிகள்:— | 18-22-23கா-28-மா | , |
| ஆராய்ச்சிகள்:— | 17-19-22கா-27மா | ,, |
| இரஸாயனங்கள்:— | 19-22-27கா-30மா | ,, |
| மந்திரார்த்தங்கள்:— | 18-19-21-கா-28மா | ,, |
| யந்திர முயற்சிகள்:– | 17-21-23கா-27மா | ,, |
| சந்திப்புகள்:— | 19-22-27கா-30மா | ,, |
| ஒப்பந்தங்கள்:— | 18-21-23கா-28மா | ,, |

**சுபமுகூர்த்தங்கள்:**—18வ ஞாயிற்றுக் கிழமை, சுக்ல சதுர்த்தி, திருவோணம், கூடிய சுபதினம் காலை மணி $7\frac{1}{4}$ க்கு மேல் $8\frac{1}{4}$ க்குள் தனுசு லக்கினத்தில் சீமந்தம், 19வ திங்கள் கிழமை சுக்ல பஞ்சமி அவிட்ட நக்ஷத்திரம் கூடிய சுபதினம் காலை மணி $7\frac{1}{2}$ க்குள் தனுசு லக்னத்தில் சீமந்த முகூர்த்தம்.

**உங்கள் சொந்தப் பலன்**

அறிய நீங்கள் பிறந்த பொழுது சூரியன் நின்ற இராசியைக் கொண்டு பலனைக் கீழே காணுங்கள்.

**மேஷம்:**—செய்காரியங்களில் சோர்வு ஏற்பட்டுப் பின் அனுகூலம் உண்டாகும். வரவேண்டிய பணம் தடையாவத மூலம் வருத்தம் ஏற்படும். குடும்ப நடப்பில் கவலை ஏற்பட்டு அடங்கும். வியாபார வகையில் மந்த வருமானம் ஏற்பட்டு வரும். பிறர் சகாயத்தை எதிர்பார்க்கும்படியாகும். அன்னியர் காரியங்களில் தலையாடுவதன்மூலம் கிலேசம் ஏற்படும். வெளியூர் சேதி மூலம் மனதிற்கு தாபம் உண்டாகும். குடும்பத்தில் வயித்திய செலவுகள் ஏற்படும். இப்படியாக ஒவ்வொன்றும் சாமான்யமாய் ஏற்பட்டு முடிவில் அனுகூலத்திற்கு வரும். சினேகிதரால் நன்மையும், பெரிய மனுஷ்யர்கள் ஆதரவும் ஏற்பட்டு வருவதாகும். 17,21,23,28,30 தேதிகன் நலமானவை.

**ரிஷபம்:**—இருப்பிடம் மாறும்படியாதல் அல்லது வெளியூர் போய் வரும்படியாகும். சிலரை நம்பி ஏமாறும்படியாகும். அன்னியர் ஆதரவு ஏற்பட்டு வரும். பழைய காரியங்கள் சில கூடிவருவதன்மூலம் திருப்தி உண்டாகும். பந்துக்களால் கிலேச சங்கதிகள் ஏற்பட்டு நீங்கும். உத்தியோகத்தில் மாற்றத்திற்கான ஏற்பாடுகள் உண்டாகும். செய் தொழிலில் பிறர் சகாயத்தின்பேரில் நன்மை உண்டாக்கும், தன நடப்பில் சௌகரியம் ஏற்படும். இப்படியாக நடப்பதாகும், 18,22,27,28 தேதிகள் நன்மையானவை.

**மிதுனம்:**—எந்த காரியமும் தடைப்பட்டு வருவதன்மூலம் மனதிற்கு கிலேசம் உண்டாகும். பிறர் சகாயத்தை எதிர்பார்த்தும் காலதாமதமாய் வரும். குடும்ப நடப்பில் மனதிற்கு அதிருப்தி ஏற்பட்டு வரும். கொடுத்தல் வகையில் சில நிர்ப்பந்தங்கள் உண்டாகும், பிறர் உதவியை நாடும்படியாகும். சிலரிடம் விவாதம் ஏற்பட்டு அடங்கும், தொழிலில் சம வருமானம் ஏற்பட்டு வரும் பந்து ஜன பகை உண்டாகும். உத்தியோகத்தில் கவலையும், அதிகாரியால் கிலேசமும், வியாபாரம் முன்னேற்றத்திற்குத் தடையும் ஏற்பட்டு வருவதாகும். 17,19,22,27,30 தேதிகள் சுகமானவை.

**கடகம்:**—உத்தியோகத்தில் நன்மை உண்டாகும், செல்வாக்குள்ள நபர்களின் சந்திப்பு ஏற்படும். அதிகாரியால் நன்மை உண்டாகும். சுபகாரியங்களில் முயற்சிகள் கூடிவரும். புதிய வகையில் சில ஏற்பாடுகள் உண்டாகும். பழைய நடப்புகளில் நன்மை உண்டாகும். குடும்பத்தில் சில கிலேசங்கள் ஏற்பட்டு நிவர்த்தியாகும். பிரயத்தனங்கள் சில தடைப்பட்டு வருவதன் மூலம் வருத்தம் உண்டாகும். தன நடப்பில் சௌகரியம் ஏற்பட்டும். அன்னியர் சகாயம் உண்டாகும். புதிய சினேகம் ஏற்படும். உத்தியோகத்தில் அனுகூலத்திற்குரிய மாற்றங்களும் ஏற்பட்டுவருவதாகும். 18,22,27,30 தேதிகள் சுத்தமானவை.

**சிம்மம்:**—அதிகாரி ஆதரவும் அன்னியர் சகாயமும் ஏற்பட்டுவரும். எழுத்து மூல்யத்தில் சில நன்மைகள் உண்டாகும். வெளியூர் போய் வர நேரும். குடும்பத்தில் அதிக செலவுகள் உண்டாகும்.எதிர்பார்த்தவை அனுகூலமாகும் தன நடப்பில் சௌகரியம் ஏற்பட்டுவரும். பிறர்சகாயம் உண்டாகும் பந்துஜன சேர்க்கை உண்டாகும். பிரயத்தன காரியங்கள் தாமதப்பட்டு கூடிவரும். பெரிய மனுஷ்யர்கள் நேசம் உண்டாகும். வெளியூரிலிருந்து நற்சேதி கேள்விப்படும் படியாகும். வியாபார நடப்பில் நன்மையும் ஏற்பட்டுவருவதாகும் 17,21,23,28 தேதிககள் மேலானவை.

கன்னி:—ஆரோக்ய சம்பந்தமாய் செலவுகளும். வீண்வகையிலும் விரயம் ஏற்பட்டுதலும் உண்டாகும். தனநடப்பில் கவலையும், பந்துக்களால் கிலேசமும், தெய்வகாரியங்களில் செலவு செய்ய நேருவதும், நல்லோர் நேசமுண்டாதலும். பெரிய மனுஷ்யர்கள் சினேக ஆதரவும் ஏற்பட்டுவரும் செம் தொழிலில் வருமானம் குறைவுபட்டு வருவதும். வியாபார மந்தமும், உத்தியோகத்தில் சில மாற்றமுண்டாதலும், வரவேண்டியவை தடைப்படுவதும் இப்படியாக நடந்துவருவதாகும். 18,22,27,28 தேதிகள் மேன்மையானவை.

துலாம்:—வெளியூர் பிரயாணம் போய் வரும்படி யாகும் புண்ணிய காரியங்கள் செலவுகள் உண்டாகும். உத்தியோகத்தில் மாற்றமும் புதிய ஏற்பாடுகளும் உண்டாகும். குடும்ப செலவு அதிகரிக்கும். தனநடப்பில் சௌகரியக் குறைவு ஏற்பட்டுவரும். பந்துக்களால் கவலையும், சில பொருள் வாங்கும்படி நேருவதும் சினேகிதரால் கவலை ஏற்படுவதும், இரகசிய சத்துரு மூலமாய் சில கவலைகளும், வர வேண்யவை தடையாவதும், விவாத சிந்தனைகள் ஏற்படுவதும், குடும்ப சௌக்கியமும், அன்னியர் ஆதரவும் ஏற்பட்டு வருவதாகும். 17,21,27.30 தேதிகள் தரமானவை.

விருச்சிகம்:—செய் காரியங்கள் அனுகூலப்பட்டுவரும். கடிதப் போக்குவரத்தில் நன்மை உண்டாகும். உத்தியோகத்தில் சௌகரிய முண்டாதலும், வெளியூர் போய் வருதலும் ஏற்படும். குடும்ப செலவுகள் அதிகமாகும், அன்னியர் சகாயம் ஏற்பட்டு வரும் எதிர்பார்த்த காரியர்கள் அனுகூலமாகும். தன நடப்பில் சௌகரியம் ஏற்பட்டு வரும், பந்து வகையில் கிலேசமும் ஏற்பட்டு அடங்கும். முக்கிஸ்தர்களின் சந்திப்பு உண்டாகும், புண்ணிய வகையாலும், தெய்வ காரியங்களிலும் செலவுகள் ஏற்படும், வெளியூரிலிருந்து நற்சேதி கேள்விப்படும் படியாகும். இப்படியாக நடப்பதாகும். 18,22,27,28 தேதிகள் சாரமானவை.

தனுசு:—புதிய நபருடன் சேர்க்கை ஏற்படும். அன்னியர் உதவி மூலம் தொழில் விருத்தி உண்டாகும். குடும்ப நடப்பில் நன்மை உண்டாகும், சிலரிடம் பகை ஏற்பட்டு நீங்கும் பெரிய மனுஷ்யர்களின் சந்திப்பு உண்டாகும். வீண் வகையில் விரயம் உண்டாகும். சில பொருள் வாங்குவதன் மூலம் செலவுகள் உண்டாகும். வெளியூர் யாத்திரை போய் வரும்படியாகும். செய் தொழில் தவக்கப்பட்டுகூடும். உத்தியோகத்தில் அனுகூல மாற்றம் ஏற்படும். தன நடப்பில் பிறர் சகாயதை எதிர்பார்க்கும்படி யாகும், வியாபாரத்தில் முன்னேற்றத்திற்கான அறிகுறிகளும் ஏற்படுவதாகும். 17,19,22,27,30 தேதிகள் முக்கியமானவை.

மகரம்:—புதிய சினேகிதரால் சகாயமும், வருமானத்திற்குரிய நன்மையும் உண்டாகும். செய் காரியங்களில் அனுகூலம் ஏற்பட்டு வரும். முக்கியஸ்தர்களின் சந்திப்பு உண்டாகும். உத்தியோகத்தில் அனுகூல மாற்றம் ஏற்படும். வெளியிடம் போவதற்குரிய அல்லது மாறுவதற்குரிய சிந்தனைகள் உண்டாகும். சில பொருள் விற்கும்படியாதல் அல்லது மாற்றிக் கொள்ள நேருதல் இப்படியாக நடக்கும். கொடுக்கல் வகையில் நிர்ப்பந்தம் குறைந்துவரும். புதிய சில ஏற்பாடுகளில் கலந்து கொள்ளும்படியாகும். இப்படியாக நடக்கும் 18,21,23.28 தேதிகள் ஏற்றவை.

கும்பம்:—வெளியூர் போய் வருவதன் மூலம் சில அனுகூலங்கள் ஏற்படும். பிரயத்தன காரியங்கள் கைகூடிவரும். அலைச்சல் காரியங்களில் ஈடுபடும்படியாகும், பழைய நடப்புகளில் சில கவலை உண்டாகும். புண்ணிய காரியங்களில் ஈடுபட நேருவதும் செலவுகளும் ஏற்படும். பெரிய மனுஷ்யர்கள் நேசமும் ஆதரவும் ஏற்படும் தனநடப்பில் சௌகரியமுண்டாதலும், செய் தொழில் விருத்திக்குரிய அம்சங்கள் ஏற்பட்டு வருவதும், பந்துக்கள் மூலம் சிறிது கவலை ஏற்பட்டு நீங்குவதும், செலவுகள் அதிகமாவதும் இப்படியரக ஏற்பட்டுவருவதாகும். 17,21,23,28,30 தேதிகள் சிரேஷ்டமானவை.

மீனம்:—புதிய வகையில் முன்னேற்றமும் சில ஏற்பாடுகளும் உண்டாகும். அன்னியர் சகாயம் ஏற்படும். செலவுகள் அதிகரிக்கும் இருப்பிடம் மாறும்படியான சிந்தனைகளும், வெளியூர் போய் வருதலும் ஏற்படும். சிலரை நம்பி ஏமாறும்படியாகும். தன நடப்பில் கவலை ஏற்படும். வர வேண்டியவை தடையாகும். பந்து ஜனவகையில் கிலேசம் ஏற்படும். சினேகிதரால் நன்மை உண்டாகும். பிறர் உதவியை எதிர்பார்க்கும்படி யாகும் வியாபார நடப்பில் மந்த வருமானம் ஏற்பட்டு வரும் உத்தியோகத்தில் மாற்றமும் ஏற்படுவதாகும். 18,23,27,30 தேதிகள் தகுமானவை.

---

## மேலட்டைச் சித்திரம்

"விளையாட்டுத் தோழி" என்ற சிறுகதையில் வரும் நிகழ்ச்சியொன்று இவ்விதழ் மேலட்டைச் சித்திரமாகத் திகழ்கிறது.

---

இந்திய அரசியல்:—புதிய வகை ஏற்பாடுகளில் சிரத்தை அதிகரிக்கும். அனுகூலத்திற்குரிய பிரசாரங்கள் நடந்து வரும். சில இடங்களில் கலகப்பெருக்கு ஏற்பட்டு கவலைக் கிடமாகும். துர்சக்திகள் மீண்டும் தலை தூக்கி வருவதாகும்.

### அதிர்ஷ்ட தினங்கள்

| | | |
|---|---|---|
| வர்த்தகம்:— | 16-20-22கா-25-27மா | வ. |
| கடிதங்கள்:— | 18-21-25கா-26மா | ,, |
| காவியஞ் செய்ய:— | 19-22-26கா-27மா | ,, |
| ஓவியந் தீட்ட:— | 16-19-22கா-25மா | ,, |
| விவசாயம்:— | 18-20-22கா-24மா | ,, |
| பயிற்சிகள்:— | 19-21-25கா-27மா | ,, |
| ஆராய்ச்சிகள்:— | 16-18-20கா-26மா | ,, |
| இரஸாயனங்கள்:— | 18-20-22கா-25மா | ,, |
| மந்திரார்த்தங்கள்:— | 19-21-25கா-27மா | ,, |
| யந்திர முயற்சிகள்:— | 16-18-22கா-24மா | ,, |
| சந்திப்புகள்:— | 18-20-21கா-25மா | ,, |
| ஒப்பந்தங்கள்:— | 19-21-25கா-24மா | ,, |

சுப முகூர்த்தங்கள்:—19வ. வியாழக்கிழமை சுக்ல சஷ்டி-உத்திரட்டாதி காலை மணி $8\frac{3}{4}$க்குமேல் $9\frac{1}{4}$க்குள் கும்ப லக்னத்தில் விவாகம்.

20வ. வெள்ளிக்கிழமை சுக்ல ஸப்தமி ரேவதி காலை மணி 6-0க்குமேல் 8-0க்குள் மகர லக்னத்தில் விவாகம்.

28வ. புதன்கிழமை சுக்ல திரயோதசி, மிருகசிரிஷம் காலை மணி 6-0க்குமேல் $7\frac{1}{2}$க்குள் மகர லக்னத்தில் விவாகம்.

26வ. வியாழக்கிழமை, சுக்ல சதுர்த்தசி, புனர்பூசம் காலை மணி $8\frac{3}{4}$க்குமேல் $9\frac{1}{2}$க்குள் கும்ப லக்னத்தில் விவாகம்.

### உங்கள் சொந்தப் பலன்

அறிய நீங்கள் பிறந்த பொழுது சூரியன் நின்ற இராசியைக் கொண்டு பலனைக் கீழே காணுங்கள்.

மேஷம்:—புதியவகையில் முன்னேற்றத்திற்கான ஏற்பாடுகள் உண்டாகும், அன்னிய ஜன ஆதரவு ஏற்படும். வெளியூர் போய்வரும்படியாகும். பிறர் காரியங்களில் தலையிடுவதால் அனுகூலம் உண்டாகும். செய் காரியங்கள் தாமதப்பட்டு கூடிவரும். பெரிய மனுஷ்யர்கள் நேசம் ஏற்படும். இருப்பிடம் மாறுவதற்கான யோசனைகள் சிலருக்கு உண்டாகும். புண்ணிய காரியங்களில் செலவுகள் ஏற்படும். குடும்ப விஷயமாய் செலவுகள் அதிகமாகும். பந்துக்களிடமிருந்து சுபச்சங்கதிகள் கேள்விப்படும்படியாகும். தன நடப்பில் சில சௌகரியம் ஏற்படுவதாகும் 16,18,20,22,27 தேதிகள் சுத்தமானவை

ரிஷபம்:—உத்தியோகத்தில் மாற்றத்திற்கான ஏற்பாடுகள் உண்டாகும். அதிகாரியால் சில வருத்தம் ஏற்பட்டு நீங்கும். தன நடப்பில் சௌகரியக் குறைவு ஏற்படும். பிறர் உதவியை எதிர்பார்க்கும்படி யாகும். செய் தொழிலில் சோர்வு உண்டாகும். திருப்திக் குறைவான வருமானம் ஏற்பட்டுவரும். குடும்ப நடப்பில் சௌகரியம் ஏற்பட்டுவரும். புதிய முயற்சிகள் தடைப்பட்டுவரும். இரகசிய சத்துருக்கள் மூலமாய்க் கலகம் ஏற்பட்டுவரும். வெளியூரிலிருந்து சுபச்சங்கதி கேள்விப்படும்படி யாகும். சினேகிதரால் வருத்தம் ஏற்பட்டு நீங்கும். 18, 20,22,26 தேதிகள் சுபமானவை.

மிதுனம்:—பிறர் சகயத்தை எதிர்பார்ப்பதில் காரியத்தடை ஏற்படும். அந்தரங்கமான கவலைகளும் குடும்பத்தில் வருத்தமும் செலவு மிகுதியு ஏற்படும். வெளியூர் போவதற்கான ஏற்பாடுகள் உண்டாகும். வியாபாரத்தில் மந்தமும், வீண் வகையில் செலவுகளும் உண்டாகும். அன்னியர் உதவியை எதிர்பார்க்கும்படியாகும். கொடுக்கல் வகையில் நிர்ப்பந்தமுண்டாகும். தெய்வ காரியங்களில் செலவுகள் உண்டாகும். பந்துக்கள் மூலம் வருத்தம் ஏற்படும். சிலரை நம்பி ஏமாறும்படி யாகும். பிறர் காரியங்களில் தலையிடுவதால் வருத்தம் ஏற்படுவதாகும். 19,21,25,27 தேதிகள் சுகமானவை.

கடகம்:—ராஜாங்க மூல்யமான காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பிரயத்தன காரியங்கள் கைகூடிவரும். மேலோர் நேசம் ஏற்படும் இடம்மாறச் சிந்தனைகள் உண்டாகும். பெரிய மனுஷ்யர்கள் சகாயம் ஏற்படும். உத்தியோக விஷயத்தில் நன்மையும், அதிகாரி ஆதரவு ஏற்படுதலும் உண்டாகும். வியாபார வகையில் அனுகூலமான முன்னேற்றமும் சினேக ஆதரவும் ஏற்படும். கொடுக்கல் வகை நிர்ப்பந்தம் குறையும். தன நடப்பில் சௌகரியம் உண்டாகும். சுப விஷயமான முயற்சிகள் உண்டாகும். சில பொருள் வாங்கும்படி யாகும். இப்படியாக நடப்பதற்குரிய காலமாகும். 20,22,25,26 தேதிகள் தரமானவை.

சிம்மம்:— செய்தொழில் அனுகூலப்பட்டு வரினும் செலவுகள் அதிகமாகும். அலைச்சலும் சிரமமும் அதிகரிக்கும். எழுத்து மூல்யத்தில் நன்மை உண்டாகும். இதர வருமானம் குறைந்து காட்டும். வெளியூர் சேதி மூலம் நன்மை உண்டாகும். சினேக ஆதரவு ஏற்பட்டு 'வரும். வியாபார வகையில் முன்னேற்ற முண்டாதலும் ஆதாயம் ஏற்பட்டு வருவதும் உண்டாகும். வீண் வகையிலும் சில தர்மகாரியங்களிலும் செலவு செய்யும்படியாகும். பந்துக்கள் சிலரால் கவலை ஏற்பட்டுத் தணியும், தனநடப்பில் சிறிது சிரமம் ஏற்படும். அன்னியர் ஆதரவு ஏற்பட்டு வருவதாகும். 16,19,22,25 தேதிகள் சாரமானவை.

**கன்னி:**—பிரபலஸ்தர்களின் சந்திப்பும் ஆதரவும் ஏற்படும். தெய்வ காரியங்களில் ஈடுபடுவதும், செலவும் உண்டாகும். ஆரோக்ய ஸம்பந்தமாய் கவலையும் செலவு செய்ய நேருவதும், இரகசிய சத்துரு மூலம் கவலை உண்டாகும். தனநடப்பில் சௌகரியம் ஏற்பட்டு வரும், மேலோர் நேசம் ஏற்படும் குடும்பச் செலவுகள் அதிகமாய் வரும். சில பொருள் வாங்க நேரும். பந்துக்களால் கிறிது கவலை உண்டாகும். வெளியூர் போகும் சிந்தனைகளும், புண்ணிய காரியங்களில் செலவும் ஏற்படும். நல்லோர் நேசமும் ஏற்படுவதாகும். 18,20, 22,25,26 தேதிகள் மேலானவை.

**துலாம்:**—பிறர் சகாயத்தின் பேரில் வியாபாரம் முன்னேறி வருவதுடன் ஆதாயமும் ஏற்பட்டு வரும். இருப்பிடம் மாறும்படியாகும். சில பொருள் வாங்க நேருவதன் மூலம் செலவு உண்டாகும். செய்காரியங்களில் சோர்வு ஏற்பட்டு நீங்கும். பிறர் சகாயம் ஏற்பட்டு வரும். வியாபாரத்தில் வருமானம் மந்தப்படுவதுபோல் காட்டி பின் கூடி வரும். நல்லசேதி கேள்விப்படும்படி யாகும். சுபமுயற்சிகள் கைகூடி வரும். கொடுக்கல் வகை நிர்ப்பந்தம் நீங்கி வரும். குடும்பச் செலவுகள் அதிகரித்து வருவதாகும். 16,19, 21,25,27 தேதிகள் மேன்மையானவை.

**விருச்சிகம்:**— உத்தியோகத்தில் சில மாற்றங்கள் உண்டாகும். புதிய முயற்சிகள் கைகூடி வரும். ஆரோக்ய ஸம்பந்தமாய் செலவுகளும், சிலருடைய பகையும் ஏற்படும். குடும்ப நடப்பில் சிரமம் ஏற்பட்டு நீங்கும். பிறர் காரியங்களில் தலையிடுவதன் மூலம் வருத்தம் உண்டாகும். அன்னியர் உதவியை எதிர்பார்க்கும்படி யாகும். வியாபார நடப்பில் சம வருமானமும், திருப்திக் குறைவும் ஏற்பட்டு வரும். கொடுக்கல் வகையில் சில நிர்ப்பந்தங்கள் உண்டாகும். எழுத்து மூல்யத்தில் நன்மையும், அதிகாரி ஆதரவும், ஏற்படுவதாகும். 19,21,25,27 தேதிகள் நலமானவை.

**தனுசு:**—புதிய நபருடன் சிநேகம் ஏற்படுவதும், பழைய நடப்புகள் மூலம் சில வருத்தம் ஏற்பட்டுப் பின் அனுகூல மாவதும், வெளியூர் போய்வர நேருவதும் குடும்ப சௌக்கியம் ஏற்பட்டு வருவ்தும் உண்டாகும். வியாபாரத்தில் நூதன ஏற்பாடுகள் கைகூடி வரும். அன்னியர் சகாயம் உண்டாகும். சுப சங்கதிகள் கேள்விப்படும்படி யாகும். புதியச் பந்து சேர்க்கை உண்டாகும். ஆரோக்ய ஸம்பந்தமாய்ச் சிறிது செலவுகள் ஏற்படுவதுடன் புண்ணிய காரியங்களிலும் செலவுகள் உண்டாகும். தனநடப்பில் சிறுகச் சிறுக சௌகரியம் ஏற்பட்டு வருவதாகும். 20,22, 25,26 தேதிகள் நன்மையானவை.

**மகரம்;**—செய்தொழிலில் நூதன ஏ
பாடுகளும் சிநேக ஆதரவும், புதிய சிந்தனை
களும் உண்டாகும். பழைய நடப்புகளில் சில விரோதமும், மனதிற்குத் தாபமும், வீண் செலவுகளும் உண்டாகும். குடும்பத்தில் வைத்திய வகைச் செலவுகளும் கிலேசமும் ஏற்பட்டு வரும். சிலரை நம்பி ஏமாறும்படியாகும். பிறர் ஆதரவு ஏற்பட்டு வருவதாகும். தன நடப்பில் சௌகரியக் குறைவு ஏற்பட்டு நிவர்த்தி யாவதும். வெளியூர் போய்வர நேருவதும், எதிர்பார்த்தவை தடைப்பட்டு கூடி வருவதும் உண்டாகும். சில பொருள் விற்கவும் இடம் மாற சிந்தனைகளும் ஏற்படும் இப்படியாக நடப்பதாகும். 16,18,20,22,26 தேதிகள் ஏற்றவானவை.

**கும்பம்:**—வெளியூர் பிரயாயண மூலம் நன்மையும், பெரிய மனுஷ்யர்கள் நேசமும் ஏற்படும். தெய்வ காரியங்களில் செலவுகள் உண்டாகும். முயற்சிகள் கைகூடிவரும். வியாபாரத்தில் சமவருமானம் ஏற்பட்டுவரு
தர்ம காரியங்களில் நாட்ட முண்டாகு
உத்தியோகத்தில் அதிகாரியால் நன்மையு
சௌகரியமும் ஏற்பட்டுவரும். பழைய சில
சிக்கல்கள் அனுகூலப்பட்டுவரும். தன நடப்பில் சௌகரியம் ஏற்பட்டுவரும். பிரபலஸ்தர்களின் சந்திப்பும், சுப சங்கதிகள் கேள்விப்படுவதும் உண்டாகும். 18.19,21,25,27 தேதிகள் குணமானவை.

**மீனம்:**—இருப்பிடம் மாறும்படியாதல் அல்லது வெளியூர் பிரயாணப் போய்வர நேரும். சிலருடன் பகை ஏற்பட்டு நீங்கும். குடும்பச் செலவுகள் அதிகரித்து வருவதாகும். புதிய ஏற்பாடுகளில் தடை ஏற்பட்டுவரும். பிறர் சகாய மூலம் சௌகரியம் ஏற்படும். குடும்ப விஷயமான கவலைகள் உண்டாகும். உத்தியோக மாற்றமும், தன நடப்பில் சிறிது சௌகரியம் ஏற்பட்டு வருவதும், புண்ணிய காரியங்களில் செலவுகள் உண்டாவதும், ஏற்பட்டுப் பந்துக்கள் சிலருடன் மனஸ்தாபம் ஏற்பட்டு நீங்கும். பிறர் சகாயத்தை எதிர்பார்க்கும்படியாகவும் ஏற்படுவதாகும். 16,20, 25,27 தேதிகள் முக்கியமானவை.

## மேலட்டைச் சித்திரம்

“வீழ்ந்த தாரகை” என்ற சிறு தொடர் கதையில் வரும் நிகழ்ச்சி யொன்று இவ்விதழ் மேலட்டைச் சித்திரமாகத் திகழ்கிறது.

167434




மலையாள அஷ்டாங்க ஆயுர்வேத முறைப்படி தயார் செய்தது

## மேகரோக நிவாரணி!

# "எலிக்ஸிரைன்"

புத்தியம் கிடையாது! ருசிகாமானது.

இரத்த சுத்திக்கும் இரத்த விருத்திக்கும், தசை விருத்திக்கும், தாது பலத்திற்கும் இது ஒரு அமிர்த சஞ்சீவியாகும். நாள்பட்ட வெள்ளை, வெட்டை, மேக வியாதி, துர்நீர், மூலச்சூடு, நரம்புத் தளர்ச்சி, வீரியக் குறைவு, லிங்கப் புண், லிங்கப் புற்று, மேகப் படைகள், உடம்பு ஊரல், அஜீரணம், மலச்சிக்கல், கைகால் நோவு, மயக்கம், இடுப்பு வலி, மூத்திர நோய் மூத்திரத்துடன் இந்திரியம் நீத்துப் போகுதல் முதலிய எல்லாவிதமான மேக வியாதிகளைப் போக்கி, இந்திரியத்தை இறுகச் செய்து மனோஉற்சாகம் மேனிப்பிரகாசம், குழி விழுந்த கண்களையும் ஒட்டி உலர்ந்துபோன கன்னங்களையும் வசீகரமாக்கி, புத்துயிர் அளித்து யௌவனத்தைத் தரும். ஆண் பெண் யாவரும் சாப்பிடலாம்.

20-நாள் மருந்து 40-வேளைக்கு (பூரண குணத்துக்குப் போதுமானது) விலை ரூபா 2-4-0.

## காசா

காசம், இருமல், க்ஷயம் முதலிய வியாதிகளுக்கு தலை சிறந்த ஔடதமாகும் (இம்மருந்து மலையாள அஷ்டாங்க முறைப்படித் தயார் செய்தது.) இருமல் காசம், இளைப்பு, ஈளை, கபம், குரலடைப்பு, தொண்டைக் கம்மல், தொண்டை வலி, மார்தடிப்பு, மார்பிலும், தொண்டையிலும், சுவாச நாடிகளிலும், குழாய்களிலும் ஏற்படும் ரணங்களை ஆற்றி, இருமலைத் தணியச்செய்து கபத்தை அறவே ஒழித்து குணப்படுத்தும்.

30-நாள் 60-வேளை மருந்து விலை ரூபா 2—8—0.

## குன்மக் குடாரி

(ஸ்டமக் பவுடர் ஆபரேஷன் தேவையில்லை)

சகலவித வயிற்று வலியையும் Appendicitis என்னும் வயிற்றில் உண்டாகும் வியாதியையும், புண்களையும், வயிற்றை ஆபரேஷன் செய்யாமல் இம் மருந்து உத்தரவாதத்துடன் குணப்படுத்தும். இம் மருந்து மலையாள அஷ்டாங்க முறைப்படி தயார் செய்தது. (அல்சர்), அஜீரணம், மலபந்தம், குடலிரைச்சல், புளியேப்பம், வயிற்றுக் குத்தல், குடல் புண், ரணம், சதை வளர்தல், குலைக்கட்டி, ஈரலில் சதை வளருதல், குன்மம், சாப்பிடும் முன்னும் பின்னும் வயிற்றில் உண்டாகும் வலி இன்னும் பலவிதமான வியாதிகளையும் குணப்படுத்தும்.

30-நாள் 60-வேளை மருந்து விலை ரூபா 2—8—0.

## ஸ்டீல் டிராப்ஸ் (STEEL DROPS)

பித்த ரோகம் **40**-க்கும் பாண்டு ரோகத்திற்கும் முதன்மை பெற்றது

இம் மருந்து உடலுக்கு வேண்டிய கொழுப்புச்சத்தும் உலோகச்சத்தும் சேர்த்து செய்யப்பட்டது, குணத்தில் சிறந்தது. முற்றிலும் உண்மையானது. தீரும் வியாதிகள்:—ரத்தக்ஷீண ரோகம், அல்லது பாண்டு ரோகம், மறதி, ஞாபகக் குறைவு, கைகால் எரிச்சல், தலை சுற்றல், உடம்பு சுடுதல், மயக்கம், கிறுகிறுத்தல், புளியேப்பம், புளித்த தண்ணீர் வாயாலெடுத்தல், உடல் பெருத்தல், வயிறு உப்பிசம், பொருமல், வாயில் நீர் சுரத்தல், வாய்க் கசப்பு, மூத்திர நீர் மஞ்சளாக இருத்தல், கண் மஞ்சளாகுதல், நகம் மஞ்சளாகுதல், மஞ்சட் காமாலை, அன்னத்துவேஷம், தேகம் வெளுத்து இளைத்துப் போகுதல், உதடு - நாக்கு - ஈறு முதலியவைகள் வெளுத்திருத்தல், மார் துடிப்பு, நரம்புத் தளர்ச்சி, தேகத் தளர்ச்சி, பெருமூச்சு விடுதல், ரத்த விருத்தி, திரேகத்தில் ரத்தமின்றி குன்றியிருத்தல், வயிற்றுக் குத்தல், வீக்கம், விக்கல், எப்போதும் சாப்பிட்டமாதிரி இருத்தல், ஆயாசம், உடல் நடுக்கம், சோர்வு, விரக்தி காணுதல், நித்திரா பங்கம், பெண்களுக்குக் காணும் சூதகப்பாண்டு, கண் மங்கல், பித்த வெடிப்பு, பித்த ஜுரம், மலச்சிக்கல், உஷ்ணம், வாய்ப் புண், நெஞ்சுப் புண், பாண்டு எனப்படும் 40 வித பித்த ரோகங்களையும் போக்கும். ரத்த சுத்தி, திரேக பலம், ஹ்ருதய பலம், யௌவனம் முதலியவைகளைக் கொடுக்கும் சக்தி வாய்ந்தது.

20 நாள் 40 வேளை மருந்து விலை ரூபா 2—8—0. (தபால் செலவு தனி)

---

**தனலட்சுமி கம்பெனி, 6 லாயர் சின்னதம்பி முதலி தெரு,**

**கிருஷ்ணப்ப நாயக்கன் குளத்திற்குச் சமீபம், கொண்டித்தோப்பு சென்னை 1.**

Regd. No. M. 2891. 15th DECEMBER 19

Registered as a News Paper in Ceylon





இந்த அபூர்வ மருந்தானது அநேக கொடிய வியாதிகளை ஆச்சரியமாகக் கண்டிக்கக் கூடியது. வியாதியினாலாவது வேறு எந்தக் காரணத்தினாலாவது இளைத்துப் போயிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பல விருத்தி தருவதில் இது நிகரற்ற மருந்தாகும். சாப்பிடுவதற்கு மிக இன்பமாயிருக்கும். இருமல் நோய் கண்டு அவஸ்தைப்படுபவர்கள் இதை உட்கொண்டால் இரண்டே வேளையில் ஆச்சரியமான சுகத்தை யடைவார்கள்.

இந்தச் சஞ்சவியை நல்ல போஜனத்துடன் 15 நாள் சாப்பிட்டால் இது இணையில்லாத ஆனந்தத்தைத் தரும். மனிதர் தாம் இழந்துபோன தேக திடத்தைப் பழையபடி யடைதற்கு இதைவிட வேறு மருந்தே கிடையாது. ஒருவன் 40 நாள் மருந்தை உட்கொள்ளும் பக்ஷத்தில் அவனுடைய தேகம் வஜ்ஜிரமே யாம். இதற்கு யாதொரு பத்தியமும் கிடையாது.

20-நாள் மருந்து விலை ரூபா 1.

40-நாள் மருந்து விலை ரூபா 1-12-0.

போஸ்டேஜ் வேறு.

## அயத்தங்கத் திராவகம்

லட்சுமி கம்பெனி, ௬. லாயர் சின்னதம்பி முதலி தெரு, சென்னை.

Edited, Printed and Published by N. MUNISWAMI MUDALIAR, at the "ANANDA BODHINI PRESS", No. 6, Lawyer Chinnathambi Mudali Street. Sowcarpet, Madras-1.